# வருடாந்த அறிக்கை 2021

## இலங்கை தேயிலை சபை

அஞ்சல் முகவரி : இலங்கை தேயிலை சபை, 574, காலி வீதி, கொழும்பு 03, இலங்கை.
தொலைபேசி : +94-11-2587814/2582121/2583687
தொலைநகல் : +94 112587341/2589132
ஈ மெயில் : teaboard@pureceylontea.com
இணையத்தளம் : www.srilankateaboard.lk
www.pureceylontea.com

# பொருளடக்கம்


தூரநோக்கு மற்றும் குறுநோக்கு - 03

இலங்கை தேயிலை சபையின் உறுப்பினர்கள்- 04

கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் கண்காணிப்பாளர்கள் - 05

சிரேஷ்ட நிர்வாக அலுவலகர்கள் - 05

ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் குழுவின் உறுப்பினர்கள் - 06

தலைவரின் செய்தி - 07

முக்கிய சிறப்பம்சங்கள் - 09

பெருநிறுவனப் பின்னணி - 10

கட்டமைப்புக்கள் மற்றும் செயற்பாடுகள் - 11

- தேயிலை ஆணையாளரின் பிரிவு - 12
- தேயிலை ஏற்றுமதிப்பிரிவு - 21
- தேயிலை ஊக்குவித்தல் பிரிவு - 24
- தேயிலை சுவைத்தல் பிரிவு - 41
- பகுப்பாய்வு ஆய்வுகூடம் - 43
- நிர்வாகப்பிரிவு - 46
- உள்ளக கணக்காய்வுப் பிரிவு - 47
- தகவல் தொழில்நுட்பப் பிரிவு - 40

தொழிற்துறையின் சுயவிபரம்- 48

நிதி மீளாய்வு - 66

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை - 100

இலங்கை தேயிலை சபையின் அலுவலகங்கள் - 112

## தூரநோக்கு

உலகச் சந்தையில் சிலோன் தேயிலையினை "மிகவும் விரும்பத்தக்க பானமாக" நிலைநிறுத்துவதாகும்

## குறுநோக்கு

நிலையான அபிவிருத்தியினூடாக, நாட்டில் வெளிநாட்டு அந்நிய செலவாணிப் பரிமாற்றத்தினை அதிகரித்தல் மற்றும் அதனூடாக தோட்டத்தொழிற் சமூகத்தின் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்வதாகும்.

# இலங்கை தேயிலை சபையின் உறுப்பினர்கள் - 2021

## தலைவர்

திரு. ஜயம்பதி மொல்லிகொட

இலங்கை தேயிலை சபை எம்பிஜ

## உறுப்பினர்கள்

திருமதி. டபிள்யூ. எம்.டி.ரி. விக்கிரமசிங்க
*ஜூன் 2021இல் இருந்து,*
திரு. ஹர்ஷ இழுப்பிட்டிய
*ஜூன் 2021இல் இருந்து*
வர்த்தக அமைச்சு

திரு. லலித் ஒபேசேகர
கொழும்பு தரகர்களின் சங்கம்

திரு. ஜயந்த கருணாரத்னe
இலங்கை தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்களின் சங்கம்

திரு. கே.எல்.குணரத்தன
தேயிலை ஏற்றுமதியாளர்களின் சங்கம்

திரு. டபிள்யூ. எச்.எஸ். சமரசேன
தேயிலை சிறுதொழில் அபிவிருத்தி அதிகாரசபை

மஹிந்த விதானப்பத்திரன
*ஜனவரி 2021தொடக்கம் ஜூன் 2021வரைக்கும்*
துஷார பிரியதர்ஷன
*ஜூலை 2021இருந்து*
நிதி அமைச்சு

திரு. டீ. ஜீவநாதன்
சிலோன் தோட்டத்தொழிலாளர்கள் சங்கம்

திரு. சமந்த தொடன்வெல
*மார்ச் 2021வரைக்கும்*
திரு. கிஷாந்த டி மெல்
*ஜூன் 2021இல் இருந்து,*
கொழும்பு தேயிலை வர்த்தகர்களின் சங்கம்

திரு. சமிந்த விக்கிரமசிங்க
*செப்டம்பர் 2021வரைக்கும்*
திரு. லயனல் ஹேரத்
*திரு. லயனல் ஹேரத்*
இலங்கை தேயிலை சிறுதொழில் அபிவிருத்தி சமூகங்களின் கூட்டமைப்பு

திரு. சஞ்ஜய ஹேரத்
அமைச்சர்களின் பிரதிநிதி

திரு. ஜே.டீ.ஜி. சேனநாயக்க
*ஒக்டோபர் 2021இல் இருந்து*
திருமதி. கே. ஏ. டபிள்யூ. பெர்னாண்டோ
*நொவம்பர் 2021இல் இருந்து*
வர்த்தக அமைச்சு

## கண்காணிப்பாளர்கள்

அணில் அல்விஸ்

# கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் கண்காணிப்பளர்கள் - 2021

## தலைவர்

திருமதி. டபிள்யூ. எம். டீ. ரி. விக்கிரமசிங்க
மேலதிக செயலாளர் (அபிவிருத்தி), தோட்டத்தொழிற்துறை அமைச்சு
*ஜனவரி 2021 தொடக்கம் ஒக்டோபர் 2021வரை*

திருமதி. கே. ஏ. டபிள்யூ. பெர்னாண்டோ
பணிப்பாளர், பொதுநிதித் திணைக்களம், நிதி அமைச்சு
*நொவம்பர் 2021 தொடக்கம் திசம்பர் 2021 வரை*

## உறுப்பினர்கள்

திரு. டீ. ஜீவநாதன்
**மேலதிக செயலாளர்**, வர்த்தக அமைச்சு

திரு. ஜயந்த கருணாரத்ன
**தலைவர்**, கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் சங்கம்
*நொவம்பர் 2021 திசம்பர் 2021 வரை*

திரு. சமிந்த விக்கிரமசிங்க
**தலைவர்**, இலங்கை தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கம்
*ஜனவரி 2021ஒக்டோபர் 2021வரை*

திரு. ஹர்ஷ இழுப்பிட்டிய
**மேலதிக செயலாளர் (அபிவிருத்தி)**,
தோட்டத்தொழிற்துறை அமைச்சு
*நொவம்பர் 2021திசம்பர் 2021 வரை*

## கண்காணிப்பாளர்கள்

திரு. கே.ஏ.சி. சமந்த
**பிரதம உள்ளக கணக்காய்வாளர்,**
தோட்டத்தொழிற்துறை அமைச்சு

திருமதி.எஸ். டீ. கட்டுவால
*ஜனவரி 2021 ஒக்டோபர் 2021 வரை*
*திருமதி. எச்.ஏ. டீ. சந்தானி*
*நொவம்பர் 2021திசம்பர் 2021வரை*
**கணக்காய்வாளர்களின் மேற்பார்வையாளர்**, தேசிய கணக்காய்வு அலுவலகம்

## கன்வீனர்

திரு. எஸ்.ஏ. சிறிவர்த்தன
பணிப்பாளர் நாயகம், இலங்கை தேயிலை சபை எம்பிஜ

# கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்கள் - 2021

திரு. எஸ்.ஏ. சிறிவர்த்தன
**பணிப்பாளர் நாயகம்**

திருமதி. பவித்திரி பீரிஸ்
**பணிப்பாளர் (ஊக்குவித்தல்)**

கலாநிதி. கே.ஆர்.டபிள்யூ. அபேவிக்கிரம
பதில். பணிப்பாளர் (பகுப்பாய்வு சேவைகள்)

**திரு.குலுனு ரணசிங்க**
**உள்ளக கணக்காய்வாளர்**

திரு. ஈ.ஏ.ஜே.கே. எதிரிசிங்க
**தேயிலை ஆணையாளர்**

திரு. கிராஸ் ஜெயங்க
**பணிப்பாளர் (நிதி)**

திரு.எஸ்.ஜ.சி. பெரேரா
**உதவிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்)**

# ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் குழுவின் உறுப்பினர்கள் - 2021

## தலைவர்

திரு. ஜெயம்பதி மொல்லிகொட

**இலங்கை தேயிலை சபை**

## உறுப்பினர்கள்

**திரு. ஹர்ஷ இழுக்பிட்டிய**
**மேலதிக செயலாளர் (அபிவிருத்தி),** தோட்டத்தொழிற்துறை அமைச்சு

**திருமதி. பவித்திரி பீரிஸ்**
**பணிப்பாளர் (ஊக்குவித்தல்),** இலங்கை தேயிலை சபை

**திரு. சஞ்ஜய ஹேரத்**
**தலைவர்,** தேயிலை ஏற்றுமதியாளர்களின் சங்கம்

**திரு. முபாதல் ஜெபர்ஜி**
**உறுப்பினர்,** தேயிலை ஏற்றுமதியாளர்களின் சங்கம்

**திரு. சுரங்க ஹேரத்**
**பிரதம நிறைவேற்று அதிகாரி,** அமசொன் வர்த்தக தனியார் நிறுவனம்

**திரு. அனுர சிறிவர்த்தன**
**பணிப்பாளர் நாயகம்,** இலங்கை தேயிலை சபை

**திரு. ஜயந்த கருணாரத்ன**
**தலைவர்,** கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் சங்கம்

**திரு. தாயிப் அக்பரலி**
**பணிப்பாளர்,** அக்பர் பிரதர்ஸ்

**திரு. தில்ஹான் சீ. பெர்னாண்டோ**
**பிரதம நிறைவேற்று அதிகாரி,** MJF குழுமம்

**திரு. விஸ் கோவிந்தசாமி**
**முகாமைத்துவ பணிப்பாளர்,** சன்சயின் ஹோல்டிங் தனியார் நிறுவனம்

## கண்காணிப்பாளர்

திரு. அணில் கூக்

ஏசியா சியாக்கா கொமோடிட்டிஸ் தனியார் நிறுவனம்

# தலைவரின் செய்தி

"இலங்கை தேயிலைத் தொழிற்துறையானது நிறைவுற்ற 2021ஆம் ஆண்டியில், பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் மிகச் சிறப்பானதொரு செயல்திறனை பதிவுசெய்துள்ளது."



## ஏற்றுமதிகள், விற்பனை வருமானம் மற்றும் தேயிலை உற்பத்தி

கடந்த 2021 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் திசம்பர் வரையான காலப்பகுதியில், மொத்த தேயிலை ஏற்றுமதி வருமானம் ரூபா 264 பில்லியன்களாகும் (1,320 மில்லியன் அமெரிக்க டொலர்கள்). மொத்த தேயிலை ஏற்றுமதிஅளவானது 266 மில்லியன் கிலோகிராம்களாகும். கடந்த 2020 ஆம் ஆண்டு, மொத்த தேயிலை ஏற்றுமதி வருமானமானது 231 பில்லியன்களாக அமைந்ததுடன் (1,213 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) தேயிலை ஏற்றுமதி அளவானது 266 மில்லியன் கிலோகிராம்களாகவும் அமைந்திருந்தது. கடந்த ஆம் ஆண்டு, ரூபா ஆகக் காணப்பட்ட கிலோவுக்கான fob சுங்க விலையானது, கிலோவொன்றுக்கு ரூபா 921 ஆக அதிகரித்ததுடன், இது 2019 இல் கிலோவொன்றுக்கு ரூபா 823 ஆக அமைந்திருந்தது. கொழும்பு ஏலவிற்பனை மட்டங்களில், மொத்த விற்பனை வருமானம் கடந்த 2020 ஆம் ஆண்டுடன் (ரூபா 169 மில்லியன்) ஒப்பிடுகையில் இவ்வருடம் ரூபா 182 மில்லியன்களாக அமைந்தது. மேலும், கடந்த 2020 ஆம் ஆண்டு கிலோ ஒன்றுக்கான சராசரி விற்பனை விலை ரூபா 627 ஆக அமைந்திருந்ததுடன், நிறைவுற்ற வருடம் ரூபா 616 ஆக அமைந்திருந்தது. நிறைவுற்ற வருடத்திலான மொத்த தேயிலை உற்பத்தி 299.5 மில்லியன் கிலோகிராம்களாக அமைந்திருந்ததுடன், இது கடந்த 2020 ஆம் ஆண்டு 279 மில்லியன் கிலோகிராம்களாகக் காணப்பட்டது.

இலங்கை தேயிலை எஸ்டேட்டுகளின் உற்பத்தியானது காலத்துடன் குறைவடைந்துகொண்டு செல்வது பிரதனமானதொரு பிரச்சனையாகும். கடந்த 2000 ஆம் ஆண்டு 305 மில்லியன் கிலோகிரமாக அமைந்திருந்த தேயிலை உற்பத்தியானது, கடந்த 2010 ஆம் ஆண்டு 328 மில்லியன் கிலோகிராம்களாக அதிகரித்தது. அதியுயர் தேயிலை உற்பத்தி கடந்த 2013 ஆம் ஆண்டு பதியப்பட்டதுடன், இது 340 மில்லியன் கிலோகிராம்களாகும். பிந்திய காலப்பகுதியில் தேயிலை உற்பத்தி படிப்படியாகக் குறைவடைந்ததுடன், CAGR உடன் ஒப்பிடுகையில் 2.6% வீழ்ச்சியாக அமைந்தது. குறைவான உற்பத்தி, காணி மற்றும் தொழிலாளர்கள், அதிக செலவுகள், காலநிலையில் பாதகமான தாக்கங்கள் மற்றும் கோவிட் 19 தொற்று நிலைமைகள் போன்ற பல்வேறு காரணங்களினால் தேயிலை உற்பத்தியாளர்களின் உற்பத்திச்செலவானது அதிகரித்தது.

இரசாயன உரங்களின் விலை அதிகரிப்புக்களுடன், சமநிலையான கனிப்பொருள் முகாமைத்துவக் கொள்கையுடன், மண்ணின் தரத்தினை மீளமைப்பதை மூலோபாயமாகக்கொண்டு அதிக கவனத்துடன் தொழிற்படவேண்டியது அவசியமாகும். இலங்கை தேயிலைத் தொழிற்துறையில், முழு வழங்கல் கட்டமைப்பிலும், செலவு" மற்றும் நன்மைகளை அடையும் வகையில், கனிப்பொருள் முகாமைத்துவத்துக்காக கலப்பு இரசாயன, சேதன மற்றும் தாது மூலங்களுடனான கலப்பு உரத்திட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவது அவசியமாகும். இவற்றுக்கான அறிவுறுத்தல் வழிகாட்டல்களை வழங்குவதற்கான செயற்படிமுறைகளை உருவாக்குமாறு TRI யிடம் கேட்டுநிற்கின்றேன்.

## போட்டியாளர்களுக்கான ஆய்வுகள்

கடந்த பத்து வருடகாலத்தில், கென்னிய தேயிலை உற்பத்தி (இலங்கை தேயிலைக்கான பிரதான போட்டியாளர்) மிகவும் வலுவாக அதிகரித்துள்ள அதேவேளை, இலங்கை தேயிலை உற்பத்தியானது வெகுவாகக் குறைவடைந்துள்ளது. இந்நிலைமையானது, மீள்மரணடுகை மற்றும் உள்நிரப்புதலிலான குறைகள், காலநிலை மாற்றத்தினாலான விளைவுகளை முறையாக கையாளத்தவறியமை மற்றும் ஏனைய காரணிகள் மற்றும் உரப்பாவனை மட்டுமன்றி தொடர்ச்சியான மண்ணரிப்பு மற்றும் காணி தரமிழத்தல் போன்றவற்றினாலாகும்.

மறுபுறம், இலங்கையுடன் ஒப்பிடுகையில் அமெரிக்க டொலர்களில் கென்னிய தேயிலை ஏலவிற்பனை விலையானது குறைவாகும். இலங்கையில் கொழும்பு தேயிலை ஏலவிற்பனையில் கிலோகிராம் ஒன்றுக்கான சராசரி விலை 3.10 அமெரிக்க டொலர்களாக அமைகையில், இது கென்னியச் சந்தையில் 1.95 அமெரிக்க டொலர்களாக அமைந்திருந்ததுடன், கென்னிய தேயிலை வளர்ப்பாளர்களுடன் ஒப்பிடுகையில், சிறியளவில் உற்பத்திகளை மேற்கொள்பவர்கள் நியாயமான தேயிலை விலைகளைக் கொண்டுள்ளனர். இலங்கை தேயிலை வழங்கல் சங்கிலித் தொழிற்பாடானது, 1957 ஆம் ஆண்டு தேயிலை கட்டுப்பாட்டுச் சட்ட இல 51 இன் கீழ் ஒழுங்குபடுத்தப்படுகின்றது. சர்வதேச சந்தையில் - கிராமுக்கு கிராம், சிலோன் தேயிலையானது மிகவும் விலையுயர்ந்த பானமாக விளங்குகின்றது. இதன் விளைவாக, எமது தேயிலை ஏற்றுமதியாளர்கள் மற்றும் சந்தையாளர்களுக்கு சர்வதேச சந்தைகளில் பாரிய போட்டி நிலைமை நிலவுவதே, தேயிலை விலைக்கட்டமைப்பிலான சரிவுப்புள்ளியாகும். இலங்கை தேயிலை தொழிற்துறையின் ஒட்டுமொத்தமான செயற்திறன் திருப்திகரமான மட்டத்தில் அமைந்துள்ளது. எவ்வாறாயினும், சிலோன் தேயிலைக்கான விலையில் ஏதாவது அதிகரிப்புக்களை முன்னெடுப்பது மிகவும் சவாலான விடயமாகும். ஏனெனில், கொழும்பு ஏல விலைகளுடன் ஒப்பிடுகையில், கென்னிய மற்றும் இந்திய ஏல விலைகள் மிகவும் குறைவாகும்.

## ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் மூலோபாயம்

இலங்கை தேயிலைத் தொழிற்துறையானது வெறுமனே நாட்டுக்கு அந்நியசெலாவணியைப் பெற்றுத்தரும் ஏற்றுமதி வியாபாரமாக மாத்திரமல்லாமல், 2.5 மில்லியன் மக்களின் வாழ்வுக்காக வழியாகவும் அமைந்துள்ளது. நாங்கள் 480,000 சிறிய உற்பத்தியாளர்கள், தற்போதைய நிலையில் தொழிற்படும் 600 தேயிலைத் தொழிற்சாலைகள் மற்றும் B 2 B தேயிலை ஏற்றுமதியாளர்களுக்கு மேலதிகமாக, சிலோன் தேயிலை B 2 C ஐ ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தலில் அதிக கவனம் செலுத்தும் 280 தேயிலை ஏற்றுமதியாளர்களை ஊக்குவிப்பதனூடாக 135,000 எஸ்டேட் தொழிலாளர்களுக்கான போஷாக்குகளை வழங்குவதுடன், அவர்களைப் பாதுகாப்பதற்கும் கடமைப்பட்டுள்ளோம். மேலும், இலங்கைத் தேயிலையில் க்கும் அதிகமான பகுதி இருபது இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதுடன், இதில் ஈராக், துருக்கி, ரஷ்யா, ஐக்கிய அரபு இராட்சியம் மற்றும் சீனா ஆகியன பிரதான இறக்குமதி நாடுகளாகத் திகழ்கின்றன.

அனைத்து தொழிற்துறைப் பங்குதாரர்களின் பங்களிப்புடனான ஆதரவுடன் உருவாக்கப்பட்ட தீவிரமான சந்தைப்படுத்தல் மூலோபாயத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட "சிலோன் தேயிலை சர்வதேச பிரச்சாரத்தின்" கீழ் ஏற்கனவே அனுமதியளிக்கப்பட்ட விளம்பர செயற்பாடுகளினால், பெறுமதிசேர் தொடரின் முதல் மற்றும் கடைசிப்படிகள் தொடர்பில் இலங்கை அதிக கவனம் செலுத்துதல் அவசியமாகும்.சிலோன் தேயிலையின் நிலையான அடையாளப்படுத்துகைகள் மற்றும் சிலோன் தேநீரை அருந்துவதனால் ஏற்படும் சுகாதார நன்மைகள் போன்ற சிறப்பான வாழ்வுக்காரணிகளை அடிப்படையாகக்கொண்ட உற்பத்திகளை ஊக்குவிப்பதை குறிக்கோளாகக்கொண்டு, சிலோன் தேயிலைக்கான முதற்தர விலைகளை வழங்கும்வகையில், விளம்பரப் பிரச்சாரங்களினூடாக சர்வதேச நுகர்வோரைக் கவரமுடியும்.மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கமைய, ஏற்றுமதியாளர்கள் சிலோன் தேயிலையின் "தர விகிதப்பங்கினை" மூலதனமாக்கும் பொருட்டு, உற்பத்தியாளர்களிடையே தயாரிக்கப்பட்ட ஒரு கிலோகிராமுக்கான குறைப்பதற்காக அவதானிக்கப்படவேண்டிய பிரதானமானதொரு விடயமாக "ஒருங்கிணைந்த உற்பத்தி மற்றும் தர மூலோபாயம்" திகழ்கின்றது. இந்நிலையில், சுற்றாடல் மற்றும் பொருளாதார நிலையான தன்மையை அடைதல் மற்றும் தொழிலாளர்கள், சிறியளவிலான தேயிலை வர்த்தகர்கள் மற்றும் வளரப்பாளர்களின் சமூக நல்வாழ்வினை உறுதிப்படுத்தும் வகையில் அதிக அசேதன மற்றும் சேதன உள்ளீடுகளுடனான ஒருங்கிணைந்த சமநிலையான கனிப்பொருள் மேலாண்மைக் கொள்கையை உற்பத்தியாளர்கள் செயற்படுத்துவது மிகவும் அவசியாமனதாகும்.

தேயிலையின் தூய்மைத்தன்மை மற்றும் சிலோன் தேயிலையின் நல்வாழ்வுக்காரணிகள் உள்ளடங்களாக நீண்டுநிலைபெறும் அடையாளப்படுத்தக்கூடிய காரணிகளை விபரித்தல் மற்றும் அசேதன எச்சங்களின் அதிகுறைந்த அளவினைப் பேணுதனூடாக, சர்வதேச ரீதியில் தூய்மையான தேயிலையின் தரத்துக்குரிய கதை பாதுக்காக்கப்படுதல் வேண்டும். இப்பின்னணியில் தேயிலைப் பிரிவுக்கான பார்வை மாத்திரம் மீளாய்வுக்குட்படுத்தப்படும். சர்வதேச சந்தையில் "நிலையான உணவு" வகைகளின் கீழ் "சிலோன் தேநீரானது' அதியுயர் தரமான பானமாக நிலைநிறுத்தப்படுவதன் வெற்றியானது சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரப்படுத்தல் திறனின் தங்கியுள்ளது.

## முடிவு

தேயிலை பெறுமதிசேர் சங்கிலித்தொடரில் சர்வதேச ரீதியில் பெறுமதியான உறுப்பினர்களான, விவசாயிலிருந்து கொழுந்து பறிப்பாளர்கள் வரை, உற்பத்தியாளர்கள், தரகர்கள் மற்றும் அரச கட்டுப்பாட்டாளர்கள்/ அமைப்பாளர்களுடனான நேரடியான ஏற்றுமதியாளர்கள்/ வியாபாரக்குறியினை சந்தைப்படுத்துபவர்களுக்கான அங்கீகாரம் வழங்கப்படுதல் வழங்கப்படுதல் அவசியமாகும். இலங்கை தேயிலை சபையாகிய நாங்கள், அனைத்துப் பங்குதாரர்களினதும் அர்ப்பணிப்பு, உறுதிப்பாடு மற்றும் குறிப்பிட்ட மீளாய்வு வருடகாலத்திலான ஒப்பீட்டு செயல்திறன் வெற்றிகளுக்கு எங்களது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம். மிகவும் கடினமான மற்றும் சவால்மிக்க சூழலில் இதுவொரு சிறப்பான வெற்றியாகும். தோட்டத்தொழிற்துறை அமைச்சின் கௌரவ அமைச்சர், இராஜாங்க அமைச்சர் மற்றும் தோட்டத்தொழிற்துறை அமைச்சின் உத்தியோகத்தர்கள், மற்றும் ஏனைய அரச ஒழுங்கமைபாளர்களுக்கும் எமது பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். இறுதியாக, இலங்கை தேயிலை சபையின் பணிப்பாளர் வாரியத்தில் அங்கம்வகிக்கும் எனது சக உறுப்பினர்கள் மற்றும் இலங்கை தேயிலை சபையின் ஊழியர்களுக்கு எனது மனமாந்த வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. ஜெயம்பதி மல்லிகொட
தலைவர்

இலங்கை தேயிலை சபை

# பிரதான சிறப்பம்சங்கள்

| வகை | அலகு | 2019 | 2020 | 2021 | மாற்றங்கள் (%) 2020 Vs 2021 |
|---|---|---|---|---|---|
| **தேயிலை உற்பத்தி** | | | | | |
| மொத்த தேயிலை உற்பத்தி | மில்லியன் கி.கிராம் | 300.12 | 278.85 | 299.49 | 7.40 |
| உயரத்தின் வகைப்படுத்தல் | | | | | |
| உயர் | மில்லியன் கி.கிராம் | 63.05 | 62.24 | 65.33 | 4.95 |
| நடுத்தரம் | மில்லியன் கி.கிராம் | 47.17 | 46.73 | 50.99 | 9.10 |
| தாழ்நிலை | மில்லியன் கி.கிராம் | 189.90 | 169.88 | 183.18 | 7.83 |
| செயலாக்க முறையினால் வகைப்படுத்தல் | | | | | |
| பழைமைவாத (உயிரியல் உள்ளடங்கலாக) | மில்லியன் கி.கிராம் | 273.89 | 252.72 | 270.72 | 7.12 |
| சிதிசி | மில்லியன் கி.கிராம் | 23.59 | 24.10 | 26.19 | 8.70 |
| பச்சை | மில்லியன் கி.கிராம் | 2.64 | 2.03 | 2.57 | 26.86 |
| (உடனடி தேயிலை தவிர்ந்த உற்பத்தி அளவுகள்**) | | | | | |
| உடனடி தேயிலை உற்பத்தி | மில்லியன் கி.கிராம் | 4.36 | 3.06 | 3.64 | 18.95 |
| **தேயிலை விற்பனைகள் (பொது, நேரடி, தனியார்)** | | | | | |
| மொத்த விற்பனை அளவுகள் | மில்லியன் கி.கிராம் | 301.92 | 268.24 | 295.79 | 10.27 |
| உயர் | மில்லியன் கி.கிராம் | 59.97 | 56.46 | 63.52 | 12.49 |
| நடுத்தரம் | மில்லியன் கி.கிராம் | 52.14 | 48.05 | 52.34 | 8.92 |
| தாழ்நிலை | மில்லியன் கி.கிராம் | 189.81 | 163.72 | 179.94 | 9.90 |
| மொத்த விற்பனை அளவுகள் | ரூபா/கி.கிராம் | 545.02 | 628.21 | 615.44 | (2.03) |
| உயர் | ரூபா/கி.கிராம் | 509.40 | 580.90 | 587.13 | 1.07 |
| நடுத்தரம் | ரூபா/கி.கிராம் | 470.96 | 553.94 | 550.80 | (0.57) |
| தாழ்நிலை | ரூபா/கி.கிராம் | 576.62 | 666.32 | 644.23 | (3.32) |
| **தேயிலை ஏற்றுமதிகள்** | | | | | |
| தேயிலை ஏற்றுமதிகள் கொள்ளளவு (மீள் ஏற்றுமதி தவிர்ந்த) | மில்லியன் கி.கிராம் | 283.00 | 256.58 | 276.00 | 7.57 |
| வகைகளின் படி ஏற்றுமதியின் அளவு | | | | | |
| கறுப்பு | மில்லியன் கி.கிராம் | 277.53 | 251.78 | 270.76 | 7.54 |
| பச்சை | மில்லியன் கி.கிராம் | 2.27 | 1.99 | 2.27 | 14.42 |
| உடனடி | மில்லியன் கி.கிராம் | 3.04 | 2.81 | 2.97 | 5.55 |
| தேயிலை ஏற்றுமதிகள் பெறுமதி (மீள் ஏற்றுமதி தவிர்ந்த) | ரூபா/கி.கிராம் | 227.00 | 218.80 | 249.10 | 13.85 |
| வகைகளின் அடிப்படையில் ஏற்றுமதி வருமானம் | | | | | |
| கறுப்பு | ரூபா/கி.கிராம் | 219.35 | 210.62 | 238.86 | 13.41 |
| பச்சை | ரூபா/கி.கிராம் | 4.41 | 4.11 | 5.07 | 23.48 |
| உடனடி | ரூபா/கி.கிராம் | 4.12 | 4.07 | 5.16 | 26.96 |
| மொத்த தேயிலை ஏற்றுமதிகளின் அளவு | மில்லியன் கி.கிராம் | 292.66 | 265.57 | 285.87 | 7.64 |
| மொத்த தேயிலை ஏற்றுமதிகளின் பெறுமதி | ரூபா/கி.கிராம் | 241.00 | 230.17 | 263.35 | 14.42 |

மூலம்: இலங்கை தேயிலை சபை மற்றும் இலங்கை சுங்கம்

# 1. நிறுவனப் பின்னணி

*“இலங்கை தேயிலை சபையானது, 1976 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி, தேயிலை கட்டுப்படுத்தல் சபை - தேயிலை கட்டுப்படுத்தல் சட்டம் இல 51, 1976, தேயிலை ஏற்றுமதி ஆணையாளர் திணைக்களம் - தேயிலை (வரி மற்றும் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தல்) சட்டம் இல 16, 1959, சிலோன் தேயிலை ஆராய்ச்சி நிறுவகம் - தேயிலை ஆராய்ச்சி சட்டம் 1925 மற்றும் இலங்கை தேயிலை சபையின் சட்டம் இல 14,1975 மற்றும் அதன் திருத்தங்கள் இல 17, 1985, இல 44,1990, இல 29, 2003, இல 44, 2006 மற்றும் இல 13, 2018 போன்றவற்றின் கீழ் சிலோன் தேயிலை பரப்புரை சட்டம் ஆகியன ஒன்றிணைந்து நிறுவப்பட்டது. தேயிலை ஆராய்ச்சி நிறுவகம் 1993ஆம் ஆண்டு தேயிலை ஆராய்ச்சி சட்ட இல 52, 1993, முகாமைத்துவத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. இலங்கை தேயிலை சபையின் சட்டம் மற்றும் தேயிலை கட்டுப்பாட்டு சட்டத்திலான திருத்தங்கள், தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு அமைய, தொழிற்துறைத் தேவைகளை அடிப்படையாகக்கொண்டு சர்வதேச தேவைகளைப் பூரணப்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்படுகின்றன.*

இலங்கை தேயிலை சபையை நிறுவுவதற்கு முன்னர், இலங்கை தேயிலையின் (சிலோன் தேயிலை) சர்வதேச ரீதியிலான விற்பனையை ஊக்குவித்தல் செயற்பாடுகள், தேயிலை பரப்புரை சபையினால் கையாளப்பட்டதுடன், இது தனியார்த் துறையினால் முன்னெடுக்கப்பட்டது. தேயிலை பரப்புரையானது, பாராளுமன்றத்தில் வாக்களிப்புக்குட்படுத்தப்பட்டு, தேயிலைத் தொழிற்துறையின் சகல அதிகாரங்களுடனும், 1976 ஆம் ஆண்டு, இலங்கை தேயிலை சபையாக மாற்றியமைக்கப்பட்டது.

இலங்கை தேயிலை சபை, ஒழுங்குபடுத்தும் அமைப்பாக, தேயிலைத் தொழிற்துறையின் உற்பத்தி, பயிர்செய்கையை மேலும் அதிகரித்தல், மீள்நடுகை, பழைய தோட்டங்களை மீளக்கட்டியெளுப்புதல், தொழிற்சாலைகளை நிறுவுதல் மற்றும் அவற்றின் தொழிற்பாடுகளைக் கண்காணித்தல் போன்ற ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக செயற்படுகின்றது. அத்துடன், தேயிலைத்தோட்டங்களை நிர்வகிப்பதுடன் தொடர்புபட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களின் கட்டுப்பாடுகள் மற்றும் இயக்கங்களை ஒழுங்குபடுத்துவதுடன், தேயிலை உற்பத்தி, உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியிலான சந்தைப்படுத்தலையும் ஒழுங்குபடுத்துகின்றது. “சிலோன் தேயிலையின் தரத்தினைப்” பேணும் வகையில், தொழிற்சாலையிலிருந்து, கப்பலில் ஏற்றும் வரைக்குமான அனைத்து செயற்படிமுறைகளும் கண்காணிப்புக்குட்படுத்தப்பட்டு, மதிப்பீடு செய்யப்படுகின்றன. மேலும், விற்பனை இடம், கப்பலுக்கு முன்னரான கட்டம், தரகர்களின் களஞ்சியசாலைகள், கலவையாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர் ஆகிய கட்டங்களின் போது தேயிலையின் தர நியமங்களுக்கான கண்காணிப்பைத் தீவிரப்படுத்த பல செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், சுகாதார முறையிலான கலப்பு மற்றும் களஞ்சியப்படுத்தல் செயற்பாடுகளுக்கான ஆலோசனை சேவைகளும் வழங்கப்படுகின்றன.

அபிவிருத்தி தொழிற்பாடுகளின் கீழ், தொழிற்சாலைகளை தரமுயர்த்தல் மற்றும் தேயிலை மீள்நடுகை, அறுவடையின் பின்னரான பாதிப்புக்களைக் குறைத்தல் மற்றும் உற்பத்தியை அதிகரித்தல் போன்றவற்றுக்கான மானிய வசதிகள் இலங்கை தேயிலை சபையினால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், புலன்சார் மற்றும் இரசாயன பகுப்பாய்வுகள் மூலமாக, தேயிலையின் தரத்துக்கான சான்றுதழ்களை வழங்குவது, தேயிலை அபிவிருத்தியின் கீழான பிரதான பொறுப்பாக அமையப்பெற்றுள்ளது.

சர்வதேச ரீதியில் சிலோன் தேயிலையை சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவித்தல், தேயிலை தொடர்பான புள்ளிவிவரங்களை சேகரித்தல் மற்றும் விபரித்தல், நிலையான சந்தைகளில் போட்டியிட்டு, முன்னணிச் சந்தைகளில் சிலோன் தேயிலையின் வியாபாரத்தினை மேலும் விஸ்தரித்தல் போன்றவற்றினைக் கொண்டதாக ஊக்குவித்தல் செயற்பாடுகள் விளங்குகின்றன.

பெருந்தோட்டத் தொழிற்துறை அமைச்சினால், இலங்கை தேயிலை சபையின் தொழிற்பாடுகள் அனைத்தும் மேற்பார்வை செய்யப்பட்டு, அறிவுறுத்தல்கள் வழங்கப்படும். நிதித் தொழிற்பாடுகள் தொடர்பான விடயங்கள் பொது நிறுவனங்கள் திணைக்களத்தினால் கண்காணிக்கப்படுவதுடன், விசேடமாக, திறைசேரி மானியங்களை பெறுவதற்கான பரிந்துரைகள் மற்றும் அனுமதிகளும் வழங்கப்படும்.

# 2. "கட்டமைப்பு மற்றும் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள்



# 2. 1 தேயிலை ஆணையாளரின் பிரிவு

இலங்கை தேயிலை சபையின் பிரதானமானதொரு பிரிவாக, தேயிலை ஆணையாளரின் பிரிவு திகழ்வதுடன், இலங்கை தேயிலை சபை சட்டத்தின் இல 14, 1975 இன் கீழ், நியமிக்கப்பட்ட "தேயிலை ஆணையாளரின்" தலைமையின் கீழ் வழிநடத்தப்படுகின்றது. இப்பிரிவினால் தேயிலைத்தொழிற்துறையின் அபிவிருத்தி, உற்பத்தி மற்றும் வெளியகற்றல்களுக்கான இலங்கை தேயிலை சபைச் சட்டம் இல. 14, 1975 மற்றும் தேயிலை கட்டுப்பாட்டுச் சட்டம் இல 51, 1957 களின் பிரகாரம் ஒழுங்கமைத்தல் மற்றும் மேற்பார்வையிடல் தொழிற்பாடுகளுடன் இணைந்த அனைத்து செயற்பாடுகளும் நிர்வகிக்கப்படுகின்றன.

தேயிலை ஆணையாளர் பிரிவின் தொழிற்பாட்டு அலகுகள், ஏழு பிராந்திய அலுவலகங்களாகப் பன்முகப்படுத்தப்பட்டுள்ளதுடன், இவை கம்பளை, பண்டாரவளை, இரத்தினபுரி, மாத்தறை, பந்துரலிய, காலி மற்றும் நுவரேலியா ஆகிய இடங்களில் அமையப்பெற்றுள்ளன. தேயிலைத் தொழிற்துறையின் விருத்திக்காக, தேயிலைப் பிரிவின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்குப் பொறுப்பாக தேயிலை ஆணையாளரின் பிரிவு தொழிற்படுகின்றது. தேயிலை ஆணையாளர் பிரிவின் அலகுகளின் வினைத்திறனை அதிகரிக்கும் வகையில், ஒழுங்குபடுத்தல், அபிவிருத்தி மற்றும் ஏற்றுமதி ஆகிய மூன்று பிரதான பிரிவுகளின் கீழ் தொழிற்படுத்தப்படுகின்றது.

தேயிலைத் தொழிற்துறையின் நிலையான அபிவிருத்திக்காக தேயிலை ஆணையாளரின் பிரிவினால் பின்வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

- தேயிலை உற்பத்தியாளர்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கான பதிவுகள்/ அனுமதிப்பத்திர புதுப்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- பச்சைத் தேயிலை கொழுந்து முகவர்களைப் பதிவுசெய்தல் மற்றும் கண்காணித்தல்
- நிராகரிக்கப்பட்ட தேயிலை செயலாக்க மையங்களைப் பதிவுசெய்தல் மற்றும் கண்காணித்தல்
- ஏலவிற்பனை உரிமைக்காக நிராகரிக்கப்பட்ட தேயிலை நிலையங்களைப் பதிவுசெய்தல்
- தேயிலை உற்பத்தி நடவடிக்கைகள், பச்சைத் தேயிலைக் கொழுந்து முகவர்கள் மற்றும் நிராகரிக்கப்பட்ட தேயிலை நிலையங்களை கண்காணித்தல் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல்
- பச்சைத் தேயிலை கொழுந்தின் தரத்தினை விருத்தி செய்வதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் அறுவடைக்கு பின்னரான இழப்புக்களை தணித்தல்
- தொழிற்சாலை நவீனமயமாக்கல் மற்றும் மீள்மரநடுகை செயற்பாடுகளுக்கான மானியங்களை வழங்குதல் (நிரப்புதல் மற்றும் புதிய மரணடுகை உள்ளடங்களாக)
- தொழிற்சாலைகள் மற்றும் முகவர்கள் மட்டத்தில் பச்சை இலை வழங்குனர்களுக்கான நியாயமான விலைகள் வழங்கப்படுவதை கண்காணித்தல்
- சிறந்த உற்பத்தி செயற்பாடுகள் (GMP) குறித்து விசேட கண்காணிப்புக்களை முன்னெடுத்தல்
- தேயிலை உற்பத்தி மற்றும் தொடர்புடைய தொழிற்துறைகளுக்கு அவற்றினை பகிர்ந்தளித்தல் தொடர்பான புள்ளிவிவரங்களைச் சேகரித்தல்
- தேயிலைத் தொழிற்துறையில் நடந்தேறும் தவறான நடத்தைகளைக் கட்டுப்படுத்தும் வகையில், தேயிலைத் தொழிற்சாலைகள், தரகர் நிலையங்கள் மற்றும் நிராகரிக்கப்பட்ட தேயிலை செயலாக்கல் மையங்கள் குறித்து விசேட ஆய்வுகளை மேற்கொள்ளுதல்
- இலங்கை தேயிலை சபை உத்தியோகத்தர்கள் அல்லது பொலிஸ் உத்தியோகத்தர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் தேயிலை மாதிரிகளை ஆய்வுக்காக அனுப்புதல்
- தேயிலை மாதிரி ஆய்வறிக்கைகளின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- நீதிமன்ற வழக்குகளுக்கான பொலிஸ் உத்தியோகத்தர்களின் அதிகாரங்களின் அடிப்படையில் கடிதங்களை அனுப்புதல்
- தேயிலைக் காணிகளை பதிவுசெய்தல் திட்டத்தின் கீழ் தகவல்களை மேம்படுத்தல் மற்றும் புதுப்பித்தல்
- "மாதிரி தேயிலைக் காணி" திட்டத்தின் கீழ் தேயிலைப் பயிர்ச்செய்கையாளர்களுக்கான மானியங்களை வழங்குதல் (பத்து எக்கர்களுக்கு மேல்)
- தேயிலைக்காணிகளுக்கான கிளைப்போசைட் பாவனைக்குரிய அனுமதிகளை வழங்குதல்
- தேயிலைக்கன்று நாற்றுமேடை திட்டத்துக்கான மானியத்திட்டங்களை அமுல்படுத்தல்
- களத்துக்கான புதிய நியாயமான விலைச்சுட்டியினை அறிமுகம்செய்தல்
- உயிரியல் உரத்திட்டத்துக்கான மானியத்திட்டத்தினை ஆரம்பித்தல்
- சூரிய மின்சக்தி உருவாக்கத் திட்டத்துக்கான மானியத்திட்டத்தினை ஆரம்பித்தல்
- ஈரப்பதன் மானிக்குரிய மானியத்திட்டத்தினை ஆரம்பித்தல்
- உணவுப்பாதுகாப்பு சான்றுதலுக்கான மானியத்திட்டத்தினை ஆரம்பித்தல்

இலங்கை தேயிலை சபைச்சட்டம் இல. 14, 1975 பிரிவு 25 இன் கீழ், கீழ்வரும் அதிகாரங்களும் தேயிலை ஆணையாளரின் கீழே இணைக்கப்பட்டுள்ளன;

அ) இலங்கை தேயிலை சபை (தயாரிக்கப்பட்ட தேயிலைக்கான செயலாக்கம் மற்றும் சுகாதார தரநியமங்கள்) விதிமுறைகள், 1986

ஆ) இலங்கை தேயிலை சபையின் மீள்மரநடுகை மற்றும் தொழிற்சாலை நவீனத்துவத்துக்கான மானியத் திட்டம்

## பிரதான சாதனைகள்

- மீள்மரநடுகைக்காக 359.68 ஹெக்டயர்களுக்கான மானியமாக ரூபா 73.88 மில்லியன் வழங்கப்பட்டது
- தேயிலைத்தோட்ட நவீனமயமாக்கல் மானியத் திட்டத்துக்காக 35 தொழிற்சாலைகளுக்கு ரூபா. 15.6 மில்லியன் வழங்கப்பட்டது
- தேயிலை வளர்ப்பாளர்களுக்கான மானியத்தினை வழங்குவதற்காக மாதிரி தேயிலைக்காணி திட்டமானது ஆரம்பிக்கப்பட்டதுடன் (10 ஏக்கர்களுக்கு மேல்) இதன் கீழ் 43 காணிகளுக்கு (நபர்கள்) ரூபா 13.85 மில்லியன் வழங்கப்பட்டது.
- தேயிலைத் தொழிற்சாலைகளைப் பதிவுசெய்யும் செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன (தரவுகளை புதுப்பித்தல்
- தேயிலைக் காணிகளுக்கான கிளைப்போசைட்டுக்களை அனுமதித்தல்
- தேயிலை நாற்றுப்பண்ணைக்கான மானியத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன், 93 நாற்றுப்பண்ணைகளுக்காக ரூபா 84.57 மில்லியன் மானியமாக வழங்கப்பட்டது.

## உற்பத்தியாளர்கள் மற்றும் தொழிற்சாலைகளைப் பதிவுசெய்தல்

தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டம் இல 51, 1957 இன் கீழ், தேயிலை உற்பத்தியுடன் தொடர்புடைய, தேயிலை உற்பத்தியாளர்களின் பதிவேடொன்று தேயிலை ஆணையாளர் பிரிவினால் பேணப்படுவதுடன், தேயிலைத் தொழிற்சாலை மற்றும் உற்பத்தியாளர்களுடன் தொடர்புடைய விடயங்களும் பதியப்படுதல் வேண்டும். சட்டத்தின் பிரகாரம், எவராவது உற்பத்தியாளராக பதியப்பட தகுதியானவர் அல்லது தகுதியற்றவர் எனத் தீர்மானிக்கும் அதிகாரம் தேயிலை ஆணையாளருக்கு உள்ளது. அனைத்து தேயிலை உற்பத்தியாளர்களும், தேயிலையை உற்பத்தி செய்தல் மற்றும் கொழும்பு ஏலத்தினுடாக தேயிலையை விற்பனை செய்தல் போன்ற நடவடிகைக்ளுக்காக இலங்கை தேயிலை சபையின் கீழ், பதிவுசெய்யப்படுதல் அவசியமாகும்.

தேயிலையை உற்பத்திசெய்யும் அனைத்து தொழிற்சாலைகளும், அவற்றின் கட்டடங்கள், கருவிகள் மற்றும் தரமான தேயிலையை உற்பத்தி செய்யும் வகையியிலான தொழிற்சாலையின் தொழிற்பாடுகள், தொழிற்சாலையில் தரமான தேயிலை உற்பத்தி செய்யப்படுவதை கண்காணிப்பதற்கான உதவிகளை முன்னெடுத்தல், நிராகரிக்கப்பட்ட தேயிலையை அகற்றுவதைக் கட்டுப்படுத்தக்கூடிய தன்மை மற்றும் நியாயமான விலைச்சுட்டியை நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றினை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை தேயிலை சபையின் கீழ் பதிவு செய்யப்படுதல் அவசியாமாகும்.

பதியுசெயயப்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகள், உற்பத்தி பொறிமுறைகள், பாரம்பரியம், CTC, பச்சை மற்றும் ஆட்டிஸ்னல் தேயிலை (கைகளினால் தாரிக்கப்பட்டவை) என நான்கு வகைகளாகப் பிரிக்கப்படும். ஒவ்வொரு பதிவுசெய்யப்பட்ட தேயிலை உற்பத்தியாளரும், தேயிலை ஆணையாளரினால் உருவாக்கப்பட்ட "TC05" படிவத்தினைப் பயன்படுத்தி, தங்களது உற்பத்தித்தரவுகளை அடுத்த மாதம் 05 ஆம் திகதிக்கு முன்னர் தேயிலை ஆணையாளருக்குச் சமர்ப்பித்தல் அவசியமாகும். சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் தேயிலை கட்டுப்பாட்டு சட்டம் இல 51,1957 இன் பிரகாரம் தண்டனைக்குரிய குற்றமாகும்.

அட்டவணை 2.1.1 தொழிற்பாடுகளின் அடிப்படையில் தேயிலைத் தொழிற்சாலைகளை வகைபிரித்தல்

| | தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| **நிலைமை** | **அதிகம்** | **நடுத்தரம்** | **குறைவு** | **மொத்தம்** |
| சொந்தக் கொழுந்துகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டவை | 56 | 17 | 2 | 75 |
| சொந்த மற்றும் கொள்வனவு செய்யப்படும் கொழுந்துகள்<br>அ) மொத்த உற்பத்தியில் 50% க்கும் குறைவான சொந்தக் கொழுந்து | 13 | 36 | 94 | 143 |
| ஆ) மொத்த உற்பத்தியில் 50% க்கும் அதிகமான சொந்தக் கொழுந்து | 63 | 26 | 16 | 105 |
| கொள்வனவு செய்யப்பட்ட கொழுந்துகள் மாத்திரம் | 09 | 29 | 250 | 288 |
| தொழிற்பாட்டிலுள்ள பதியப்பட்ட தொழிற்சாலைகள் | 182 | 149 | 455 | 786 |
| தொழிற்பாட்டில் இல்லாத பதியப்பட்ட தொழிற்சாலைகள் | 19 | 54 | 77 | 150 |
| பதியப்பட்ட மொத்த தேயிலைத் தொழிற்சாலைகள் | 201 | 203 | 532 | 936 |

ஆதாரம்: இலங்கை தேயிலை வாரியம்

## கொள்வனவு செய்யப்படும் இலைகளுக்கு செலுத்தத்தக்க நியாயமான

**தேயிலைக் கட்டுபாட்டு சட்டத்தின் பிரிவுகளை அடிப்படையாகக்கொண்டு உற்பத்தி செயற்பாடுகளுக்காக தேயிலைக் கொழுந்துகளை கொள்வனவு தொழிற்சாலைகள், தேயிலை ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்ட விலைகளுக்கமைவாக, அத்தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்ட தேயிலைகளை அடிப்படையாகக்கொண்டு நியாயமான கட்டணத்தை வழங்கக் கடமைப்பட்டுள்ளன. பச்சை இலை வழங்குனர்களுக்கான நியாயமான விலையினை வழங்குவது அத்தொழிற்சாலைகளின் மாதாந்த தேறிய சராசரி விற்பனையில் தங்கியுள்ளது.**

**தயாரிக்கப்பட்ட தேயிலை, தேயிலைக் கொழுந்து வழங்குனர்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கிடையிலான விகிதம் 68:32 ஆகப் பிரிக்கப்படும். தொழிற்சாலையின் சராசரி விற்பனைகள், மாதாந்த உயர்வுச் சராசரியை விட அதிகமாயின், அதிகரிக்கும் வருவாய் 50:50 எனும் விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படும். இச்சமன்பாடு, பச்சைத் இலையிலிருந்து,**

## நிலுவையிலுள்ள கட்டணங்கள்

நிறைவுற்ற மீளாய்வு ஆண்டு 2021 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும், பச்சை இலை வழங்குனர்களுக்கான நிலுவையில் மீதமாகவுள்ள கட்டணம் ரூபா 808 மில்லியன்களாகும். நிறைவுற்ற 2021 ஆம் ஆண்டில், ரூபா 31 மில்லியன் மீளப்பெறப்பட்டு, தேயிலை ஆணையாளர் பிரிவின் தலையீட்டுடன் தேயிலைக் கொழுந்து வழங்குனர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும், பதிவுகளை இடைநிறுத்துவதனூடாக நிலுவைக்கட்டணங்கள் ஒன்றுதிரள்வது தடுக்கப்படும். ஏதாவது தொழிற்சாலைகள், பச்சைத் தேயிலைகளுக்குரிய நியாயமான விலைகளில் குறைகள் அவதானிக்கப்படும் பட்சத்தில், அத்தொழிற்சாலை எச்சரிக்கப்பட்டு, நிலுவையாகவுள்ள கட்டணத்தை செலுத்தத்தவறும் பட்சத்தில் தொழிற்சாலையின் பதிவுகள் இடைநிறுத்தப்படும் அல்லது நீக்கப்படும் அல்லது 1993 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்ட தேயிலை சபைச் சட்டத்துக்கமைய தரகர்களிடமிருந்து அறவிடப்படும். நிலுவையிலுள்ள அனைத்துக் கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்ட பின்னரே, அத்தொழிற்சாலைகளின் பதிவுகள் மீளமைக்கப்படும்.

**அட்டவணை 2.1.2: நிலுவையிலுள்ள கட்டணங்களின் நிலைமை (ரூபா)**

| பிராந்தியம் | 2021.01.01 லான தொகை | 2021 இல் சேர்க்கப்பட்ட தொகை | மீட்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட தொகை (ரூபா) | சிறுதொழிலாளர் காரணமாக 31.12.2021 அன்று மிகுதித் தொகை | தொழிற்சாலைகளை தொழிற்படுத்துவதனாலான தொகை | தொழிற்சாலைகளை மூடுவதனாலான தொகை |
|---|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி | 354,528,184.68 | 752,411.88 | 2,398,863.05 | 352,881,733.51 | 181,274,387.11 | 171,607,346.4 |
| மாத்தறை | 59,119,926.98 | 18,197,850.94 | - | 77,317,777.92 | 40,343,952.98 | 36,973,824.94 |
| கம்பளை | 156,869,053.81 | 30,833,958.85 | 413,359.03 | 187,289,653.63 | 169,698,990.9 | 17,590,662.73 |
| காலி | 138,650,982.87 | 43,764,545.02 | - | 182,415,527.89 | 127,763,670.12 | 54,651,857.77 |
| பந்துரலிய | 47,868,679.49 | - | - | 47,868,679.49 | 28,110,194.30 | 19,758,485.19 |
| நுவரெலியா | 28,041,398.12 | 2,390,863.11 | 11,599,180.68 | 18,833,080.55 | 14,296,007.29 | 4,537,073.26 |
| பண்டாரவளை | 23,022,410.48 | - | 16,891,340.4 | 6,131,070.08 | 2,360,421.45 | 3,770,648.63 |
| மொத்தம் | 808,100,636.43 | 95,939,629.8 | 31,302,743.16 | 872,737,523.07 | 563,847,624.15 | 308,889,898.92 |

ஆதாரம்: இலங்கை தேயிலை வாரியம்

## பச்சை தேயிலைக் கொழுந்துகளின் தரக்கட்டுப்பாடு

பச்சைத் தேயிலைக் கொழுந்துகள் தேயிலை உற்பத்திக்கான மூலப்பொருளாகக் காணப்படுகின்றமையினால் கொள்வனவு செய்யப்படும் இலைகளினூடாக முன்னெடுக்கப்படும் உற்பத்தித்தொழிற்பாடுகளில் அவற்றின் தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மிகமுக்கியமான பங்கினை வகிக்கின்றன. சிறந்த தரமான பச்சைத் தேயிலைக் கொழுந்துகள் உற்பத்தித் தொழிற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படுமாயின், இறுதியில் தயாரிக்கப்பட்ட தேயிலையின் தரமும் அதிகரிக்கக்கூடும். இது தேயிலை சிறுதொழில் முயற்சியாளர்கள் மற்றும் தேயிலை உற்பத்தியாளர்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் நன்மைபயற்பதாக அமையும்.

பச்சைத் தேயிலைக் கொழுந்துகளுக்குரிய தர நியமங்களுக்கான வர்த்தமானி அறிவித்தல் கடந்த 2021 ஆம் ஆண்டு திசம்பர் 14 ஆம் திகதி இலங்கை தேயிலை சபையினால் பிரசுரிக்கப்பட்டது.

தேயிலை உற்பத்திக்கான மூலப்பொருளான பச்சைத் தேயிலைக் கொழுந்துகள் விளங்குகின்றன.

பச்சைத் தேயிலைக் கொழுந்துகளின் தரத்தினை மேலும் விருத்திசெய்யும் நோக்குடன் பின்வரும் செயற்பாடுகள் தேயிலை ஆணையாளரின் பிரிவினால் முன்னெடுக்கப்படுகின்றன.

அ) பச்சைத் தேயிலை இலை விநியோகிஸ்தர்களுக்கான அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல்

ஆ) பச்சை இலையின் தரத்தினை மேம்படுத்துவதற்கான “பீь இலை 60 “ திட்டம்

இ) களியாட்டக் காலங்களில், அவசர பயிர் முகாமைத்துவத் திட்டம்

ஈ) “மாதிரி தேயிலைக் காணி திட்டம்”

உ) மீள்நடுகைக்கான மானியத்திட்டம்

ஊ) தேயிலைகாணிகளை பதிவுசெய்வதற்கான திட்டம்

எ) தேயிலை நாற்றுப்பண்ணை மானியத்திட்டம்

### அ) பச்சைத் தேயிலை இலை விநியோகிஸ்தர்களுக்கான அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல்

தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி, பச்சைத் தேயிலை இலைகளுடன் தொடர்புடைய வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்க, தேயிலை ஆணையாளரின் பிரிவினால் வழங்கப்படும் வருடாந்த அனுமதிப்பத்திரத்தினை பெறுதல் அவசியமாகும். பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு பச்சைத் தேயிலை விநியோகிஸ்தர்களும் தேயிலை ஆணையாளரின் பிரிவினால் கண்காணிக்கப்படுவர்.கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் பச்சைத் தேயிலை விநியோகிஸ்தர்கள் பிராந்திய அடிப்படையில் காட்டப்பட்டுள்ளனர்.

அட்டவணை 2.1.3: டந்த 2021 ஆம் ஆண்டு விநியோகிக்கப்பட்ட பச்சைதேயிலை அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை

| பிராந்தியம் | 01.01.2021 லான அனுமதிப்பத்திர விநியோகிஸ்தர்கள் | அனுமதிப்பத்திர புதுப்பித்தல்கள் | புதிய அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டது | 31.12.2021 இல் பச்சைத்தேயிலை இலைகளை கையாள்வதற்கான அனுமதிப்பத்திரம் |
|---|---|---|---|---|
| பண்டாரவளை | 176 | 166 | 13 | 179 |
| கம்பளை | 170 | 159 | 32 | 191 |
| மாத்தறை | 272 | 251 | 14 | 265 |
| காலி | 267 | 234 | 08 | 242 |
| இரத்தினபுரி | 498 | 528 | 70 | 598 |
| பந்துரலிய | 254 | 219 | 31 | 250 |
| நுவரெலியா | 94 | 85 | 22 | 107 |
| மொத்தம் | 1731 | 1642 | 190 | 1832 |

ஆதாரம்: இலங்கை தேயிலை வாரியம்

## ஆ) பச்சைத் தேயிலை  இலையின் தரத்தினை மேம்படுத்துவதற்கான “பீ₆ இலை 60” திட்டம்

இத்திட்டமானது, கொழுந்து பறிக்கும் தரநியமங்கள் மற்றும் போக்குவரத்து நியமங்களை விருத்திசெய்வதனூடாக, அறுவடைக்குப் பின்னரான பாதிப்பினைக் குறைப்பதன் மூலமாக தேயிலைக் கொழுந்துகளின் தரத்தினை விருத்திசெய்யும் நோக்குடன் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஆரம்பகாலத்தில் காணப்பட்ட பச்சை இலைகளின் தரங்களுக்கமைய, சிறந்த இலைகள் 33 சதவீதமும், அதற்குக் குறைவானவை 32 சதவீதமும் மற்றும் மோசமான நிலையில் 35 சதவீதமான இலைகளும் காணப்பட்டன. ஆனால் தற்போதைய நிலையில், சிறந்த இலைகள் 34 சதவீதமும், அதற்குக் குறைவானவை 20% சதவீதமும் மற்றும் மோசமான நிலையில் 46% சதவீதமான இலைகளும் அவதானிக்கப்பட்டன. சிறப்பான பச்சை இலைகளின் தரத்தினை (சிறந்த இலையின் தரம்) குறைந்தது 60 சதவீதமாகப் பேணும் நோக்குடனேயே "பீ இலை 60" திட்டம் அமுல்படுத்தப்பட்டது.கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் பச்சைத் தேயிலையின் தரநியமங்கள் பிராந்திய அடிப்படையில் காட்டப்பட்டுள்ளனர்.

அட்டவணை 2.1.4: பிராந்திய ரீதியிலான பச்சை இலை தரநியமங்கள்

| பிராந்தியம் | சிறப்பானது | சிறப்பைவிட சற்றுக்குறைவு | குறைவு |
|---|---|---|---|
| கம்பளை | 26 | 24 | 50 |
| காலி | 40 | 19 | 41 |
| பந்துரலிய | 37 | 17 | 46 |
| மாத்தறை | 46 | 15 | 39 |
| இரத்தினபுரி | 29 | 26 | 45 |
| நுவரெலியா | 28 | 21 | 51 |
| பண்டாரவளை | 20 | 29 | 51 |

ஆதாரம்: இலங்கை தேயிலை வாரியம்

இத்திட்டத்தின் இலக்குகளை அடையும் பொருட்டு ஏற்கனவே கீழ்வரும் மூலோபாயங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

1. பங்குதாரர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வுகள்
2. இலைகளை கையாளுதல் மற்றும் கொண்டுசெல்வதற்கான விதிமுறைகளை அமுல்படுத்தல்

## இ) களியாட்டக் காலங்களில், அவசர பயிர்  முகாமைத்துவத் திட்டம்

களியாட்டக் காலங்களில் தேயிலைத் தொழிற்சாலைகள் தற்காலிகமாக நீண்ட காலத்துக்கு மூடப்படுவதனால், அக்காலத்தில் அறுவடையில் ஏற்படும் இழப்பினைக் குறைக்கும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டது. இத்திட்டமானது கடந்த 2005 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டதுடன், இத்திட்டத்தின் கீழ் பல்வேறு நடவடிக்கைகளை அறிமுகம் செய்ததன் காரணமாக தேயிலை ஆணையாளரின் பிரிவினால் அறுவடை இழப்பினை முற்றாக கட்டுப்படுத்தக்கூடியதாக அமைந்தது.

## ஈ) “மாதிரி தேயிலைக் காணி திட்டம்”

இத்திட்டத்துக்கான நிதி, இலங்கை தேயிலை சபையின் கீழ் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக திறைசேரியினால் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது இவ்வருடத்தில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டதுடன், இத்திட்டத்தின் கீழ் 24 காணிகள் மற்றும் ரூபா 9 மில்லியன் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டமானது, பின்வரும் நோக்கங்களை அடையும் நோக்கில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- இலங்கையின் தேயிலைத் தொழிற்துறையில், பகுதியளவில் பொறியியல்மயமாக்கப்பட்ட நிலையான தேயிலைத் தோட்டத்தொழிற்துறையை ஊக்குவித்தல் (இது திட்டத்தின் பிரதான நோக்கமாக அமைந்தது)
- தேயிலைத்தொழிற்துறையில் தேயிலைக்காணிகள் மற்றும் ஊழியர்களின் உற்பத்தித்திறனை அதிகரித்தல்
- நிலையான மற்றும் சீரான அறுவடையினை வருடம் முழுவதுமாக முன்னெடுத்தல்
- தேயிலைத்தோட்ட தொழிற்துறையின் அதியுச்ச பொருளாதார வாழ்வுக்காலத்தினை அதிகரித்தல்
- உற்பத்திச்செலவைக் குறைத்தல் (தேயிலைக்கொழுந்து பறித்தலுக்கான செலவை 60% ஆல் குறைக்க எதிர்பார்க்கப்படுகின்றது)
- இலைகளின் தரத்தினை நடுத்தரமான மட்டத்தில் பேணுதல்
- சன்றுதழ்களை பெறும்பொருட்டு, தேயிலை தொழிற்துறைக்கான குறைபாட்டு தரநிலைகளை அறிமுகம் செய்தல்

  உ+ம்: அயனமண்டல மழைக்காட்டு உடன்பாட்டு சான்றுதழ்

அட்டவணை 2.1.5: மாதிரி தேயிலைக் காணிகளுக்கான மானியக் கொடுப்பனவுகள்

| பிராந்தியம் | கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட காணிகளின் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| பண்டாரவளை | 01 | 03 | 1,050,000 |
| கம்பளை | 01 | 04 | 600,000 |
| இரத்தினபுரி | 02 | 08 | 2,300,000 |
| மாத்தறை | - | 07 | 2,250,000 |
| காலி | 01 | 05 | 2,450,000 |
| நுவரெலியா | - | 07 | 2,350,000 |
| பந்துரலிய | - | 09 | 2,850,000 |
| மொத்தம் | 05 | 43 | 13,850,000 |

ஆதாரம்: இலங்கை தேயிலை வாரியம்

## உ) மீள்நடுகைக்கான மானியத்திட்டம்

இலங்கை தேயிலை சபையின் கீழான தேயிலை அபிவிருத்தி செயற்பாடுகளுக்கான நிதியானத உள்நாட்டு நிதிகளின் கீழ் திறைசேரியினால் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதியானது, இவ்வருடத்தின் மானியத்திட்டத்தின் கீழான தேயிலை மீள்நடுகை நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டது. இதனடிப்படையில், இம்மானியங்கள் கூட்டுறவுப்பிரிவு எஸ்டேட்டுகள் மற்றும் பத்து ஏக்கர்களுக்கு அதிகமான காணிகளைக் கொண்ட எஸ்டேட்டுகளுக்கு வழங்கப்பட்டன. தேயிலை மீள்நடுகை, புதிய நடுகைகள் மற்றும் மீள்நிரப்பல் செயற்பாடுகளை முன்னெடுப்பதே மானியத் திட்டங்களை வழங்குவதற்கான நோக்கமாகும்.

இத்திட்டத்தின் நோக்கங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன;

i. தேயிலை உற்பத்திகளை அதிகரித்தல்

ii. தேயிலைக் காணிகளின் உற்பத்தித்திறனை அதிகரித்தல்

iii. தேசிய தேயிலை மீள்நடுகை வீதத்தினை 3% சதவீதமாகப் பேணுதல்

நிறைவுற்ற 2021 ஆம் ஆண்டின் மீள்நடுகை நடவடிக்கைகளுக்கான நிதிகள் கூட்டுறவு மற்றும் தனியார்த் துறையினரிடம் காணப்பட்டன.

அட்டவணை 2.1.6: மர மீள்நடுகை/ மீள்நிரப்பல் செயற்பாடுகளுக்கான மானியக்கொடுப்பனவுகள்

| பிராந்தியம் | கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட கட்டணம் (ரூபா) | விஸ்தீரம் (ஹெக்.) | நிறைவேற்றப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| கம்பளை | 53 | 22,549,810 | 104.41 | 179 |
| இரத்தினபுரி | 22 | 5,105,300 | 33.02 | 43 |
| பண்டாரவளை | 62 | 13,449,500 | 55.69 | 191 |
| பதுரலிய | 45 | 5,560,425 | 25.61 | 159 |
| மாத்தறை | 61 | 10,148,000 | 37.52 | 139 |
| காலி | 03 | 2,899,400 | 22.79 | 40 |
| நுவெரெலியா | 39 | 14,165,500 | 80.64 | 74 |
| மொத்தம் | 285 | 73,877,935 | 359.68 | 825 |

ஆதாரம்: இலங்கை தேயிலை வாரியம்

## உ) தேயிலைகாணிகளை பதிவுசெய்வதற்கான திட்டம்

இத்திட்டத்தின் கீழ், நாட்டிலுள்ள அனைத்து தேயிலைக் காணிகளும் பதிவுசெய்யப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள தேயிலைக் காணிகள் தொடர்பான அனைத்துத் தகவல்களும், சீரான முறையில் கணணிமயப்படுத்தப்பட்டுள்ளன.

## ஊ) தேயிலை நாற்றுப்பண்ணை மானியத் திட்டம்

நிறைவுற்ற 2021 ஆம் ஆண்டுக்கான தேயிலை சபைக்குரிய நிதி ஒதுக்கீடுகளில், கூட்டுறவுப் பிரிவுகள் மற்றும் நாற்றுப்பண்ணைகளை அமைக்க 10 ஏக்கர்களுக்கு அதிகமான தேயிலைக் காணிகளை கொண்டுள்ளவர்கள்களுக்கான ஒதுக்கீடுகள் மானியக் கொடுப்பனவுகளுக்காக நுகரப்படும். இம்மானியத் திட்டமானது ஒரே நேரத்தில் குறைந்தது 100,000 தேயிலைக்கன்றுகளைக் கொண்ட, நிலையான நிழற்குடையமைப்பு மற்றும் நீர்ப்பாசனக் கட்டமைப்புக்களைக் கொண்ட நாற்றுப்பண்ணைகளுக்கு மாத்திரம் பொருத்தமானதாகும். மேலும், குறைந்தது 100,000 தேயிலைக்கன்றுகளைக் கொண்ட நாற்றுப்பண்ணைகளுக்கு ரூபா 1,500,000.00 மானியத்தொகையாக வழங்கப்படும். உத்தரவளிக்கப்பட்ட நாற்றுப்பண்ணைகள் குறைந்தது மூன்று வருடங்களுக்கு தொடரவேண்டுமென்பதுடன், மானியத்தொகையை விடுவிக்க முன்னர் எஸ்டேட் உரிமையாளர் அல்லது தோட்டத்தொழிற்துறை நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி, இலங்கை தேயிலை சபையின் ஒப்பந்தத்தில் கையொப்பமிடுதல் அவசியமாகும். அனைத்து நாற்றுப்பண்ணை செயற்பாடுகளும் இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் வழிகாட்டல்களுக்கமைவாக முன்னெடுக்கப்படுதல் வேண்டும்.

அட்டவணை 2.1.7: மானியக் கொடுப்பனவுகள்

| பிராந்தியம் | கொடுப்பனவு செலுத்தப்பட்ட நாற்றுப்பண்ணைகளின் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட கொடுப்பனவு (ரூபா) |
|---|---:|---:|
| பண்டாரவளை | 05 | 3,425,000 |
| கம்பளை | 15 | 6,950,000 |
| இரத்தினபுரி | 23 | 23,150,000 |
| மாத்தறை | 19 | 16,250,000 |
| காலி | 10 | 10,450,000 |
| பதுரலிய | 14 | 14,600,000 |
| நுவெரெலியா | 07 | 9,750,000 |
| மொத்தம் | 93 | 84,575,000 |

ஆதாரம்: இலங்கை தேயிலை வாரியம்

## எ) தேயிலைக்கு சேதன உள்ளீடுகள்/ உரங்களை பயன்படுத்துவதை ஊக்குவித்தல்

ஒருங்கிணைந்த மண்வள முகாமைத்துவ மூலோபாயங்களை அமுல்படுத்துவதன் முக்கியத்துவம், சமநிலையான போசனைக் கொள்கை மற்றும் சேதன உரத் திட்டங்களினாலான உற்பத்திகளை அமுல்படுத்தல் ஆகியன தொடர்பான அறிவூட்டலை வழங்குவதில் இலங்கை தேயிலை சபை மிகமுக்கியமான பங்கினை வகிக்கின்றது.

தற்போதுள்ள உயிரியல்-உர உற்பத்தியாளர்களின் நிறுவனங்களைப் பதிவுசெய்வதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதுடன், அவர்களது தொழில்நுட்ப அறிவினை பகிர்தல் மற்றும் புதிய முதலீட்டாளர்களுடன் பணிபுரிவதற்கான ஒப்புதலும் பெறப்பட்டது. உயிரியல்/ சேதன உர உற்பத்திகளை ஊக்குவிக்கும் வகையில் இரு மானியத்திட்டங்கள் அறிமுகம்செய்யப்பட்டன.

ஒப்புரு சேதன/ உயிரியல் உரத்திட்டம் - மானியத் தொகை - அலகுக்கு ரூபா. 500, 000/=

சேதன/ உயிரியல் உர பொதுத்திட்டம் - மானியத் தொகை - அலகுக்கு ரூபா. 300, 000/=

அத்துடன், சிலோன் தேயிலைக்கான சர்வதேச பிரச்சாரத்துக்குச் சமாந்தரமாக, இலங்கை தேயிலை சபையினால் வர்த்தகக் கண்காட்சிக்கான மானியத்திட்டங்களை வழங்குவதன் மூலமாக, சேதனப் பிரிவு ஏற்றுமதியாளர்களும் ஊக்குவிக்கப்பட்டனர். இதில் KOLs ஊடாக சேதன உற்பத்திகள் ஊக்குவித்தல் குறிப்பிடத்தக்கதாகும். ஏற்றுமதியாளர்களுக்கான சேதனச் சான்றுதழ்களைப் பெறுவதில் SLTB இன் ஊக்குவித்தல் பிரிவு பிரதான பங்கினை வகிக்கின்றது.

அட்டவணை 2.1.8: மானியக் கொடுப்பனவுகள்

| பிராந்தியம் | கிடைக்கபெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் (ரூபா) | அலகுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| கம்பளை | 33 | 2,600,000 | 09 |
| பண்டாரவளை | 48 | 2,200,000 | 08 |
| இரத்தினபுரி | 31 | 1,100,000 | 04 |
| பதுரலிய | 33 | 3,500,000 | 12 |
| மாத்தறை | 36 | 900,000 | 03 |
| காலி | 17 | 900,000 | 03 |
| நுவரேலியா | 49 | 300,000 | 01 |
| மொத்தம் | 247 | 11,500,000 | 40 |

ஆதாரம்: இலங்கை தேயிலை வாரியம்

## தரத்தினை விருத்திசெய்யும் செயற்பாடுகள்

சிறந்த தரத்தினை பேணும்பொருட்டு, கட்டடங்கள், கருவிகள், இயந்திரங்கள் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மைகள் ஆகியன பொருத்தமான நிலைமைகளில் பேணப்படுவது அவசியமாகும். ஆகவே, சிறந்த தரமான தயாரிக்கப்பட்ட தேயிலையினை உற்பத்திசெய்யும்போது, மேற்குறிப்பிட்ட நடைமுறைகள் முன்னெடுக்கப்படாவிடின், தேயிலைக் கட்டுப்பாடுச் சட்டம் 5, 1957 க்கமைய தேயிலைத் தொழிற்சாலை அனுமதிப்பத்திரத்தினை நிறுத்துவதற்கு அல்லது நீக்குவதற்கான அதிகாரம் தேயிலை ஆணையாளருக்குள்ளது.தேயிலை கட்டுப்பாட்டுச் சட்டத்தின் படி, தேயிலை உற்பத்தியியைக் கண்காணித்து, அதன் தரத்தினை விருத்திசெய்வதற்கான அதிகாரம் தேயிலை ஆணையாளரின் பிரிவுக்குள்ளதுடன், தயாரிக்கப்பட்ட தேயிலையின் விருத்திக்காக பின்வரும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

அ) தொழிற்சாலைகள் நாவீனமயப்படுத்தல் மானியத்திட்டம்

ஆ) தேயிலைத்தொழிற்சாலைகள் மற்றும் களஞ்சியசாலைகளுக்கு GMPS ஐ நிறுவுதல்

இ) முன்னறிவிப்பின்றிய மதிப்பாய்வுகள் (செயற்பாட்டு அணி தொழிற்பாடுகள் - TTO)

ஈ) குறைவான NSA மூலோபாயம்

உ) நிராகரிக்கப்பட்ட தேயிலை தொழிற்பாட்டு மையங்களுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதுடன், அவற்றுக்கான சிறந்த உற்பத்தி செயற்பாடுகளை (GMP) விருத்திசெய்தல்

ஊ) நிராகரிக்கப்பட்ட தேயிலை தொழிற்பாட்டாளர்களுக்கு ஏலத்துக்கான உரிமையை வழங்குதல்

## அ) தொழிற்சாலைகள் நாவீனமயப்படுத்தல் மானியத்திட்டம்

இலங்கை தேயிலை சபையின் கீழ் முன்னெடுக்கப்படும் தேயிலை அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக நிதியானது உள்நாட்டு நிதிகளின் கீழ் திறைசேரியினால் ஒதுக்கப்படுகின்றது. இவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதியானது, கூட்டுறவுப் பிரிவு மற்றும் தனியார் பிரிவுகளுக்குரிய தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல் மானியத்திட்டத்துக்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

இத்திட்டத்தின் நோக்கங்களாக;

i. தேயிலை உற்பத்தியை அதிகரித்தல்
ii. தயாரிக்கப்பட்ட தேயிலையின் தரத்தினை அதிகரித்தல்
iii. தேயிலைத்தொழிற்துறைக்கு புதிய தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்தல்
iv. தேயிலைத்தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல்

அட்டவணை 2.1.9: மானியக் கொடுப்பனவுகள்

| பிராந்தியம் | கிடைக்கபெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | கொடுப்பனவுகள் செலுத்தப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட கட்டணம் (ரூபா) | மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| பண்டாரவளை | 05 | 06 | 3,535,052.94 | 19 |
| கம்பளை | 23 | 09 | 4,289,413.33 | 47 |
| இரத்தினபுரி | 16 | 10 | 3,975,620.26 | 112 |
| மாத்தறை | 17 | 03 | 2,169,028.40 | 18 |
| காலி | 15 | 03 | 1,372,500 | 29 |
| பதுரலிய | 14 | - | - | 24 |
| நுவரேலியா | 31 | 04 | 258,133.33 | 41 |
| மொத்தம் | 121 | 35 | 15,599,748.26 | 290 |

ஆதாரம்: இலங்கை தேயிலை வாரியம்

## ஆ) தேயிலைத்தொழிற்சாலைகளுக்கான சிறந்த உற்பத்திப் செயற்பாட்டினை (GMPs) நிறுவுதல்

தேயிலைத் தொழிற்சாலைகளின் உற்பத்தித் தொழிற்பாடுகளின் தரத்தினை விருத்திசெய்யும் பொருட்டு தேவையான வழிகாட்டிகளை வழங்குவதற்காக இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், 187 மதிப்பாய்வுத் தெரிவுகளை உள்ளடக்கிய வினாத்தாளுடன் 442 தேயிலைத் தொழிற்சாலைகள் மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டதுடன், உற்பத்தித் தொழிற்பாட்டின் தரத்தினை மேம்படுத்தும் வகையிலான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன

அட்டவணை 2.1.10: பிராந்திய அடிப்படையிலான GMP மதிப்பாய்வுகள்

| பிராந்தியம் | GMP களை மதிப்பாய்வு செய்தல் | தரநிலையிலுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|
| | | மிகச்சிறந்தது | சிறந்தது | சராசரி | குறைவு |
| பண்டாரவளை | 59 | 18 | 13 | - | - |
| கம்பளை | 37 | 15 | 20 | 01 | 01 |
| இரத்தினபுரி | 20 | 37 | 43 | 08 | 00 |
| மாத்தறை | 26 | 50 | 38 | 01 | 00 |
| காலி | 99 | 41 | 48 | 10 | 00 |
| பதுரலிய | 166 | 25 | 21 | 03 | 00 |
| நுவரேலியா | 35 | 14 | 14 | 07 | 00 |
| மொத்தம் | 442 | 200 | 197 | 30 | 01 |

ஆதாரம்: இலங்கை தேயிலை வாரியம்

நிறைவுற்ற 2019 ஆம் ஆண்டிலிருந்து, மிகவும் குறைவான தரத்திலிலுள்ள தொழிற்சாலைகளுக்கான பதிவுகளை புதுப்பிப்பதில்லையென தேயிலை ஆணையாளரின் பிரிவினால் கொள்கைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

## இ) முன்னறிவிப்பின்றிய மதிப்பாய்வுகள் (செயற்பாட்டு அணி தொழிற்பாடுகள் - TTO)

தேயிலைத்தொழிற்துறையிலான பிழையான நடவடிக்கைகளை தணிக்கும் பொருட்டு செயற்பாட்டு அணி தொழிற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. மேலும், ATC யினால் தலைமைதாங்கப்படும் அணியினால் தொழிற்பாடுகள் கையாளப்படுகின்றன.

நிறைவுற்ற 2021 ஆம் ஆண்டில், தேயிலை ஆணையாளரின் பிரிவின் கள உத்தியோகத்தர்களினால், தேயிலைத் தொழிற்சாலைகளில் 168 அவசரநிலைமை மதிப்பாய்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

அட்டவணை 2.1.11: செயற்பாட்டு அணி தொழிற்பாடுகள்

| பிராந்தியம் | நடாத்தப்பட்ட மதிப்பாய்வுகளின் எண்ணிக்கை |
|---|---|
| பண்டாரவளை | 13 |
| கம்பளை | 52 |
| இரத்தினபுரி | 15 |
| மாத்தறை | 14 |
| காலி | 28 |
| பதுரலிய | 23 |
| நுவரேலியா | 23 |
| மொத்தம் | 168 |

ஆதாரம்: இலங்கை தேயிலை வாரியம்

## ஈ) குறைவான NSA மூலோபாயம்

இத்திட்டமானது, NSA படிநிலையில் கீழ் மட்டத்திலுள்ள தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு உருவாக்கப்பட்டதாகும். பச்சைத் தேயிலை இலைகளின் தரம் மற்றும் உற்பத்தித்தரத்தினை விருத்திசெய்வதனூடாக இத்தொழிற்சாலைகளின் NSA ஐ உயர் மட்டங்களுக்கு உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ், தேயிலைத் தொழிற்சாலைகள், குறைவானவை, சிறந்தவை மற்றும் மிகவும் சிறந்தவை எனும் குழுக்களின் அடிப்படையில் நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. நிறுவப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில், நிறைவுற்ற 2019 ஆம் ஆண்டிலிருந்து, மிகவும் குறைவான தொழிற்சாலைகள் பட்டியலில் இடம்பெறமாட்டாது.

## உ) நிராகரிக்கப்பட்ட தேயிலை தொழிற்பாட்டு மையங்களுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதுடன், அவற்றுக்கான சிறந்த உற்பத்தி செயற்பாடுகளை (GMP) விருத்திசெய்தல்

அழிக்கப்படாத நிராகரிக்கப்பட்ட தேயிலையிலிருந்து நுகரக்கூடிய தேயிலைகளை பிரித்தேடுப்பதே நிராகரிக்கப்பட்ட தேயிலையின் செயற்படுத்தலாகும். ஒவ்வொரு நிராகரிக்கப்பட்ட தேயிலை தொழிற்பாட்டாளரும், இலங்கை தேயிலை சபையின் நிராகரிக்கப்பட்ட தேயிலை தொழிற்பாட்டாளர் பட்டியலில் பதிவு செய்தல் அவசியமாகும். நிராகரிக்கப்பட்ட தேயிலையின் செயற்படுத்தல் மையங்களுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கல் திட்டமானது, 1957 ஆம் ஆண்டு 51 ஆம் இலக்க தேயிலைக் கட்டுப்பாட்டுச்சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. நிராகரிக்கப்பட்ட தேயிலை நிலையங்களின் தரத்தினை விருத்திசெய்யும் வகையில் தேவையான வழிநடத்தல்களை வழங்கும்பொருட்டு GMP திட்டம் முன்னெடுக்கப்பட்டது. கடந்த 2021 ஆம் ஆண்டு பிராந்திய அடிப்படையில் வழங்கப்பட்ட மொத்த அனுமதிப்பத்திரங்கள் மற்றும் அளவுகள் அட்டவணை 3.10 இல் விபரிக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.1.12: நிறைவுற்ற 2021 ஆம் ஆண்டில் நிராகரிக்கப்பட்ட தேயிலை செயலாக்க நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்ட அளவுகள்

| பிராந்தியம் | 01.01.2021 இல் பதிவுசெய்யப்பட்ட செயற்பா -ட்டாளர்கள் | வருடத்திலான புதுப்பித்தல்கள் | வருடத்தில் புதிதாக விநியோகி -க்கப்பட்டவை | 31.12.2021 லான செயலாக்க நிலையங்களின் எ+கை | 31.12.2021 இல்விநியோ -கிக்கப்பட்ட அனுமதிப்ப -த்திரங்கள் | செய்யப்பட்ட நிராகரிக்கப்பட்ட அளவுகள் (Kg) |
|---|---|---|---|---|---|---|
| பண்டாரவளை | 01 | 01 | 00 | 01 | 1,196 | 4,920,176 |
| கம்பளை | 184 | 119 | 01 | 120 | 1,660 | 7,821,383 |
| மாத்தறை | 09 | 03 | 01 | 04 | 554 | 1,873,462 |
| காலி | 16 | 03 | 00 | 03 | 790 | 2,770,191 |
| இரத்தினபுரி | 03 | 03 | 01 | 04 | 1,480 | 6,256,417 |
| பதுரலிய | 11 | 08 | 01 | 09 | 1,042 | 4,216,293 |
| நுவெரெலியா | 05 | 02 | 00 | 02 | 2,101 | 13,021,001 |
| மொத்தம் | 229 | 139 | 04 | 143 | 8,823 | 40,878,923 |

ஆதாரம்: இலங்கை தேயிலை வாரியம்

## ஊ) நிராகரிக்கப்பட்ட தேயிலை தொழிற்பாட்டாளர்களுக்கு ஏலத்துக்கான உரிமையை வழங்குதல்

நிராகரிக்கப்பட்ட தேயிலை தொழிற்பாட்டாளர்களுக்கு ஏலத்துக்கான உரிமையை வழங்குவது தொடர்பிலான கட்டமைப்பொன்று அமைப்பினால் திட்டமிடப்பட்டது. நிராகரிக்கப்பட்ட தேயிலை நிலையங்கள் ஏல உரிமைக்காக விண்ணப்பிக்கையில், GMP தரத்தின் 80% ஐக் கொண்டிருத்தல் அவசியமாகும்.நிராகரிக்கப்பட்ட தேயிலை தொழிற்பாட்டாளர்களுக்கு ஏலத்துக்கான உரிமையை வழங்குவதற்கான நோக்கங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- நிராகரிக்கப்பட்ட தேயிலைக்கான சந்தையினை வழங்குதல்
- நிராகரிக்கப்பட்ட தேயிலையின் தரத்தினை விருத்தி செய்தல்
- நிராகரிக்கப்பட்ட தேயிலையின் தரத்தினைக் கண்காணித்தல்
- நிராகரிக்கப்பட்ட தேயிலையிலான சட்டவிரோதமான செயற்பாடுகளை தடுத்து, சட்டபூர்வமான நடைமுறைகளை ஒழுங்குசெய்தல்
- உண்மையாகவே நிராகரிக்கப்பட்ட தேயிலைகளை வெளியகற்றுவதற்கான வினைத்திறனான செயற்பாட்டு முறைமைகளை ஒழுங்குபடுத்தல்.

நிறைவுற்ற 2021 ஆம் ஆண்டியில் முப்பது (30) நிராகரிக்கப்பட்ட தேயிலை செயற்படுத்தல் நிலையங்களுக்கு ஏல உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், 2021 ஆம் ஆண்டில் மொத்தமாக 50 நிலையங்கள் எலவிற்பனைக்குரிய உரிமைகளைக் கொண்டுள்ளன.

## எ) ஏனைய அபிவிருத்தித் திட்டங்கள்

இவ்வருடத்தில் தேயிலைத் தொழிற்சாலைகள் மற்றும் ஏற்றுமதியாளர்களின் களஞ்சியசாலைகளுக்கான சூரியசக்திக் கலங்களைப் பொறுத்துவதற்கான புதிய மானியத்திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டன (இதனடிப்படையில் 20 தொழிற்சாலைகள் மற்றும் 03 களஞ்சியசாலைகளுக்குரிய மானியமாக ரூபா 6.16 மிலியன் ஒதுக்கப்பட்டது), ஈரப்பதன் மானி பகிர்ந்தளித்தல் (இதன் கீழ் 05 தொழிற்சாலைகளுக்கான மானியங்கள் வழங்கப்பட்டன), மேலும், ஏற்றுமதியாளர் களஞ்சியசாலைகளுக்கான HACCP/ ISO உணவுப்பாதுகாப்புச் சான்றுதழ்கள் மற்றும் புதிய இயந்திரங்களைப் பொருத்துவதற்கான மானியங்களும் வழங்கப்பட்டன.

அட்டவணை 2.1.13: தேயிலைத் தொழிற்சாலைகளுக்கான சர்வதேச சான்றுதழ்கள்

| பிராந்தியம் | HACCP (தொழிற்சாலைகளின் எண்ணிக்கை) | ISO 22000 (தொழிற்சாலைகளின் எண்ணிக்கை) | ஏனைய சர்வதேச சான்றுதழ்கள் (RA/ CQC) (தொழிற்சாலைகளின் எண்ணிக்கை) |
|---|---|---|---|
| பண்டாரவளை | 51 | 16 | 13 |
| கம்பளை | 14 | 14 | 04 |
| இரத்தினபுரி | 42 | 43 | 10 |
| மாத்தறை | 27 | 43 | 07 |
| காலி | 43 | 43 | 00 |
| பதுரலிய | 06 | 09 | 06 |
| நுவெரெலியா | 04 | 97 | 15 |
| மொத்தம் | 187 | 265 | 55 |

ஆதாரம்: இலங்கை தேயிலை வாரியம்

# 2. 2 தேயிலை ஏற்றுமதிகள் பிரிவு

தேயிலைச் சட்டம் இல 16, 1959 (வரி மற்றும் ஏற்றுமதிகளைக் கட்டுப்படுத்தல்) மற்றும் இலங்கை தேயிலை சபைச் சட்டம் இல 14, 1975 போன்றவற்றிலான அதிகாரங்கள் மற்றும் தொழிற்பாடுகள் ஆகியன, இலங்கை தேயிலை சபையின், தேயிலை ஏற்றுமதிப் பிரிவினால் நிர்வகிக்கப்படுகின்றன. தேயிலை ஏற்றுமதியாளர்கள், தேயிலைப் பொதியாளர்கள், சேமிப்பிடங்கள், இறக்குமதியாளர்கள், தேயிலைப் பொதிகளின் வகை, தேயிலையை மீளமைத்தல், தேயிலைக்கான மிகக்குறைந்த தரநிர்ணயத்தினை கண்காணித்தல், தேயிலை ஏற்றுமதிக்கான அங்கீகாரத்தினை வழங்குதல், தேயிலை ஏற்றுமதியின் புள்ளிவிபரங்களை தொகுத்தல் மற்றும் இலங்கையின் இருதரப்பு சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களின் (FTAs) கீழ், தேயிலை ஏற்றுமதியினைக் கண்காணித்தல் போன்றவற்றினைப் பதிவு செய்தலுடன் தொடர்புடைய அனைத்து செயற்பாடுகளும் தேயிலை ஏற்றுமதிப் பிரிவினால் முன்னெடுக்கப்படும். மேலும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பிரதான தொழிற்பாடுகளும் 2021 முழுவதுமாக முன்னெடுக்கப்பட்டன.

கடந்த 2015 ஆம் வருடத்திலிருந்து, ஈரானிய தேயிலை ஏற்றுமதிகளுக்கான GMP சான்றுதழ்களை வழங்கும் நடவடிக்கைகள் ஏற்றுமதிப்பிரிவினால் ஆரம்பிக்கப்பட்டன. தேயிலை ஏற்றுமதிகளின் மேன்மையை நிலைநிறுத்துவதற்கு, இலங்கை தேயிலை சபை - இலங்கை சுங்கத்துடன் இணைந்து, இலங்கை சுங்க ஏற்றுமதி செயற்பாட்டு நிலையத்திலான (EFC) ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், அனைத்து ஏற்றுமதியாளர் களஞ்சிய நிலையங்களிலும், தேயிலை செயற்படுத்தலின் தரத்தினைப் பாதுகாத்தல் மற்றும் விருத்தியடையச்செய்யும் பொருட்டு, அவற்றின் தொழிற்பாடுகள் மற்றும் சிறந்த உற்பத்தி செயல்முறைகளுக்காக அனைத்து களஞ்சிய நிலையங்களுக்கும் HACCP தர சான்றுதழ்கள் மிகமுக்கியமானவையாகத் திகழ்கின்றன.

நிறைவுற்ற 2021 இல், சர்வதேச தேயிலைச் சந்தையில், நுகர்வோரின் தேவைகள் மற்றும் விருப்பங்களை நிறைவேற்றும்பொருட்டு, தயாரிப்பினை பன்முகப்படுத்தல், தர விருத்திகள், அதிக பெறுமதி சேர்த்தல் மற்றும் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்தக்கூடிய நவீன தொழிநுட்பங்களில் முதலீடுகளை முன்னெடுக்கும் வகையில் ஏற்றுமதி பொதியிடல் தொழிற்சாலைகளை ஊக்குவிக்கும்முகமாக, இலங்கை தேயிலை சபையினால் வட்டி மானியத்திட்டமொன்று அறிமுகம்செய்யப்பட்டது.

## பதிவுகளை மேற்கொள்ளுதல்

பதிவுகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஏற்றுமதியாளர்கள், பொதியாளர்கள், சேமிப்பிடங்கள் மற்றும் இறக்குமதியாளர்களை புதுப்பித்தல் ஆகியன தேயிலை ஏற்றுமதிப் பிரிவின் பிரதான பணிகளாக விளங்குகின்றன. தேயிலை ஏற்றுமதியாளராக பதிவுசெய்துகொள்வதற்கு, செல்லுபடியாகும் வியாபாரப்பதிவு, பதிவுசெய்யப்பட்ட தேயிலை சேமிப்பிடம் (சேமித்தல், அரைத்தல் மற்றும் பொதியிடல்), தேயிலை சுவைத்தல் வசதிகளுடனான தேயிலை சுவையாளர் மற்றும் மிகக்குறைந்த மூலதனமாக ரூபா. ஒரு மில்லியன் (மூலதனமாக்கப்பட்ட அல்லது செலுத்தப்பட்ட) போன்றன பூரணமாக்கப்படும் பட்சத்தில் விண்ணப்பிக்கத் தகுதியுடையவராவார்.

கடந்த 1986, ஜனவரி 28 இல் வெளியிடப்பட்ட விசேட அரச வர்த்தமானி இல 386/13 இன் படி, இலங்கை தேயிலை சபை விதிமுறைகளுக்கமைய, 1986 (தேயிலைப் பொதியாளர்களைப் பதிவுசெய்தல்), எவராவது உள்ளூர்ப் பாவனைக்கான வியாபார செயற்பாடுகளுக்காக தேயிலைப் பொதியிடல் நடவடிக்கைகளில் அல்லது ஏதாவது பொதியிடல் செயற்பாடுகளில் ஈடுபடுவாராயின், இலங்கைத் தேயிலை சபையில் பதிவுசெய்தல் அவசியமாகும். ஒவ்வொரு பதிவும் ஒரு வருடத்துக்கு மாத்திரம் செல்லுபடியானதாக அமைவதுடன், வருடாந்தம் புதுப்பிக்கப்படுதல் வேண்டும். தேயிலை சட்டத்தின் (வரி மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாடு) சட்டம் இல 16, 1959 இன் கீழே ஏற்றுமதியாளராக பதியப்பட்ட எந்த நிறுவனமும் தேயிலை இறக்குமதியாளராகவும் பதிவுசெய்யப்பட தகுதியுடையவர்களாவர்.

அட்டவணை 2.2.1 தேயிலை ஏற்றுமதியாளர்கள், பொதியாளர்கள், உற்பத்தி தரகர்கள் மற்றும் இறக்குமதியாளர்களை பதிவுசெய்யும் புள்ளிவிபரவியல் (2021)

| பதிவுகள் | 01.01.2021 க்கமைய | 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் (புதிய பதிவுகள் மற்றும் அவ்வாண்டில் புதுப்பிக்கப்படாத நிறுவனங்கள்) | 31.12.2021 க்கமைய மொத்தம் |
|---|---|---|---|
| ஏற்றுமதியாளர்கள் | 357 | புதிய பதிவுகள் : 45<br>அவ்வாண்டில் புதுப்பிக்கப்படாதவை : 1256 | 369 |
| பொதியாளர்கள் | 803 | ஏற்றுமதியாளர்/ உள்ளூர் பொதியாளர் புதிய பதிவுகள் : 161<br>அவ்வாண்டில் புதுப்பிக்கப்படாதவை : 1818 | 691 |
| களஞ்சியசாலை | 194 | களஞ்சியசாலை புதிய பதிவுகள் : 31<br>அவ்வாண்டில் புதுப்பிக்கப்படாதவை : 45 | 194 |
| இறக்குமதியாளர்கள் | 117 | அவ்வாண்டில் புதுப்பிக்கப்படாதவை : 06<br>அவ்வாண்டில் புதுப்பிக்கப்படாதவை : 125 | 102 |
| உற்பத்தித் தரகர்கள் | 8 | | 08 |

மூலம்: இலங்கை தேயிலை சபை

கடந்த 1986 டிசம்பர், 5 இல், விசேட அரச வர்த்தமானி இல 326/17 ஊடாக பிரசுரிக்கப்பட்டு, பின்னர் திருத்தியமைக்கப்பட்டு கடந்த 1986 செப்டம்பர் 10 இல் பிரசுரிக்கப்பட்ட விசேட அரச வர்த்தமானி இல 410/11 மற்றும் கடந்த 2003 மார்ச் 20 இல் பிரசுரிக்கப்பட்ட விசேட அரச வர்த்தமானி இல 1280/8 களில் வெளியிடப்பட்ட இலங்கை தேயிலை சபை விதிமுறைகளுக்கமைய, (தேயிலையை களஞ்சியப்படுத்தல்) குறிப்பிட்ட நேரத்தில், 1000 கிலோகிராம்களுக்கு அதிகமான தேயிலை சேமிக்கப்படுவதாயின், இலங்கை தேயிலை சபையின் குறிப்பிடப்பட்ட விதிமுறைகளின் பிரிவுகளுக்கமைய, அவற்றுக்கான நோக்கம் திருப்திகரமானதாக அமைதல் அவசியமாக அமைவதுடன், இலங்கை தேயிலை சபையில் பதிவு செய்யப்படுதல் அவசியமாகும்.

இலங்கை தேயிலை சபை விதிமுறைகளின் 1981 (இறக்குமதி மற்றும் ஏற்றுமதி) கீழ், இலங்கை தேயிலையுடன், ஏனைய விசேட உற்பத்தித் தேயிலைகளைக் கலந்து, சில்லறைக் கொள்கலன்களின் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இக் கொள்கலன்கள் அல்லது பொதிகள் "இலங்கையில் பொதியிடப்படும் சிலோன் தேயிலை மற்றும் ஏனைய தேயிலை உற்பத்திகளின் கலப்பு" அல்லது இலங்கையில் பொதியிடப்படும் ஏனைய உற்பத்தித் தேயிலைகள்" எனும் குறிப்பினைத் தாங்கி நிற்பதுடன், அனைத்துக் கொள்கலன்களும் இலங்கைத் தேயிலை சபையில் பதிவு செய்யப்படும்.

தேயிலை ஏற்றுமதிக்கான அனுமதியினைப் பெறும்பொருட்டு, பதிவு செய்யப்பட்ட அனைத்து ஏற்றுமதியாளர்களும், தேவையான அறிக்கைகளுடன், ASYCUDA அமைப்பினூடாக, CUSDEC க்களை தேயிலை ஏற்றுமதிப் பிரிவுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். ஏற்றுமதிக்காக தயார் நிலையிலுள்ள தேயிலைப் பொருட்கள், அவற்றுக்குரிய நியாயமான தரநிர்ணயத்துடன் இணங்கும் தன்மைகள் தொடர்பில் இலங்கை தேயிலை சபை உத்தியோகத்தர்களினால் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

பதிவுசெய்யப்பட்ட அனைத்து தேயிலை ஏற்றுமதியாளர்களும், தங்களது ஆவணப்படுத்தல் தேவைகளின் நிமித்தம் சான்றுதல்களைப் புதுப்பித்தல் தொடர்பிலான முக்கியத்துவம் தொடர்பில் கவனம் செலுத்தல் மிக அவசியமாகும். நிறைவுற்ற 2021 இல், சான்றுதழ்களை புதுப்பிப்பதற்கான ஒருநாள் சேவைகள் நடாத்தப்பட்டு, சான்றுதழ்கள் வழங்கப்பட்டன.

## தேயிலையை இறக்குமதி செய்தல்

இலங்கை தேயிலை சபையினால் 7,130,864.37 கிலோகிராம் தேயிலையை இறக்குமதி செய்வதற்காக, 524 இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. எவ்வாறாயினும், குறிப்பிட்ட காலப்பகுதியில் பௌதீகளவில் இறக்குமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 6,358,679 கிலோகிராம்களாக அமைந்ததாக மீளாய்விலிருந்து அறியமுடிகின்றது

அட்டவணை 2.2.2: பௌதீகளவிலான இறக்குமதிகள் - ஜனவரி - திசம்பர் 2021

| நாடு | வகை | இறக்குமதியின் அளவு (Kgs) | CIF பெறுமதி (ரூபா) | பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|
| சீனா | பச்சைத் தேயிலை | 1,725,601 | 497.81 | 859,013,210 |
| | விசேட வகை | 138,401 | 885.89 | 122,608,210 |
| | வெள்ளைத் தேயிலை | 10,065 | 1,032.16 | 10,388,687 |
| | கபின் நீக்கப்பட்ட தேயிலை | 205 | 3,520.13 | 721,627 |
| உப மொத்தம் | | 1,874,272 | 529.66 | 992,731,734 |
| இந்தியா | CTC வகை | 888,669 | 393.51 | 349,702,389 |
| | விசேட (கறுப்புத் தேயிலை) | 809,647 | 917.12 | 742,545,616 |
| | கபின் நீக்கப்பட்ட தேயிலை | 33,800 | 605.33 | 20,460,135 |
| | பச்சைத் தேயிலை | 2,255 | 1,616.00 | 3,644,080 |
| | வெள்ளைத் தேயிலை | 27,000 | 382.08 | 10,316,160 |
| உப மொத்தம் | | 1,761,371 | 639.65 | 1,126,668,380 |
| ஜப்பான் | விசேட வகை | 261,040 | 948.29 | 247,540,504 |
| | பச்சைத் தேயிலை | 3,365 | 3,400.18 | 11,441,595 |
| உப மொத்தம் | | 264,405 | 979.49 | 258,982,099 |
| தாய்வான் | விசேட வகை | 50 | 10,762.38 | 538,119 |
| உப மொத்தம் | | 50 | 10,762.38 | 538,119 |
| உகாண்டா | CTC வகை | 13,480 | 324.05 | 4,368,194 |
| உப மொத்தம் | | 13,480 | 324.05 | 4,368,194 |
| மியன்மார் | பச்சைத் தேயிலை | 3,280 | 30.89 | 101,312 |
| | CTC வகை | 350 | 0 | 0 |
| உப மொத்தம் | | 3,630 | 27.91 | 101,312 |
| ஜேர்மனி | பச்சைத் தேயிலை | 4,305 | 2,187.34 | 9,416,489 |
| உப மொத்தம் | | 4,305 | 2,187.34 | 9,416,489 |
| இந்தோனேசியா | CTC வகை | 49,500 | 451.64 | 22,356,180 |
| உப மொத்தம் | | 49,500 | 451.64 | 22,356,180 |
| கென்னியா | CTC வகை | 2,387,666 | 354.07 | 845,389,153 |
| உப மொத்தம் | | 2,387,666 | 354.07 | 845,389,153 |
| **இறுதி மொத்தம்** | | 6,358,679 | 512.77 | 3,260,551,660 |

மூலம்: இலங்கை தேயிலை சபை

## தயாரிக்கப்பட்ட தேயிலைக்கான மிகக்குறைந்த ISO 3720 தரநியமத்தினை பேணுதல்

வழங்கப்பட்ட அனைத்துவிதமான தேயிலை மாதிரிகள், தொழிற்சாலையிலிருந்து பெறப்பட்ட மாதிரிகள், இறக்குமதிகளின் பின்னரான தொகைகள், இறக்குமதியாகிய தேயிலைத் தொகைகள் மற்றும் ஏற்றுமதிகளுக்கு தயார் நிலையிலுள்ள தேயிலைத் தொகைகள் ஆகியன உத்தரவு வழங்கப்பட்ட வகைப்பிரிவுகளுக்குள் காணப்படுகின்றமை, ISO 3720 தரநிர்ணயத்தினை ஒத்திருத்தல் மற்றும் மாசுற்றிருத்தல் குறித்து, இலங்கை தேயிலை சபையினால் நியமிக்கப்பட்ட தேயிலை சுவையாளர் நிபுணர் குழாமினால் ஆய்வுகள் மேற்கொண்டு பொருத்தமான தயாரிக்கப்பட்ட தேயிலைகளுக்கு மாத்திரம் ஏற்றுமதிகளுக்கான அனுமதி வழங்கப்படும்

அட்டவணை 2.2.3: ஒவ்வொரு மாதிரியாக்கல் மட்டங்களிலுமான தரக் குறைபாடுகளின் எண்ணிக்கைகள் (2021)

| மாதிரிகளின் வகைகள் | பெறப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை | ISO தரநிர்ணயத்துக்கு கீழான மற்றும் மாசுற்றவற்றின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஏற்றுமதிப் பிரிவிலிருந்து எடுக்கப்பட்ட ஏலத்துக்கு முன்னரான மாதிரிகள் | 5067 | 2424 |
| ஏலத்துக்கு முன்னரான பின்வாங்கல்கள் (வாரியத்தினால்) | 1934 | |
| ஏலத்துக்கு பின்னர் | 337 | 25 |

மூலம்: இலங்கை தேயிலை சபை

ஏலத்துக்கு முன்னர், கப்பலுக்கு ஏற்ற முன்னர் மற்றும் விசேட ஆய்வுகளின்போது மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற தயாரிக்கப்பட்ட தேயிலைகள், ஏற்றுமதிப் பிரிவின் விசேட கண்காணிபின் கீழ் அழிக்கப்படும். நிறைவுற்ற 2021 ஆம் வருடத்தில், இப்பிரிவினால் அனைத்து மட்டங்களிலும் அடையாளங்காணப்பட்ட மொத்தமாக 200,566.32 கிலோகிராம் தராரிக்கப்பட்ட தேயிலைகள் அழிக்கப்பட்டன. தேயிலைகளின் தரத்தினை உறுதிப்படுத்தும் வகையில், ஏலத்தில் ரூபா 300 க்குக் குறைவான பெறுமதியுடைய தேயிலைகளை மதிப்பாய்வு செய்யும் தீர்மானம் SLTB யினால் எடுக்கப்பட்டது. இது ஒவ்வொரு வாரமும் கண்காணிக்கப்பட்டது.

இலங்கை தேயிலை சபையினால் கைப்பற்றப்பட்ட தேயிலைத் தொகையினை, கீழ்வரும் நிபந்தனைகளுடன் மீண்டும் விடுவிக்க அண்மையில் தீர்மானம் எட்டப்பட்டது. அதிக மசகு நார்களை உள்ளடக்கிய தேயிலைத்தொகைகள் மாத்திரம், எஸ்டேட்டுக்கு திரும்பவும் கூட்டுக்கட்டணத்தின் அடிப்படையில் வெளியிடப்படும் மற்றும் மேம்படுத்தப்பட்ட பின்னர் உற்பத்தியாளர் அதே விலைப்பட்டியல் எண்ணிலிருந்து மீண்டும் அட்டவணைப்படுத்தலாம். மேலும், நுண்ணுயிர் மாசாக்கிகளை உள்ளடக்கிய தேயிலைகள் பதிவு செய்யப்பட்ட தேயிலை உற்பத்தியாளர்களின் ஒப்புதலுடன் உடனடித் தேயிலை உற்பத்திக்கு அனுப்பப்படும்.

## தேயிலை மீட்டெடுப்புக்கள்

தேயிலைக் கொள்வனவாளரினால் தேயிலைக் கொள்கலன்கள் ஏற்க மறுக்கப்படுமாயின், உள்ளூர் ஏற்றுமதியாளர், இலங்கை தேயிலை சபையின் அனுமதியுடன் அத்தேயிலைப்பொதிகளை மீளப்பெறுதல் வேண்டும். மேலும், மீட்டெடுக்கப்பட்ட தேயிலைகளை ஏற்றுமதிசெய்ய அல்லது மீள்பாவனைக்குட்படுத்த முன்னர் இலங்கை தேயிலை சபையினால் மீள் ஆய்வுக்குட்படுத்தப்படும்.

## FTA களின் கீழ் ஏற்றுமதிகளின் செயற்திறன்

இலங்கை, இந்தோ- இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (ISFTA) மற்றும் பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் (PSFTA) கீழ் தேயிலைக்கான விசேட வரி விகிதப் பங்கினை (TRQ) அனுபவிக்கின்றது. எவ்வாறாயினும், நிறைவுற்ற 2021 ஆம் வருடத்துக்கான TRQ இன் குறிப்பிடத்தக்க நுகர்வுகள் பதியப்படவில்லை.

அட்டவணை 2.2.4: FTA இன் கீழான TRQ இன் நுகர்வு (2021)

| FTA | வருடத்துக்கான பங்கு (கிலோகிராம்) | மொத்த ஏற்றுமதிகள் (கிலோகிராம்) |
|---|---|---|
| இந்தியா - இலங்கை | 15,000,000.00 | 74,006.46 |
| பாகிஸ்தான் - இலங்கை | 10,000,000.00 | 34,710.00 |

மூலம்: இலங்கை தேயிலை சபை

## தேயிலை ஏற்றுமதி பொதியிடல் தொழிற்சாலைகளை தரமுயர்த்தல் அல்லது நவீனமயப்படுத்தலுக்கான வடியுடனான மானியத்திட்டம்

மானியத்திட்டத்துக்கு தகுதியடைய ஏற்றுமதியாளர் ஒருவருக்கு ஐந்து வருட காலத்துக்கு அதியுயர்வாக 50% மான வட்டியை செலுத்தும்வகையில் மற்றும் அதியுயர்வாக 10% வட்டி விகித்தின் அதிகபட்ச உச்சவரம்புடன், வருடமொன்றுக்கு ரூபா ஐந்து மில்லியன் வரையான வட்டியுடனான மானியத்திட்டமொன்று இலங்கை தேயிலை சபையினால் அறிமுகம் செய்யப்பட்டது. நுகர்வோர் மற்றும் சர்வதேச தேயிலைச் சந்தையின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில், உற்பத்திகளின் பன்முகத்தன்மைகள், தர விருத்திகள் மற்றும் அதிக பெறுமதி சேர்ப்புக்கள் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கங்களுடன் மானியத்திட்டம் அறிமுகம்செய்யப்பட்டது. நிறைவுற்ற 2021 இல், இவ் மானியத்திட்டத்தின் கீழ் தங்களது களஞ்சியசாலைகளில் புதிய இயந்திரங்களை பொருத்துவதற்காக, 16 ஏற்றுமதியாளர்கள் விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்ததுடன், இதில் ஆறு ஏற்றுமதியாளர்களுடன் ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன.

# 2. 3"தேயிலை ஊக்குவித்தல் பிரிவு

நிறைவுற்ற 2021 ஆம் ஆண்டில், சிலோன் தேயிலையை சர்வதேச பானமாக ஊக்குவிக்கும் நோக்குடன் பல்வேறு சிலோன் தேயிலை ஊக்குவித்தல் திட்டங்கள் இலங்கை தேயிலை சபையினால் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கை தேயிலை சபையின் தேயிலை ஊக்குவித்தல் பிரிவானது, உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில், சிலோன் தேயிலை தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் நோக்குடன் தொழிற்படுவதுடன், இது கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரதான பிரிவுகளினுள் வகைபிரிக்கப்பட்டுள்ளது; இலங்கை தேயிலை சபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் உற்சாகமான வழிகாட்டலினால், ஊக்குவித்தல் பிரிவுடன் இணைந்து தொழிற்படும் அணிக்கு கோவிட் 19 தொற்றுக்காரணமாக ஏற்பட்ட தடைகளிலிருந்து மீளக்கூடியவாறு அமைந்தது. விசேடமாக, ஒன்றுகூடலினூடாக முன்னெடுக்கப்படும் ஊக்குவித்தல் நிகழ்வுகளை நடாத்தமுடியாத தருணங்களிலும், அத்தடைகளை வாய்ப்புக்களாக மாற்றி, சிலோன் தேயிலையை உலகிலேயே சிறந்த பானமாக நிலைநிறுத்திய பெருமை இப்பிரிவினரையே சாரும். ஊக்குவித்தல் பிரிவுகள் நாட்டுக்கு வெளியே ரஷ்யா, சீனா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலும் இயங்குவதுடன், சிலோன் தேயிலையின் ஊக்குவிப்புக்காக பிராந்திய அடிப்படையில் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்துவருகின்றன. இலங்கையில், தேயிலை ஏற்றுமதியாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் குழு (PMC) அதிகளவான நுகர்வோரைக் கவரும் வகையிலான பல்வேறு ஊக்குவித்தல் மூலோபாயங்களை நிறுவுவதற்கான சரியான நோக்குடன் போதுமானளவு வழிகாட்டல்களை வழங்குகின்றது. வெளிநாட்டு அமைச்சினால் வழங்கப்பட்ட ஒருங்கிணைப்பு மற்றும் ஆதரவுடன், சர்வதேச நோய்த்தொற்றுக் காலத்தில் நாட்டுக்கு வெளியே பல்வேறு இலங்கை தூதுக்குழுக்கள் நிறுவப்பட்டன.

ஊக்குவித்தல் திட்டங்களுக்கான நிதிகள், ஒவ்வொரு பதிவுசெய்யப்பட்ட தேயிலை ஏற்றுமதியாளர்களிடமிருந்தும், தேயிலையை ஏற்றுமதி செய்வதற்காக CUSDE இன் அனுமதினைப் பெறும்பொருட்டு, இலங்கை தேயிலை சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் அறவிடப்படும் ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் வரியினூடாக திரட்டப்படுவதுடன், இது கிலோகிராமுக்கு ரூபா 3.50 ஆக அமைகின்றது. விதிமுறைகளின் பிரிவுகளுக்கமைவாக திரட்டப்பட்ட அனைத்து நிதிகளும், இலங்கை தேயிலை சபையினால் தீர்மானிக்கப்பட்ட பிரத்தியேகமான வங்கிக்கணக்கில், சபையின் மூலதன நிதியாக வைப்பிலிடப்படும்.

இவ்விதிமுறைகளை தொழிற்படுத்துகையில் (அரச வர்த்தமானி இல 167714, 2010 ஒக்டோபர் 27), இலங்கை தேயிலை சபையின் வங்கிக்கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ள பணமானது, இலங்கையில் மற்றும் இலங்கைக்கு வெளியில் முன்னெடுக்கப்படும் தேயிலை ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் மூலோபாயங்களுடன் தொடர்புடைய தொழிற்பாடுகளுக்காக முழுமையாகப் பயன்படுத்தப்படும். ஆனால், நிறைவுற்ற 2021 ஆம் ஆண்டில், தேயிலைப் பிரிவிலான அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக கோரப்பட்ட நிதிக்கான அனுமதி, தேயிலைத் தொழிற்துறையின் நீண்டுநிலைபெறும் தன்மையினை உறுதிப்படுத்தும் வகையில், தேயிலை நாற்றுப்பண்ணைகளை நிறுவுதல், கூட்டெரு/ உயிரியல் உரங்களை உற்பத்திசெய்யும் ஆலைகளை நிறுவுதல், சூரிய சக்தி கலங்களுக்கான மானியங்களை பகிந்தர்ந்தளித்தல் மற்றும் மேலும் பல அபிவிருத்தித் திட்டங்களைக் கவனத்திற்கொண்டு PMC யினால் வழங்கப்பட்டது.

## பிரிவின் பிரதான தொழிற்பாடுகள்

இலங்கை தேயிலை சபையின் தேயிலை ஊக்குவித்தல் பிரிவானது, உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில், சிலோன் தேயிலை தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் நோக்குடன் தொழிற்படுவதுடன், இது கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரதான பிரிவுகளினுள் வகைபிரிக்கப்பட்டுள்ளது;

- G சிலோன் தேயிலையின் ஒற்றைத் தேசிய ஊக்குவிப்பு
- GG தேயிலைக்கான பொதுவான ஊக்குவிப்பு நிகழ்வுகள்
- GGG இலங்கைக்கே உரித்தான சிங்க இலட்சனையின் தர அடையாளத்துக்குரிய ஊக்குவிப்புக்களை முன்னெடுத்தல்
- GV. சர்வதேச உணவு மற்றும் பானங்களுக்கான வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் பொருட்காட்சிகளில்பங்குபற்றுதல்
- V. அனைத்து முக்கியமான தேயிலை நுகரும் நாடுகளுக்கும், மூலோபாய சந்தைத் தோற்றமைப்பினை தொகுத்தலும், பரவச்செய்தலும்
- VG தேயிலைப் பகுதிக்கான கொள்கை உருவாக்கத்துக்காக பெருந்தோட்டத் தொழிற்துறை அமைச்சுக்கு உதவுதல்
- VGG போட்டியாளர்களின் செயற்பாடுகளை ஆராய்தல்
- VGGG சிங்க இலட்சனையை பதிவுசெய்தல் மற்றும் கண்காணித்தலுடன், தனியார்த்துறை பொதியாளர்களுக்கான அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல்
- IX. சிலோன் தேயிலை மற்றும் ஏனைய பிராந்திய தேயிலை வளர்ப்புப் பெயர்கள்/ இலட்சனைகளை புவியியலுக்குரிய குறிகாட்டிகளாகப் பாதுகாத்தல்
- X. ஓசோன் நட்புடைய தூய தேயிலையின் இலட்சணையை பதிவுசெய்தலும், தனியார்த்துறை பொதியாளர்களுக்கான அனுமதிப்பத்திரத்தினை வழங்குதலும்
- XI. உள்ளூர் தேயிலை ஊக்குவிப்பு நடவடிக்கைகள்

# சிலோன் தேயிலையின் ஒற்றைத் தேசிய ஊக்குவிப்பு

சிலோன் தேயிலையின் ஒற்றைத் தேசிய ஊக்குவிப்பு செயற்பாடானது, "சிலோன் தேயிலைக்கான" பிரபல்யம் மற்றும் விளம்பரத்துடன் தொடர்புடையதாக விளங்குகின்றது. இலங்கைக்கான வெளிநாட்டு தூதுக்குழுவின், சர்வதேச தேயிலை ஊக்குவித்தல் அலகுகள் மற்றும் வர்த்தகப் பிரிவுகளினூடாக, வெளிநாட்டு சந்தைகளில், சிலோன் தேயிலைக்கான ஒற்றைத் தேசிய ஊக்குவிப்பு பிரச்சாரங்கள் தேயிலை சபையினால் அறிமுகம் செய்யப்பட்டது.ஊடக விளம்பரங்கள், வெளியக விளம்பரங்கள், தேநீர் சேவைகள், தேயிலை பயிற்சிப்பாசறைகள் மற்றும் கருத்தரங்குகள் மற்றும் ஏனைய பொதுமக்களுடன் உறவான செயற்பாடுகள் போன்றன சபையினால் முன்னெடுக்கப்பட்ட, ஒற்றைத் தேசிய ஊக்குவிப்பு பிரச்சாரங்களின் பிரதான கூறுகளாக விளங்குகின்றன.

### சிலோன் தேயிலை உற்பத்தியின் நிலைப்படுத்தல் அணுகுமுறை

நம்பகத்தன்மை - நிலையானதன்மையின் சான்றுகள்

- நான் கொள்வனவு செய்த தேயிலையானது உண்மையான உற்பத்தியாகும்
- நிலையானதன்மையின் சான்றுகளை ஒத்திருத்தல் - சுற்றாடல் மற்றும் சமூக நல்வாழ்வு ஆகிய இரண்டுக்கும்

சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு - சிலோன் தேயிலையின் தூய்மை

- நான் கொள்வனவுசெய்த உடல்நலத்துக்கான உணவுகள், எனது உணவுப்பழக்கத்துக்கு சிறந்தவையாகும்.
- நான் மிகவும் சீரான கனிப்பொருட்களை உள்ளடக்கிய உணவுகளை உட்கொள்வதை உறுதிசெய்கின்றேன்.

முதற்தர சிலோன் தேயிலை

- நான் பெரும்பாலும் சிறந்த தரமான உணவு மற்றும் பானங்களுக்கே செலவு செய்கின்றேன்
- செலவுகள் அதிகமாகமாக இருப்பினும், நான் இன்னும் நம்பகத்தன்மையான உணவுகளையே கொள்வனவு செய்கின்றேன்

# சிலோன் கறுப்புத்தேயிலைப் சர்வதேச பிரச்சாரம்

இப் பிரச்சாரமானது, சிறந்த உடல் நலம் மற்றும் நோயெதிர்ப்பு சக்தியை தூண்டுவதற்கான தனிச்சிறப்புமிக்க பானமாக சிலோன் கறுப்புத்தேயிலையின் சாயலைக் கட்டியெழுப்புதல், "உலகிலேயே சிறந்த தேயிலையாக" சிலோன் தேயிலையை மீள்-நிறுவுதல் மற்றும் கறுப்புத் தேயிலையின் உடல்நலன்கள் குறித்த விழிப்புணர்வை சர்வதேசரீதியில் நுகர்வோருக்கு மெருகூட்டுதல், ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு நிறைவுற்ற 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமுல்படுத்தப்பட்டது.

இப் பிரச்சாரமானது, சிலோன் கறுப்புத் தேநீர், நோயெதிர்ப்பு சக்தியை தூண்டுவதற்கான தனிச்சிறப்புமிக்க பானமாகவும் (விஞ்ஞான சான்றுகள் மற்றும் ஆதாரங்களை அடிப்படையாகக்கொண்டு), சூடான தேயிலைப்பானம் (சீனி மற்றும் பால் இல்லாமல்), உடல்நலக்காரணிகளுடன் தொடர்புடையது, நோய்த்தொற்றின் தனிமைப்படுத்தல் காலத்தில் ஓய்வுடன் குடும்பத்தினருடன் சூடான சிலோன் கறுப்புத்தேநீரை ருசிக்கக்கூடிய வாய்ப்புக்கள் மற்றும் சமூக இடைவெளியில் விருப்பமானவர்கள் மற்றும் உறவு உறவுகளுடன் சூடான தேநீரை பருகிமகிழ்தல் எனும் செய்திகளை தங்கியதாக அமையப்பெற்றது. அதிகளவான நுகர்வோரை இலக்காகக்கொண்டு, முகப்புத்தகம், டிவிட்டர், இன்ஸ்ரகிராம், யூடியூப், ஜான்டேக்ஸ், வீ சட், மேலும் பல சமூக ஊடகங்கள் மூலமான பிரச்சாரமும் முன்னெடுக்கப்பட்டது.

Map 2.3.1 சிலோன் கறுப்புத்தேயிலைப் சர்வதேச பிரச்சாரம்

*சமூக ஊடகத்தளங்களினுடாக "சிலோன் தேயிலை - சர்வதேச ரீதியில் மிகப்பிடித்த பானமாக" தூண்டும் நோக்குடன், "கறுப்புத் தேயிலை ஊக்குவிப்புப் பிரச்சாரம் , ரூபா 35 மில்லியன் முதலீட்டுடன் 2021, ஜனவரியில் நடந்தேறியது. இதில் ரஷ்யா, உக்கிரேன், ஜப்பான், சீனா, ஜேர்மனி, அமெரிக்கா, சிலி, அவுஸ்திரேலியா,சவூதிஅரேபியா, துருக்கி, ஐக்கிய அரபு இராட்சியம் மற்றும் ஈரான் ஆகிய 12 நாடுகள் இலக்குவைக்கப்பட்டன.*




மூலம் மூலம்:www. facebook.com சர்வதேச அடைவு மேற்றிக்ஸ்,2021

# Impact on a Global Scale



## சமூக ஊடகங்கள் - ஐக்கிய இராட்சிய பிரச்சாரம்

ஐக்கிய இராட்சிய பிரச்சாரம், ஐக்கிய இராட்சிய சந்தையில் இழப்புக்களை மீளப்பெறும் வகையில் 10,000 அமெரிக்க டொலர்களை முதலீடாகக்கொண்டு, புகப்புத்தகம் மற்றும் இன்ஸ்டகிராம் போன்ற சமூக வலைத்தளங்களினூடாக “சிலோன் தேயிலை - உலகில் சிறந்த விருப்பமான பானமாக” தூண்டுவதை இலக்காகக்கொண்டு மேற்கொள்ளப்பட்டது. கறுப்புத் தேயிலைக்காக தயாரிக்கப்பட்ட டிஜிட்டல் தொழினுட்ப ஆக்கங்கள் இப்பிரச்சாரத்தில் பயன்படுத்தப்பட்டன.

Map 2.3.2: Impact on UK




*சிலோன் தேயிலை தொடர்பான விழிப்புணர்வை அதிகரித்தல் மற்றும் ஐக்கிய இராட்சியத்தில் தேயிலை நுகர்வோரின் கவனத்தினை ஈர்க்கும் வகையில், மூன்று மாத டிஜிட்டல் தொழினுட்பப் பிரச்சாரம் (ஜூன் - ஆகஸ்ட் 2021) முன்னெடுக்கப்பட்டது.*





## சமூக ஊடகப் பிரச்சாரம் - சர்வதேச தேயிலை தினம்

தேயிலையின் பொருளாதார, உயிரியல் மற்றும் பௌதீக நன்மைகளை வெளிப்படுத்தும் வகையில், சர்வதேச தேயிலை தினம் வருடாந்தம் மே மாதம் 21 இல், இலங்கை தேயிலை சபையினால் கொண்டாடப்படுகின்றது. இதனடிப்படையில், 2 வது சர்வதேச தேயிலை தினம் மே மாதம் 21 இல் சர்வதேச ரீதியில் “தேயிலை மற்றும் நியாயமான வர்த்தகம்” எனும் தலைப்பில் கொண்டாடத் திட்டமிடப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியில் நிலவிய நோய்த்தொற்றுக்காரணமாக, டிஜிட்டல் தொழினுட்பப் பிரச்சாரம் மே மாதம் 21, 2021 இல் ஆரம்பித்து தொடர்ச்சியாக பத்து நாட்கள் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக பதின்நான்கு நாடுகள் இலக்குவைக்கப்பட்டுள்ளதுடன், இதில் ரஷ்யா, உக்கிரேன், ஜப்பான், சீனா, ஜேர்மனி, அமெரிக்கா, சிலி, அவுஸ்திரேலியா,சவூதிஅரேபியா, துருக்கி, ஐக்கிய அரபு இராட்சியம் மற்றும் ஈரான், ஐக்கிய இராட்சியம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் அடங்குகின்றன.

## TOTAL COUNTRY REACH

Achieved projected in 10 day campaign

| Country | Reach % | Achieved | Projected |
|---|---|---|---|
| Australia | 133% | 831 Thousand | 625 Thousand |
| Chile | 140% | 2.20 Million | 1.57 Million |
| China | 171% | 1.02 Million | 600 Thousand |
| Germany | 177% | 929 Thousand | 525 Thousand |
| Iran | 169% | 632 Thousand | 375 Thousand |
| Japan | 179% | 1.47 Million | 825 Thousand |
| Russia | 132% | 3.95 Million | 3.01 Million |
| Saudi Arabia | 390% | 3.705 Million | 950 Thousand |
| Sri Lanka | 206% | 3.01 Million | 1.46 Million |
| Turkey | 152% | 4.92 Million | 3.25 Million |
| United Arab Emirates | 234% | 1.57 Million | 675 Thousand |
| Ukraine | 136% | 2.5 Million | 1.85 Million |
| United Kingdom | 139% | 1.03 Million | 750 Thousand |
| United States of America | 133% | 946 Thousand | 710 Thousand |










## நீண்டகாலப் பிரச்சாரம்: சர்வதேச ஊக்குவித்தல் பிரச்சாரம்

சிலோன் தேயிலைக்கான சர்வதேச பிரச்சாரத்தில், ரஷ்யா, உக்கிரேன், ஜப்பான், சீனா, ஜேர்மனி, அமெரிக்கா, சிலி, அவுஸ்திரேலியா,சவூதிஅரேபியா, துருக்கி, ஐக்கிய அரபு இராட்சியம் மற்றும் ஈரான் ஆகிய 12 நாடுகளின் சந்தைகளை இலக்காகக்கொண்டு முன்னெடுக்கப்படுகின்றது.

இப்பிரச்சார நடவடிக்கைகளில் பின்வரும் மூன்று பிரதான கூறுகளை கையாள்வதற்கான கேள்விமனுக்கோரல் மூன்று நிறுவனங்களிடத்தில் கோரப்பட்டுள்ளது. i) சில்போ மேற்தச்சந்தையுடன் இணைந்து பிரச்சாரத்தின் ஆக்கபூர்வமான முறையில் உருவாக்கப்பட்ட பகுதியை அறிமுகப்படுத்தல்; ii) ஊடக திட்டமிடல், அட்டவணைப்படுத்தல் மற்றும் ஊடகக்கொள்வனவு உள்ளடங்களாக ஊடகக் கூறுகள்; iii) பொதுமக்களுடன் தொடர்புபட்ட பிரச்சாரம்.

- சர்வதேச ரீதியாக நிலவுகின்ற கோவிட் - 19 நோய்த்தொற்றினால் ஏற்படக்கூடிய தாக்கங்களை தணிக்கும் வகையில், சில வெளிநாட்டு தூதுரகங்களினால் முன்வைக்கப்பட்ட விதிமுறைகளை அடிப்படையாகக்கொண்டு, ஏற்றுமதி ஆவணங்களை தூதுரகங்களினூடாக அனுப்புவதற்கான வழிமுறைகள் இலங்கை தேயிலை சபையினூடாக ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டன.
- சமூகஊடகப் பிரச்சாரங்கள் - இலங்கை அமைப்புகளினூடாக வெளிநாடுகளில் 6 இணையத்தள பதாகைகள், ஏப்பிரல் தொடக்கம் மே வரையான காலப்பகுதியில் காட்சிப்படுத்தப்பட்டன.

தற்போதைய சர்வதேச நிலையினைக் கவனத்திற்கொண்டு, கால அட்டவணையுடன் பிரச்சாரத்தினை சமூக/ டிஜிட்டல் தளத்தினூடாக முன்னெடுப்பது சிறந்ததென PMC யினால் தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், பிரச்சாரத்தின் வெற்றியினை ஆராய்வதை நோக்காகக்கொண்டு தேடல் தள சந்தைப்படுத்தல் மற்றும் பிரதான கருத்தாளரின் ஊக்குவித்தல் பிரச்சார நடவடிக்கைகள் (செல்வாக்குச் செலுத்துபவரின் சந்தைப்படுத்தல் பிரச்சாரம்) செயற்படுத்தப்படவுள்ள, ரஷ்யா மற்றும் உக்கிரேன் ஆகிய நாடுகளிலிருந்து பிரச்சாரத்தினை அமுல்படுத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டது. இதன் பிரகாரம்,

KOLs வாடகைக்கமர்த்தல் மற்றும் கேள்விமனுக்கோரலை முகாமைசெய்தல் மற்றும் ரஷ்யா மற்றும் உக்கிரேனில் சர்வதேச விளம்பரப் பிரச்சாரத்தினை நிறைவேற்றுவதற்காக மார்ச், 2021 இல் தேடல் பொறியினை மேம்படுத்துவதற்கான அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றது. இவ் ஒப்பந்தத்தினை நிறைவேற்றுவதற்கான அனுமதி சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு அமைச்சிடமிருந்து பெறப்பட்டது. அத்துடன்,
ஜப்பானில் சர்வதேச பிரச்சாரத்தினை முன்னெடுப்பதற்காக பொருத்தமான அமைப்பினை தெரிவுசெய்வதற்கான கொள்முதல் செயற்பாடுகள் ஆகஸ்ட் இலிருந்து ஆரம்பிக்கப்பட்டதுடன், இதற்கான கேள்விமனுக்கோரல் திசம்பர் 2021 இல் ஆரம்பிக்கப்பட்டது.
ஊடக செயற்படுத்தல் திட்டங்கள் ஜப்பான், சீனா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளில் 2021 இல் நிறைவுசெய்யப்பட்டன.
சர்வதேச பிரச்சாரத்துக்கான ஏழு மொழிகளிலான இணையத்தளம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டதுடன், "எங்கே கொள்வனவு செய்யமுடியும்" எனும் வசதிகளும் நிறுவப்பட்டன.

## வர்த்தகக் கண்காட்சியில் பங்குபற்றுதல்

சர்வதேச வர்த்தகக் கண்காட்சிகளில், தெரிவு செய்யப்பட்ட சந்தைகளில் "சிலோன் தேயிலையை" தேசிய வியாபாரக்குறியாகவும், பங்குபெறும் நிறுவனங்களின் தனிப்பட்ட வியாபாரக்குறியாகவும் ஊக்குவிக்கும் வகையில், இலங்கையில் தேயிலை ஏற்றுமதிசெய்யும் நிறுவனங்களின் பங்களிப்பினை உள்வாங்குதல் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளும் இலங்கை தேயிலை சபையினால் வழிநடத்தப்படுகின்றன. கண்காட்சிக்கான இட வாடகை மற்றும் கண்காட்சித் தொகுதியை நிர்மாணிப்பதற்கான செலவுகளில் 50% இலங்கை தேயிலை சபையின் மானியமாக ஒதுக்கப்படுகின்றது. மிகுதியான செலவுகள் தெரிவுசெய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து அறவிடப்படும். இலங்கை தேயிலை சபையினால் கீழ்வரும் வர்த்தகக்கண்காட்சிகள் நடாத்தப்பட்டு பங்களிப்புச்செலுத்தப்பட்டதுடன், உலகளாவிய ரீதியில் நிலவிய நோய்த்தொற்றுக் காரணமாக 2021 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட திட்டமிடப்பத்திருந்த வர்த்தக்கண்காட்சிகள் நீக்கப்பட்டன/பிற்போடப்பட்டன.

### • கல்வ் பூட் 2021 - துபாய்

துபாயில் 2021 இல் நடாத்தப்பட்ட முன்னெடுக்கப்பட "கல்வ் பூட் 2021 - துபாய்" வர்த்தகக்கண்காட்சியில் இலங்கை ஏற்றுமதியாளர்கள் வெற்றிகரமான முறையில் பங்கேற்றனர். இலங்கைக்கான கூடாரத்தில், இலங்கையிலிருந்து உணவு மற்றும் பானங்களை ஏற்றுமதிசெய்யும் பதினொரு ஏற்றுமதியாளர்கள் பங்கேற்றதுடன், இது துபாய் உலக வர்த்தக மையத்தில் பெப்ரவரி 21 -25, 2021 வரையான காலப்பகுதியில் நடாத்தப்பட்டது.





### • துபாயில் நடைபெறும் சர்வதேச வர்த்தகக்கண்காட்சியில் சிலோன் தேயிலையை ஊக்குவித்தல்

இவ் வர்த்தகக்கண்காட்சி துபாயில் அக்டோபர் 1, 2021 தொடக்கம் மார்ச் 31, 2022 வரையான காலப்பகுதியில் நடைபெற்றது. இதில் மொத்தமாக 190 நாடுகள் பங்கேற்றதுடன், மனங்களை ஒருங்கிணைத்தல், எதிர்காலத்தினை உருவாக்குதல்" எனும் எண்ணக்கருவின் கீழ் ஆறு மாதங்கள் நடைபெற்றது. இவ் வர்த்தகக்கண்காட்சியில் மூன்று துணைக் கருப்பொருட்கள் உள்ளடங்குவதுடன்; தங்களுக்குரிய அரங்குகளில் வாய்ப்புக்கள், இயக்கங்கள் மற்றும் நிலையானதன்மையை உள்ளடக்குகின்றது. இக்கண்காட்சியில் உலகளாவிய ரீதியில் 25 மில்லியன் மக்கள் பங்கேற்பார்கலென எதிர்வுகூறப்படுகின்றது. இக்கண்காட்சியில் இலங்கைக்குரிய அரங்கானது "வாய்ப்புக்கள்" எனும் துணைக்கருப்பொருளின் கீழ் வருவதுடன், இதில் இலங்கையில் பங்களிப்பானது, இலங்கை சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் பணியகத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டது.

சிலோன் தேயிலைக்கான மத்திய கிழக்கு சந்தையின் முக்கியத்துவத்தினை அடையாளங்கண்டதுடன், தற்போதைய நிலையில் இப்பிராந்தியமானது, இலங்கையின் மொத்த தேயிலை ஏற்றுமதியில் ஏறக்குறைய 55% மான பகுதியைக் கொண்டுள்ளதுடன், இப்பிராந்தியத்தில் சிலோன் தேயிலையின் நிலையினை மேலும் வலுப்படுத்தும் பொருட்டு, இலங்கை தேயிலை சபையானது, இலங்கை சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் பணியகத்துடன் இணைந்து, துபாயில் ஆறு மாதகாலத்துக்கு நடைபெறவுள்ள வேர்ல்ட் எக்ஸ்போ வர்த்தகக்கண்காட்சியில், இலங்கைக்கான அரங்கில் கலந்துகொண்டு, சிலோன் தேயிலையை ஊக்குவிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கைக்கென தனியாக ஒதுக்கப்பட்ட இவ் அரங்கில், சிலோன் தேயிலையின் தனித்துவத்தினை பிரதிபலிக்கும் வகையிலான, சிலோன் தேயிலை ஊக்குவித்தல் வீடியோக்காட்சிகள் மற்றும் புகைப்படங்கள் மற்றும் ஏனைய வரைகலை வெளிப்படுத்தல்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. வர்த்தகக்கண்காட்சிக் காலத்தில், சிலோன் தேயிலையின் உண்மையான சுவையினை அனுபவிக்கும் வகையில், பார்வையாளர்களுக்கான சிலோன் தேயிலை அமர்வுகள் மற்றும் தேநீர் சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இலங்கைக்கான அரங்கில், சர்வதேச பிரபல்யம்வாய்ந்த சிலோன் தேயிலையின், இலையிலிருந்து தேநீர்க்கோப்பை வரையான ரகசியத்தினை அறியக்கூடிய சந்தர்ப்பம் பார்வையாளர்களுக்குக் கிடைப்பதுடன், சிலோன் தேநீரை ருசிப்பதற்கான வாய்ப்பும் கிட்டுகின்றது.






## • ப்ரோ எக்ஸ்போ - 2021

உணவுப்பொருட்கள், பானங்கள் மற்றும் உற்பத்திகளுக்காகப் பயன்படுத்தும் மூலப்பொருட்களுக்கான 28 வது வருடாந்த சர்வதேசக் கண்காட்சியில், சிலோன் தேயிலைக்கான ஊக்குவித்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன - ப்ரோ எக்ஸ்போ - 2021 மொஸ்கோவில் ஏப்பிரல் 12, 2021 இல் ஆரம்பிக்கப்பட்டு, எப்பிரல் 16, 2021 வரை ஐந்து நாட்கள் நீடிக்கப்பட்டது.

கண்காட்சியில் சிலோன் தேயிலைக்காக ஒதுக்கப்பட்ட பகுதியில் நூற்றுக்கணக்கான பார்வையாளர்கள் கவரப்பட்டதுடன், இவை இலங்கையின் தனித்துவமான ஏழு வலயங்களுக்குரிய சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளதுடன், ரஸ்யாவில் பிரபல்யமான பிரதான தேயிலைத் தரங்களாகும். மேலும், கண்காட்சியில் பிரபல்யமான சிலோன் தேயிலை வகையான, ஜெபர்ஜீ சகோதரர்களின் JAF தேயிலைக்கான காட்சியகமும் பங்குபற்றியதுடன், தங்களது உற்பத்திகளை காட்சிப்படுத்தினர். மேலும், கண்காட்சியில் இலங்கை பாரம்பரிய உடையான ஒசரியை அணிந்த ரஷ்ய வர்ணனையாளர்களினால், பார்வையாளர்களுக்கான சிலோன் தேநீர் கோப்பைகள் வழங்கப்பட்டிருந்தன.

## • வேர்ல்ட் பூட் மொஸ்கோ - 2021

கண்காட்சி IEC "குரோகஸ் எக்ஸ்போ" 2021 இல் செப்டம்பர் 21 முதல் 24 வரை நடைபெற்றது. மேலும், சிலோன் தேயிலைக்கான அரங்கத்தில், TPU மொஸ்கோ, சிலோன் தேயிலை காணி தனியார் நிறுவனம் மற்றும் ஹவுசல்யா தேயிலை ஏற்றுமதியாளர்கள் தனியார் நிறுவனம் ஆகியன இணைந்து கண்காட்சியில் பங்கேற்றன.

ரஸ்யாவில் நடைபெறுகின்ற மிகப்பெரிய இலையுதிர்கால கண்காட்சியாக "வேர்ல்ட் பூட் மொஸ்கோ" திகழ்வதுடன், பரந்துபட்ட நியாயமான மற்றும் அதியுயர் தரமுள்ள தேயிலை உற்பத்திகள் காட்சிப்படுத்தப்பட்டன. இவ்வருடம், அதிகளவான உணவுச்சந்தை நிபுணர்களை உள்ளடக்கிய பார்வையாளர்களுக்காக, ரஷ்யா மற்றும் வெளிநாடுகளின் 600 க்கும் மேற்பட்ட உணவு மற்றும் பானங்களின் உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குனர்கள் தங்களது சிறந்த புதிய உற்பத்திகளை காட்சிப்படுத்தினர். சிலோன் தேயிலைக்கான அரங்கத்தில் அதிகளவான பார்வையாளர்கள் கவரப்பட்டதுடன், அவர்களுக்காக, இலங்கையின் ஏழு வலயங்களை பிரதிநித்துவப்படுத்தும் சூடான புத்துணர்ச்சியுள்ள தேநீர்ப்பானமும் வழங்கிவைக்கப்பட்டது.

## • பீற்றர்பூட் 2021 கண்காட்சி, சென்ட் பீற்றர்பேர்க்

இலங்கை தேயிலை சபை உணவு உற்பத்திகளுக்கான 30 வது ஜுபிலி கண்காட்சியான "பீற்றர்பூட்" கண்காட்சியில் கலந்துகொண்டதுடன், இது 2021 இல் நொவம்பர் 16 முதல் 18 வரையான காலப்பகுதியில் சென்ட் பீற்றர்பேர்க் நகரத்தில் எக்ஸ்போபோரத்தில் நடைபெற்றது. இது ரஷ்யாவின் வட-மேற்குப் பகுதியில் பிரதான கண்காட்சியாக விளங்குவதுடன், ரஷ்யாவின் அதியுயர் பங்குகளை உள்ளடக்கிய சில்லறை வர்த்தகத்தினைக் கொண்ட இரண்டாவது பெரிய நகரமாகத் திகழ்கின்றது (80% க்கும் அதிகமானது, இது சராசரி ஐரோப்பிய மட்டத்தின் சுட்டிக்காட்டியாக அமைகின்றது).

## • வேர்ல்ட் பூட் உக்கிரேன் 2021 - கிவ்

இக் கண்காட்சியானது, கிவ்வில் அமைந்துள்ள சர்வதேச விவரணப்படுத்தல் நிலையத்தில் 2021 இல் நொவம்பர் 2 தொடக்கம் 4 வரையான காலப்பகுதியில் நடந்தேறியது. இலங்கை தேயிலை சபையுடன் இணைந்து, UHE ஏற்றுமதி தனியார் நிறுவனமும், இக்கண்காட்சியில் கலந்துகொண்டது. இக்கண்காட்சியானது, ரஷ்யா மற்றும் ஏனைய நாடுகளின் உணவு உற்பத்திகள் மற்றும் பானங்களின் உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குனர்கள், செயற்படுத்தல் நிறுவனங்கள், பகிர்ந்தளிப்பவர்கள், ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள், உணவு உற்பத்தி விற்பனையாளர்கள், உணவக வர்த்தகர்களை இலக்காகக் கொண்டதாகும்.

## • இலங்கை திளை சபை, மொஸ்கோவில் நடைபெற்ற "கோப்பி தேயிலை கொக்கோ ரஷ்ய கண்காட்சி 2021 - இல் கலந்துகொண்டது

வருடாந்த தேசிய தகுதிக்கான போட்டிக்கு மேலதிகமாக, ரஷ்யாவின் தேயிலை மாஸ்டர் கோப்பையானது, நாட்டில் இக் கண்காட்சிக்கட்டமைப்புக்குள் நடைபெறும் மிகவும் கவர்ச்சியான தேயிலையுடன் தொடர்புடைய செயற்பாடாகத் திகழ்கின்றது. இந்நிகழ்வுகள், அதியுயர் தேயிலைக் கலாச்சாரத்தினை உருவாக்குதல், தேயிலை தொழில்நிபுணர்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் ரஷ்யாவில் தேயிலைக்கான கேள்வியை மேலும் விருத்திசெய்தல் போன்றவற்றை நோக்காகக்கொண்டவையாகும்.

## • டமாஸ்கஸ் சர்வதேச வர்த்தகக்கண்காட்சி - சிரியா

இலங்கையில், லெபனான் மற்றும் சிரியாவுக்கான வெளிநாட்டு தூதரகம் மற்றும் இலங்கை தேயிலை சபை ஆகியன இணைந்து, டமாஸ்கஸ் சிரியாவில், டமா விடுதியில், 2021 அக்டோபர் 9 இல் நடைபெற்ற சர்வதேச சந்தையில், சிலோன் தேயிலை மற்றும் கைப்பணிப் பொருட்களை காட்சிப்படுத்துவதனூடாக கலந்துகொண்டனர். இதில் சர்வதேச ரீதியில் 19 நாடுகள் கலந்துகொண்டதுடன், இலங்கையின் காட்சியகம் தனிச்சிறப்புமிக்கதாகத் திகழ்ந்தது.




## • சர்வதேச தேயிலைக் கண்காட்சி - அமெரிக்கா

லொஸ் எஞ்சலிலுள்ள துணைத் தூதரகத்தின் உதவியுடன், இலங்கை தேயிலை சபையானது சர்வதேச தேயிலைக் வர்த்தகக்கண்காட்சி - 2021 ஜூன் மற்றும் லாஸ் வேகாஸ் - 2021 ஆகிய இரு வர்த்தகக்கண்காட்சிகளில் பங்கேற்றது. வட அமெரிக்காவில் நடைபெறும் தேயிலைத் தொழிற்துறையுடன் தொடர்புடைய மிகப்பெரிய வருடாந்த அமர்வு மற்றும் வர்த்தகக்காட்சியாக சர்வதேச தேயிலைக் கண்காட்சி விளங்குகின்றது. இவ்வருடத்துக்கான கண்காட்சியில், இலங்கை தேயிலை சபையை பிரதி துணைத் துதரகம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

## • “சிலோன் உற்பத்திகள் - நட்புறவை வளர்த்தல்” கண்காட்சி மற்றும் தேயிலை பங்குதாரர்களின் ஒன்றுகூடல், தெஹெரன் - ஈரான்

ஈரானிலுள்ள இலங்கை தூதரகம், இலங்கை தேயிலை சபையுடன் இணைந்து, “சிலோன் உற்பத்திகள் - நட்புறவை வளர்த்தல்” எனும் விவசாய ஏற்றுமதிக் கண்காட்சியை, தேயிலைப் பங்குதாரகளின் ஒன்றுகூடலுடன் 2021, திசம்பர் 6 இல் சென்சரி வளாகத்தில் ஒழுங்குசெய்தது. இதில் தேயிலைக் குழுக்கள், முதற்தர இறக்குமதியாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் முன்னிலை வகிக்கும் வியாபாரிகள் மற்றும் ஊடக நபர்கள் உள்ளிட்ட 75 க்கும் மேற்பட்ட உரிய பங்குதார்கள் பங்கேற்றனர். இலங்கைத் தேயிலை மற்றும் ஏனைய விவசாய உற்பத்திகளை ஈரானியச் சந்தையில் பிரபல்யமடையச் செய்தல் மற்றும் உரிய பங்குதாரர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதே இந்நிகழ்வின் நோக்கமாக அமைந்தது,




## • இக்கெபானா சர்வதேச கண்காட்சி 2021 - ஜப்பான்

ரோயல் பார்க் விடுதியில், 2021 திசம்பர், 14 இல் நடைபெற்ற இக்கெபானா சர்வதேச கண்காட்சி 2021 இல் இலங்கை தூதுக்குழுவும் பங்கேற்றது. இக்கண்காட்சியானது HIH அரசியினால் தலைமைவகிக்கப்பட்டதுடன், அவரி இலங்கைக் காட்சியகத்தினை பார்வையிட்டு, சிலோன் தேயிலையின் ஒரு பெட்டியை கொள்வனவு செய்தார்கள். இலங்கை காட்சியகத்துக்கு அதிகளவான பார்வையாளர்கள் வருகைதந்ததுடன், திரட்டப்பட்ட JPY 80,500/- தொகையானது சமூக வேலைகளுக்காக, இக்கெபானா சர்வதேச கண்காட்சி ஏற்பாட்டுக்குழுவினரிடம் நன்கொடையாக வழங்கப்பட்டது.






- இஸ்தான்புல் சர்வதேச உணவு வர்த்தகக்கண்காட்சியில் சிலோன் தேயிலை ஊக்குவிப்பு - துருக்கி
- 54 வது கைரோ சர்வதேச கண்காட்சியில் சிலோன் தேயிலை ஊக்குவிப்பு - 2021 செப்டம்பர் 30 முதல் ஒக்டோபர் 08 வரை
- இலங்கை தேயிலை சபையானது, சர்வதேச உணவு வார்சோ மற்றும் கோடைகால ஆடம்பர உணவு மெய்நிகர் நிகழ்வில் பங்கேற்றது

# வியாபாரக்குறி ஊக்குவித்தல் திட்டம்

இலங்கை தேயிலை சபையினால் 2021/2022 ஆம் வருடத்துக்கான வியாபாரக்குறி ஊக்குவித்தல் மானியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் பிரகாரம், சிங்க இலட்சனையைக் கொண்ட, தூய சிலோன் தேயிலையானது உரிய நிதியுதவிகளினூடாக ஊக்குவிக்கப்படும் (50% ஊக்குவித்தல் செலவீனம்). இத்திட்டத்தின் கீழ் இலங்கையில் அறிவுசார் சொத்து அலுவலகத்தில், பணிப்பாளர் நாயகத்தினால் பதிவுசெய்யப்பட்ட, இலங்கைக்கே உரித்தான தேயிலை வர்க்கங்கள் மாத்திரம், ஊக்குவித்தல் உதவிகளைப் பெற தகுதியுடையவைகளாக விளங்குகின்றன. இத்திட்டத்துக்கான நிதியானது, ஒக்டோபர் 27, 2010 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரச வர்த்தமானி இல 1677/14 இன் கீழ், தேயிலை ஏற்றுமதியாளர்களினால் பங்களிப்புச்செலுத்தும், ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் வசூலிப்பிலிருந்து வழங்கப்படும். வரவுசெலவுத் திட்டத்தில், 2021/2022 ஆம் வருடத்துக்காக, ஒரு பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தேயிலை சபையின் குடையின் கீழ் 2021/2022 ஆம் வருடத்துக்கான, தனியார்ப்பிரிவு தேயிலை ஏற்றுமதியாளர்களுக்கான வியாபாரக்குறி ஊக்குவித்தல் திட்டமானது இலங்கை தேயிலை சபையின் பணிப்பாளர் வாரியத்தினால் அனுமதியளிக்கப்பட்டதுடன், இதற்குரிய கூட்டம் 25.11.2020 அன்று நடைபெற்றது. இதனடிப்படையில், இலங்கை தேயிலை சபையினால் முன்மொழியப்பட்ட திட்டமானது அமைச்சரவைக்கு 06.08.2021 அன்று சமர்ப்பிக்கப்பட்டதுடன், வியாபாரக்குறி ஊக்குவித்தல் திட்டத்தினை அமுல்படுத்துவதற்கான அமைச்சரவை அமைச்சர்களின் அனுமதி 17.08.2021 அன்று கிடைக்கப்பெற்றது.

பதிவுசெய்யப்பட்ட தேயிலை ஏற்றுமதியாளர்களுக்கான விண்ணப்பங்கள் பொது அறிவித்தலினூடாக 09.09.2021 அன்று கோரப்பட்டன, இதன் பிரகாரம் 25 நிறுவனங்களினால் 70 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வுக்காலத்தில், 2021/2022 ஆம் ஆண்டுக்கான வியாபாரக்குறி ஊக்குவித்தல் திட்டத்துக்காக, தெரிவுசெய்யப்பட்ட 22 தனியார் நிறுவனங்கள் மற்றும் இலங்கை தேயிலை சபைக்கிடையில் 22 ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன.

## ஊக்குவிப்பு நிகழ்வுகளும், செயற்பாடுகளும்

சர்வதேச சந்தையில் சிலோன் தேயிலை தொடர்பான விழிப்புணர்வை அதிகரித்து, ஏற்றுமதியாளர்களிடையே தேயிலை ஏற்றுமதியினை மேலும் அதிகரிப்பதற்கான வழிவகைகளை உருவாக்கும்வகையில் கீழ்வரும் நடவடிக்கைகள் இலங்கை தேயிலை சபையினால் முன்னெடுக்கப்பட்டன. வருட காலத்தில் நிலவிய நோய்த்தொற்றுக்களின் விளைவுகள் காரணமாக ஊக்குவித்தல் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவுகளிலேயே மேற்கொள்ளப்பட்டன.

### தூதரகங்களுடான செயற்பாடுகள்

- **துருக்கி, அங்காராவில் விற்பனை நிலையங்களில் சிலோன் தேயிலை ஊக்குவித்தல் நடவடிக்கைகள்**

துருக்கியில் இலங்கைத் தூதரகத்தின் உதவியுடன், இலங்கை தேயிலை சபையினால், அங்காராவில் அமையப்பெற்றுள்ள “பனோரா” மற்றும் “நட்டவேகா” எனப்பெயர்பெறும் விற்பனைக்கூடங்களில், முதற்தர சிலோன் தேயிலை உற்பத்திகளை காட்சிப்படுத்தல் மற்றும் நுகர்வோர் சிலோன் தேயிலை தொடர்பான விழிப்புணர்வினைப் பெறும் வகையில் பதாகைகள்/சுவரொட்டிகளை காட்சிப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளினூடாக சிலோன் தேயிலைக்கான ஊக்குவித்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. மேலும், சிலோன் தேயிலையயின் உண்மையான சுவையினை சுவைக்கும் வகையில் தேநீர் சுவைத்தல் அமர்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.






- அன்பளிப்பு தேயிலைகள் மற்றும் ஊக்குவித்தல் பொருட்களை பகிர்ந்தளித்தல் (குவைத், கியூரியோசிட்டி விடுதியில் "இலங்கை இரவு")
- மெல்போர்னில் அமைந்துள்ள இலங்கை உயர்த்தானியர் மாளிகையில் நடாத்தப்பட்ட சர்வதேச தேயிலை களியாட்ட நிகழ்வு

மெல்போர்னிலுள்ள இலங்கையின் துணைத் தூதரகத்தினால் விசேட "சிலோன் தேயிலை மாலைப்பொழுது" நிகழ்வு ஏற்பாடுசெய்யப்பட்டது.

இந்நிகழ்வில், மெல்போர்னிலுள்ள தனித்துவமான பல நபர்கள் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், இதில் விக்டோரிய பாராளுமன்றத்தின் உறுப்பினரும், இலங்கை நட்புறவுகளின் சக தலைவருமான கிரைக் ஒண்டார்ச்சி, விக்டோரிய பல்கலாச்சார ஆணைக்குழுவின் தலைவர் விவின்னே நேகுயன், அவுஸ்திரேலிய உட்கலாச்சார சமூகத்தின் நிறைவேற்று அதிகாரி அஹமட் கேஸ்கின், அவுஸ்திரேலிய சுற்றுலாத்துறையின் முன்னைநாள் பிரதித்தலைவர் அன்று பெயார்லி, அவுஸ்திரேலிய தேயிலை மார்டர்ஸ்சின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஷாரின் ஜோன்ஸ்டன், தேயிலை இறக்குமதியாளர்கள், தூதரகப்படையின் உறுப்பினர்கள், வங்கியாளர்கள் மற்றும் ஊடக நண்பர்கள் ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.





- சர்வதேச தேயிலை தினத்தை கொண்டாடுதல் 2021

சர்வதேச தேயிலை தினக் கொண்டாட்டங்களில், ஷோபா சம்மேளனம் (கனடா), FAO/IGG தேயிலை குழாம், சர்வதேச சம்மேளனம் (இந்தியா) மற்றும் தேயிலைத்தொழிற்துறை அபிவிருத்திக்கான சர்வதேச தேயிலை நாள் தொடக்கங்கள் (சீனா) ஆகியவற்றில் சிலோன் தேயிலை பங்கேற்றது.



- தேயிலை மற்றும் தேயிலை உற்பத்திப் பிரிவுகளுக்கான NCE ஏற்றுமதியாளர் விருதுகளுக்கான முதற்தர அனுசரணையாளர்ளாக இலங்கை தேயிலை சபை திகழ்ந்தது
- ஐக்கிய இராச்சியத்தில் சிலோன் தேநீரை அருந்துபவர்களை மீளப்பெறும் அணுகுமுறையாக, இங்கிலாந்து மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான கிரிக்கட் 2021 போட்டிக்கு சிலோன் தேயிலை அனுசரணை வழங்கியது.






- சிலோன் பச்சைத் தேயிலையை க்கு இறக்குமதி செய்வதை தடைசெய்தது தொடர்பில், சவூதி உணவு மற்றும் மருந்து அதிகாரசபையுடன் (SFDA) சந்திப்பொன்று நடாத்தப்பட்டது.

- இறக்குமதி வரி மற்றும் கட்டணமற்ற வரிகளைக் குறைப்பது தொடர்பில் உரிய அரசுக்களுடனான இருதரப்பு வர்த்தகக்கூட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன (இந்தியா/பாகிஸ்தான்/துருக்கி/ஈரான்)
- பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதிகளை ஊக்கப்படுத்தும் வகையில் ஏற்றுமதியாளர்க்ளுக்கு 5% மான ஊக்கத்தொகைத் திட்டத்தினை அறிமுகம்செய்தல்

இத்திட்டமானது பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதிகளை ஊக்கப்படுத்தும் வகையிலும், சிலோன் தேயிலை ஏற்றுமதிக்காக அதிக FOB ஐ பெறும்நோக்குடனும் அறிமுகம் செய்யப்பட்டது. மேலும், இத்திட்டமானது சிலோன் தேயிலையின் வகைகளை வெளிநாட்டு சந்தைகளில் நிலைப்படுத்தவும், தொடர்ந்து காணப்படவும் பக்கபலமாக விளங்குகின்றது. மேலே குறிப்பிட்ட நோக்கத்தினைத் தவிர, இத்திட்டமானது பொருளாதாரத்தினை “உயர்த்தவும்” “மீளக்கட்டியெழுப்பவும்” ”மீளுருவாக்கவும்” தேயிலை ஏற்றுமதியாளர்களுக்கு ஊக்கத்தினை வழங்குவதாக அமைகின்றது. இத்திட்டமானது 2021, பெப்ரவரி 22 இல் பதிவுசெய்யப்பட்ட தேயிலை ஏற்றுமதியாளர்களிடையே பரப்பப்பட்டதுடன், இத்திட்டத்துக்காக 74 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன.

## • எண்ணைக் கடனினை சீராக்கும் பொறிமுறைக்காக தேயிலைக்கான

ஈரானுடன் “எண்ணைக் கடனினை சீராக்கும் பொறிமுறைக்காக தேயிலைக்கான” இலக்குகளை முன்வைப்பதனூடாக தேயிலை ஏற்றுமதியை அதிகரிப்பதற்கு ஈரானின் ஆதரவுகள்,

தணிக்கை செயற்பாடுகளுக்காக கேள்விமனுக்கோரல்கள் செயற்படுத்தப்பட்டதுடன், ஈரானுடனான ஒப்பந்தத்துக்கான அமைச்சரவை அனுமதிகள் பெறப்பட்டு, இறுதியான ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால், தேசிய ஈரானிய எண்ணை நிறுவனத்துக்கு செலுத்தவேண்டிய மொத்தமான 250,925,169 அமெரிக்க டொலர்களை ஈடுசெய்யும் வகையில், சிலோன் தேயிலையினை ஈரானுக்கு ஏற்றுமதி செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU), இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் தோட்டத்தொழிற்துறை அமைச்சு மற்றும் ஈரானிய சோஷலிசக் குடியரசின் தொழிற்துறை, அகழ்வுகள் மற்றும் வர்த்தக அமைச்சுக்கிடையேயான கையொப்பமிடப்பட்டது. இவ் MoU திசம்பர் 21, 2021 செவ்வாய்க்கிழமை, வெளிநாட்டு அமைச்சில் கையொப்பமிடப்பட்டது.

இலங்கை தோட்டத்தொழிற்துறை அமைச்சர் கலாநிதி. ரமேஸ் பத்திரன மற்றும் ஈரானிய சோஷலிசக் குடியரசின் தொழிற்துறை அமைச்சின் பிரதி அமைச்சர் திரு. அலிரேசா பேய்மண்ங்பக் ஆகியோர் MoU இல் கையொப்பமிட்டனர். இப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினூடாக, இலங்கையினால் கொள்வனவு செய்யப்பட்ட எண்ணைக்காக செலுத்தவேண்டிய தொகையானது, சிலோன் தேயிலையை ஈரானிய சோஷலிசக் குடியரசுக்கு ஏற்றுமதிசெய்வதனூடாக ஈடுசெய்யப்படுகின்றதெனும் புரிந்துணர்வினை உணர்த்தப்படுகின்றது.




தேசிய ஈரானிய எண்ணை நிறுவனத்துக்கு செலுத்தவேண்டிய தொகையான 250,925,169 அமெரிக்க டொலர்கள் முழுமையடையும் வரை ஈரானிய தேயிலை சந்தையில் இலங்கை வசதியானதொரு நிலையில் காணப்படும். ஈரானுக்கு செலுத்தவேண்டிய கடன்தொகை, இலங்கையின் தேயிலை ஏற்றுமதியாளர்க்ளுக்கு ரூபாயில் மீளச்செலுத்தப்படும். தேயிலையானது மனிதாபிமானத் தளத்தில் உணவு வகைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளமையினால், இத்திட்டமானது ஐக்கிய நாடுகள் அல்லது அமெரிக்க அனுமதிகளை மீறாத வகையில் அமைந்துள்ளதுடன், இக்கொடுக்கல் வாங்கல்களில், தடைசெய்யப்பட்ட எந்த ஈராயிய வங்கிகளும் உள்வாங்கப்படாது. மேலும், ஈரானுக்கு செலுத்தவேண்டிய கடன்தொகையானது சிலோன் தேயிலை விற்பனையினுடாக இலங்கை ரூபாய்களில் செலுத்தப்படுவதனால், பரிந்துரைக்கப்பட்ட திட்டத்தினூடாக நாட்டுக்குத் தேவையான வெளிநாட்டு நாணயத்தினை சேமித்து, இலங்கையை பாதுகாப்பதாக அமைகின்றது. இவ்வாறு, முன்மொழியப்பட்ட தேயிலை விற்பனைக்காக ஏற்றுமதியாளர்களுக்கு இலங்கை ரூபாய்களில் செலுத்தப்படுவதனால், வெளிநாட்டு நாணயத்தினை உருவாக்காது.

## • தேயிலைக்கான சந்தைப்பங்குகளை அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் விஸ்தரிக்க வழிவகுத்தல்

அமெரிக்காவின் மேற்குக்கரையோரத்தில் சிலோன் தேயிலையை மேலும் பிரபல்யமடையச்செய்யும் வகையில், இலங்கை தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கம் மற்றும் இலங்கை தேயிலை சபை ஆகியன ஒன்றிணைந்து, லொஸ் ஏஞ்சலில் இலங்கைக்கான துணைத்தூதுவரின் உதவியுடன், சிலோன் தேயிலைக்கான களஞ்சிய வசதிகளை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கமைய, முன்மொழியப்பட்ட சிலோன் தேயிலை விநியோக நிலையத்தினை நிறுவுவதற்கான உதவிகளை பெறும்பொருட்டு, கென் நேற்சுரல்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளருடனான கலந்துரையாடல் தூதுவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

## • அமெரிக்கா, கனடா மற்றும் ஐக்கிய இராட்சியத்துடான மெய்நிகர் B2B ஐ ஒழுங்குசெய்தல் மற்றும் அமுல்படுத்தல்

இலங்கை தேயிலை ஏற்றுமதியாளர்களுடன், இறக்குமதியாளர்கள் மற்றும் அமெரிக்க தேயிலைக் குழு மற்றும் வாசிங்டனிலுள்ள இலங்கை தூதரகங்களுடன் இணைந்து அமெரிக்க தேயிலைச்சநதையின் ஏனைய பங்குதார்களுடனான மெய்நிகர் B2B கூட்டம், இலங்கை தேயிலை சபையினால் ஒழுங்குசெய்யப்பட்டது.



கடந்த 2021 ஜூலை, 12 இல் நடந்தேறிய B2B அமர்வு - இலங்கை தேயிலை ஏற்றுமதியாளர்கள மற்றும் கனடா தேயிலை இறக்குமதியாளர்கள். இந்நிகழ்வு இலங்கை தேயிலை சபை மற்றும் கனடாவின் தேயிலை மற்றும் மூலிகை சபையினால் ஒழுங்குசெய்யப்பட்டது.

ஐக்கிய இராட்சியத்தில் சிலோன் தேயிலையை பிரபல்யமடையச்செய்தல் மற்றும் நிலைநிறுத்துவதற்காக, ஐக்கிய இராட்சியத்திலுள்ள நுகர்வோர், இலங்கை ஏற்றுமதியாளர்கள் மற்றும் சர்வதேச தேயிலை குழாமுடனான வினைத்திறனான மூளைச்சலவை அமர்வானது, லண்டனிலுள்ள இலங்கை உயர்தானியர், இலங்கை தேயிலை சபையுடன் இணைந்து நடாத்தப்பட்டது.

அரச மற்றும் தனியார் பிரிவுகளின் இவ் ஒருங்கிணைந்த முயற்சியானது, இழக்கப்பட்ட இலங்கையின் தேயிலைச் சந்தையை மீளக்கைப்பற்றக்கூடியதாக அமையும்.

- இழந்த சந்தையினை மீளப்பெறும் வகையில் சந்தை மூலோபாயங்களை கற்றல் (ஐக்கிய இராட்சியம், பாகிஸ்தான், எகிப்து)
- பொதுநலவாய நாடுகளின் 2022 சம்மேளனத்துடன் ஊக்குவித்தல் பிரச்சாரத்தினை மேலும் உக்கிரமடையச்செய்தல்
- எகிப்து, டான்டி விற்பனைக்கூடத்தில் சிலோன் தேயிலை கியோக்ஸ்க்கான முன்மொழிவுகளை நிறுவுதல்
- எகிப்திலுள்ள சுடாங்கோ நிறுவனத்தினுடாக எகிப்தில் சிலோன் தேயிலை ஊக்குவிப்பு நிகழ்வுகளை நடாத்துதல்
- பாகிஸ்தான் அசர அதிகாரசபைகளுக்கு, சிலோன் தேயிலைக்கான PSR (உற்பத்திக்கான விசேட கோரிக்கை) ஐ தொடர்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல்
- பாகிஸ்தான் சந்தைக்கு போதுமானளவு சிலோன் தேயிலைக்கான செலவுக்கு பொருத்தும் வகையிலான அணுகுமுறைகளை முன்னெடுத்தல்

## பொதுவான தேயிலை ஊக்குவிப்பு

வான தேயிலை ஊக்குவிப்பு செயற்பாடுகளில் ஏனைய பானங்களுடன் ஒப்பிடுகையில் சுவையினை ஈர்க்கும் பானங்களில் தேநீர் சிறப்பான பங்கினை வகிக்கின்றது. இலங்கை தேயிலை சபையானது, உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO), அமெரிக்க தேயிலை சங்கம், ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச தேயிலைக் குழு, கனேடிய தேயிலை மற்றும் மூலிகைகள் சங்கம் மற்றும் ஜப்பான் தேயிலை சங்கம் ஆகிய தேயிலைக்கான சர்வதேச குழுக்களின் உறுப்பினராகத் திகழ்கின்றது. பொதுவான தேயிலை ஊக்குவித்தல் செயற்பாடுகள், இவ் அமைப்புக்களினூடாக மேற்கொள்ளப்படுகின்றன. பொதுவான தேயிலை ஊக்குவித்தல் செயற்பாடுகள், பிரதானமாக தேயிலை மற்றும் சுகாதாரக் கொள்கைகளில் கவனம் செலுத்துவதுடன், இவை நுகர்வோர் கல்வி மற்றும் பொதுமக்களுடனான உறவுடன் தொடர்புடைய நடவடிக்கைகளினூடாக ஊக்குவிக்கப்பட்டன. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, 2021 ஆம் ஆண்டில் பொதுவான தேயிலை ஊக்குவித்தல் செயற்பாடுகளுக்காக தெரிவுசெய்யப்பட்ட நாடுகளில், தேயிலை சங்கங்கள் மற்றும் சபைகளின் வரவுசெலவுத்திட்டங்களை விளம்பரப்படுத்துவதில், இலங்கை தேயிலை சபை தனது பங்களிப்பை செலுத்தியது.

## இலங்கை தேயிலை பிராந்தியப் பெயர்கள் மற்றும் இலட்சணைகளை புவியியல் அறிகுறிகளின் கீழ் பதிவுசெய்தல்

“சிலோன் தேயிலை” மற்றும் ஏனைய ஏழு வேளாண்-காலநிலை பிராந்திய தேயிலைகளை (நுவரெலியா, உடபுசல்லாவை, திம்புலா, ஊவா, கண்டி, சப்ரகமுவ மற்றும் ருகுணு) உலக வர்த்தக அமைப்பின், ட்ரிப்ஸ் (TRIPS) ஒப்பந்தத்தின் கீழுள்ள பிரிவுகளினூடாக, புவியியல் அறிகுறிகளாகப் பாதுகாப்பதற்குத் தேவையான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள், இலங்கை தேயிலை சபையினால் உருவாக்கப்பட்டன. இது சிலோன் தேயிலை மற்றும் ஏனைய பிராந்திய தேயிலை வளர்ப்பு பெயர்களை, விசேடமாக வெளிநாட்டு ஒப்பந்தப் பொதியாளர்களினால் தவறான பாவனைக்கு உட்படுத்தப்படுவதனை தவிர்க்க உதவுவது மாத்திரமல்லாமல், ஜிஐஎஸ் இன் கீழ் சந்தைப்படுத்தப்படும் சிலோன் தேயிலைக்கான பெறுமதி சேர்த்தல் மற்றும் உயர் மதிப்புள்ள விலைகளை நிர்ணயிப்பதற்கும் உதவியாக அமைகின்றது.

## சிலோன் தேயிலைக்கான GI பதிவுகள்

உற்பத்திகளின் தனித்துவமான தரைத்தோற்றமைப்பியல் தோற்றம் மற்றும் செயற்பாட்டுத் தரங்கள் அல்லது தோற்றமைப்பினாலான நன்மதிப்பினை வெளிப்படுத்துவதற்காக GI சுட்டிக்காட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு குறித்த இடத்திலிருந்து உற்பத்தி உருவாகுவதை அடையாளங்காணும் போது மாத்திரமே அது GI அந்தஸ்தினைப் பெற்றதாக தொழிற்படும்.

இதனடிப்படையில், சிலோன் தேயிலை தொழிற்துறைக்குரிய 150 வருடங்களுக்கு மேலான நன்மதிப்பினை அடிப்படையாகக்கொண்டு, ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து சிலோன் தேயிலைக்கான GI அந்தஸ்தினை பெறுவதற்கு இலங்கை தேயிலை சபை மற்றும் தொழிற்துறை பங்குதாரர்கள் (சிலோன் தேயிலை வீதி வரைபடம் 2030 - CTTA) தங்களது ஒப்புதலை தெரிவித்தனர். ஐரோப்பிய ஒன்றிய சட்டத்தின் கீழ், மூலக் கட்டமைப்பின் பாதுகாக்கப்பட்ட நிலையானது 1992 ஆம் ஆண்டு அமுலுக்குவந்ததுடன், “மூலக் கட்டமைப்பின் பாதுகாக்கப்பட்ட நிலை (PDO)”, “பாதுகாக்கப்பட்ட தரைத்தோற்றமைப்பியல் சுட்டிக்காட்டி (PGI)” மற்றும் “பாரம்பரிய சிறப்புக்களுக்கான உத்தரவாதம் (TSG)” ஆகியவற்றினை சீராக்குகின்றது.

இதனை அடிப்படையாகக்கொண்டு, விவசாய உற்பத்திகள், மூல அல்லது பதப்படுத்தப்பட்ட, யாருடைய தரம், நன்மதிப்பு அல்லது இதன் தரைத்தோற்றமைப்பியல் உருவாக்கத்துடன் (உ+ம்; சிலோன் கறுவா PGI) தொடர்புடைய ஏனைய இயல்புகள் காரணமாக, சிலோன் தேயிலையை, “பாதுகாக்கப்பட்ட தரைத்தோற்றமைப்பியல் சுட்டிக்காட்டிக்காகப் (PGI)” பிரயோகிக்கமுடியும்.

இதன்பிரகாரம், இலங்கை தேயிலை சபை CIRAD இடமிருந்து தொழினுட்ப உதவிகளைப் பெறுவதற்கான அமைச்சரவை அனுமதி

25.10.2021 அன்று கிடைக்கப்பெற்றதுடன், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஏனைய இரு நாடுகளிலிருந்து GI ஐ பெற்றுக்கொள்வதற்கான தொழிநுட்ப உதவிகளுக்காக ஒரு மில்லியன் யூரோக்களுக்கான ஒப்பந்தம் AFD, CIRAD மற்றும் SLTB களுடன் 07.12.2021 அன்று கைசாத்திடப்பட்டது.

## GI க்காக TRI ஒன்றுகூடல் ஒப்பந்தத்தில் கையொப்பமிடுதல் (SLTB, AFD மற்றும் CIRAD)

சிலோன் தேயிலைக்கான புவியியல் சுட்டிக்காட்டி (GI) சான்றுதழுக்காக பிரான்ஸ் ஒரு மில்லியன் யூரோக்களை வழங்கியது.

சிலோன் தேயிலைக்கான புவியியல் சுட்டிக்காட்டியின் (GI) அபிவிருத்திக்கான, தொழினுட்ப உதவிகளை வழங்கும் பொருட்டு, இலங்கை தேயிலை சபை மற்றும் அபிவிருத்திக்கான பிரான்சிய விவசாய ஆராய்ச்சிகள் நிலையத்துக்கிடையிலான, ஒரு மில்லியன் யூரோ பெறுமதியான ஒப்பந்தம் பிரான்ச்சிய அபிவிருத்தி நிறுவனத்தினால் (AFD) கையொப்பமிடப்பட்டது.

இவ் ஒப்பந்தமானது, தோட்டத்தொழிற்துறை அமைச்சர் கலாநிதி. ரமேஸ் பத்திரன, பிரான்ஸ் தூதுவர் எச்.ஈ.எரிக் லவேர்ட்டு, நிறுவனம், தோட்ட மறுசீரமைப்பு தேயிலை மற்றும் இறப்பர் தோட்டப் பயிர்களுக்கான அமைச்சின் இராஜாங்க அமைச்சர் கௌரவ. ஜனக்க ஹேரத் மற்றும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ. ஜீவன் தொண்டமான் ஆகியோரின் பங்களிப்புடன், AFD நாட்டுக்குரிய பணிப்பாளர் திரு. ரேடா சௌர்ஹி மற்றும் SLTB இன் தலைவர் திரு, ஜயம்பதி மொல்லிகொட ஆகியோரினால் கையொப்பமிடப்பட்டது. சிலோன் தேயிலைக்கான GI சான்றுதலை உருவாக்குதலானது, தரமான உற்பத்திகளை ஊக்குவித்தல், பாரம்பரியமாக எதனை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்டது என்பதை பாதுகாத்தல்,அதன் வர்த்தகப்பெறுமதியினை அதிகரித்தல் மற்றும் சர்வதேச சந்தையிலான அங்கீகாரத்தினைப் பெறுதல் போன்றவற்றை இலக்காகக்கொண்டுள்ளது.

The sigining Tri Party Agreement




## வர்த்தகக்குறியினைப் பாதுகாத்தல




சிங்க இலட்சணை வர்த்தகக்குறியினைப்

பதிவுசெய்தல்சிலோன் தேயிலையின் சிங்க இலட்சணை வர்த்தகக் குறிக்குரிய சட்டபூர்வமான உரிமையாளராக இலங்கை தேயிலை சபை விளங்குகின்றது. இலங்கைய மற்றும் ஏனைய நாடுகளில் சிலோன் தேயிலையின் சிங்க இலட்சணையைப் பதிவுசெய்தல் அல்லது புதிப்பித்தல் செயற்பாடுகள் சபையின் தேயிலை ஊக்குவித்தல் பிரிவினால் மேற்கொள்ளப்படும். கடந்த 2021ஆம் ஆண்டளவில் சிங்க இலட்சணையானது 103 நாடுகளில், பதிவுசெய்யப்பட்டிருந்தது. சிங்க இலட்சணையைப் பயன்படுத்தும் உரிமையானது தரமான, பெறுமதி சேர்க்கும் 100% சிலோன் தேயிலை உற்பத்திகளுக்கு மாத்திரம் (தேயிலைப் பைகள் மற்றும் தேயிலைப் பொதிகள்) வழங்கப்பட்டுள்ளதுடன், இவை சர்வதேச தரநிர்ணய அமைப்பின் (ஐஎஸ்ஓ 3720) தர நியமங்களுடன் ஒத்திருப்பதுடன், ஒவ்வொரு இடத்துக்கும் ஏற்றாற்போல, குறைவான குறிப்பு தரநிலைக்கு மேலாக அமைந்துள்ளதுடன், இவற்றுக்கான முற்பொதியிடல் செயற்பாடுகள் இலங்கையில் முன்னெடுக்கப்படுதல் அவசியமாகும்.

மதிப்பீட்டுக் காலத்தில், புதிய சிங்க இலட்சணையை பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் (தரம் மற்றும் சிங்க சாதனத்துக்கான சிலோன்

தேயிலைச் சின்னம்), துர்க்மெனிஸ்தான், நோர்வே, ஜோர்தான், பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ், மொரோக்கோ, சோமாலியா, ஹாங்காங், உஸ்பெகிஸ்தான், அசர்பைஜான், கிர்கிஸ்தான் குடியரசு, எகிப்து மற்றும் செர்பியா ஆகிய நாடுகளில், இலங்கை தேயிலை சபையினால் ஆரம்பிக்கப்பட்டன. ஹாங்காங், ஜோர்தான் மற்றும் எகிப்து ஆகிய நாடுகளில் புதிய பதிவுகள் நிறைவுபெற்றன. சிங்க சாதனத்துக்கான சிலோன் தேயிலைச் சின்னத்தினை புதுப்பித்தல் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன், தற்போதைய நிலையில் துர்க்மெனிஸ்தான், தாய்வான், ஈராக் மற்றும் நோர்வே ஆகிய நாடுகளில் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

## ஓசோன் நட்புடைய தூய சிலோன் தேயிலையின் சின்னத்தை பதிவுசெய்தல்

இலங்கையில் ஓசோன் நட்புடைய தூய சிலோன் தேயிலை உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன், ஓசோன் நட்புடைய தூய தேயிலைக்கான சின்னம் இலங்கை தேயிலை சபையினால் பதிவுசெய்யப்பட்டது. மொண்ட்ரியல் பிரகடனத்தின் கீழ், தனிமைப்படுத்தலல்லாத மற்றும் முன் ஏற்றுமதி செயன்முறைகளுக்கு மெதைல் புரோமைட்டினை பயன்படுத்தல் தொடர்பில் இரு கட்டத் திட்டங்கள் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டன. இலங்கையில் தேயிலைப் பயிர்ச்செய்கையில் (நாற்றுப்பண்ணை), மெதைல் புரோமைட்டினைப் பயன்படுத்தாமல், சூழலுக்கு நட்புடைய தொழில்நுட்பங்களைக் கையாளும் தேயிலைத்துறைத் திட்டங்கள் 2002 ஆம் ஆண்டு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதுடன், 2007 ஆம் ஆண்டுக்கான, மொண்ட்ரியல் நெறிமுறை விருது இலங்கைக்குக் கிடைக்கப்பெற்றது. இலங்கை ஓசோன் நட்புடைய தேயிலை உற்பத்தி நாடுகளில் உலகில் முதன்மையான, ஒரேயொரு நாடு எனும் அங்கீகாரத்தைப் பெற்றதுடன், உலகில் தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளிடையே இம்மகுடத்தைப் பெற்ற ஒரேயொரு நாடாகவும் விளங்குகின்றது.

மீளாய்வுக்காலத்தில், “ஓசோன் நட்புடைய தூய சிலோன் தேயிலை மற்றும் சாதனத்தை” புதுப்பிப்பதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன், தற்போதைய நிலையில் ஈரான், ஐக்கிய இராட்சியம் மற்றும் குவைத் ஆகிய நாடுகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. துனிசியா மற்றும் ஜோர்தான் ஆகிய ஆகிய நாடுகளில் புதுப்பித்தல் பதிவுகள் நிறைவுபெற்றுள்ளன.

நிறைவுற்ற 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில், தங்களது ஆறு வகையான உற்பத்திகளில் ஓசோன் நட்புடைய தூய சிலோன் தேயிலைக்கான சின்னத்தினை பயன்படுத்துவதற்கான உரிமைகளை ஆறு சிலோன் தேயிலை ஏற்றுமதியாளர்கள் பெற்றுக்கொண்டனர். “சர்வதேச ஓசோன் தினைத்தை” முன்னிட்டு, டெய்லி மிரர் பத்திரிகையினால் கடந்த 2021 செப்டம்பர் 16 அன்று விசேட அனுபந்தமொன்றினை வெளியிடப்படுகின்றது. மொன்றியல் பேரேட்டின் கீழ் “ஓசோன் நட்புடையது” எனும் நற்சான்றிதழ் வழங்கப்பட்ட ஒரேயொரு உற்பத்தியாக சிலோன் தேயிலை விளங்குகின்றது. இதனை இலங்கை தேயிலை சபையானது சர்வதேச சந்தைப்படுத்தல் பிரச்சாரத்தில், “தனித்துவமான விற்பனை முன்மொழிவாகப்” (USP) பயன்படுத்துவதுடன், இவ்விசேட நாளில் இலவசமாக வழங்குவதற்கான ஆதரவினை வழங்கவும் இணங்கியது. இதனடிப்படையில், “சர்வதேச ஓசோன் தினம் 2021 ஐ” முன்னிட்டு டெய்லி மிரர் பத்திரிகையின் விசேட பதிப்பில், ஒரு பக்கத்தின் கால்பகுதிக்கான விளம்பரம் இலங்கை தேயிலை சபையினால் வழங்கப்பட்டது.

## சர்வதேச தேயிலை ஊக்குவித்தல் அலுவலகங்கள் மற்றும் சந்தை நிலைமைகள்

தற்போதைய நிலையில், இலங்கை தேயிலை சபையினால், ஐக்கிய அரபு இராட்சியம், ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளிலுள்ள, இலங்கைப் பணியகங்களுக்கான மூன்று பிராந்திய சர்வதேச தேயிலை ஊக்குவித்தல் அலகுகள் முகாமை செய்யப்படுகின்றன. மத்திய கிழக்கு/ வளைகுடா/ வட ஆபிரிக்கா போன்ற நாடுகளில் தேயிலை ஊக்குவிப்புக்கான அலுவலகம் துபாயில் அமையப்பெற்றுள்ளதுடன், ரஷ்யக் கூட்டமைப்பு மற்றும் சீஐஎஸ் சந்தைகளுக்கான தேயிலை ஊக்குவிப்பு செயற்பாடுகள் மொஸ்கோவினால் கையாளப்படுகின்றன. இலங்கைத் தேயிலையை ஊக்குவித்து அதன் சந்தைப் பங்குகளை அதிகரிக்கும் வகையில், இலங்கைத் தேயிலையை பிரதிநிதித்துவப்படுத்தும் அலுவலகமானது வளர்ச்சியடையும் சந்தையாக அடையாளங்காணப்பட்டுள்ள சீனாவில், பீஜிங் நகரத்தில் 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறுவப்பட்டது. கொழும்பிலுள்ள தேயிலை ஊக்குவித்தல் பிரிவானது, சர்வதேசத்திலுள்ள ஏனைய உரிய இலங்கைப் பணியகங்களுடன் இணைந்து, ஏனைய சந்தைகளுக்கான தேயிலை ஊக்குவித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

## தேயிலை ஊக்குவித்தல் அலகினால் சிலோன் தேயிலை ஊக்குவித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன

### தேயிலை ஊக்குவித்தல் அலகு - சீனா

- வருடத்துக்கு மில்லியன் கிலோகிராம் சிலோன் தேயிலையை இறக்குமதி செய்வதற்கான MOU ஐ சீன நிறுவனத்துடன் கைப்பமிடுவதற்கான ஏற்பாடுகள் TPU சீனாவினால் மேற்கொள்ளப்பட்டன.



- சிலோன் தேயிலையை பிரபல்யமடையச்செய்யும் நோக்குடன் இலங்கை தேயிலை சபையானது, பீஜிங் கபே ஷோ, குயிங்டோ SCO வர்த்தகக் கண்காட்சி, சங்ஹாய் CIIE கண்காட்சி, ஜியாங்சு மாகாணத்திலான உணவு மற்றும் கலாச்சாரக் கண்காட்சி, தேயிலை- லைவ்ஸ் கண்காட்சி, Fuzhou பூஜியான் மாகாணம் மற்றும் பீஜிங் SCO வர்த்தகக் கண்காட்சிகளில் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகள் சீன TPU யினால் முன்னெடுக்கப்பட்டன.
- கீழ்வரும் மன்றங்கள் மற்றும் உச்சிமாநாடுகளில் சீன TPU கலந்துகொண்டது
- சர்வதேச தேயிலை தொழிற்துறையின் 4 வது சீன தேயிலை உச்சிமாநாடு மற்றும் 2 வது சர்வதேச தேயிலை நாளை சிறப்பித்தல்
- குயிலு (ஷாண்டாங்) தேபோ கிராமிய உச்சிமாநாட்டு மன்றம் மற்றும் கண்காட்சி; 1 வது ஷாண்டாங் சர்வதேச இல-வர்த்தக வியாபாரக்குறி தொழிற்துறை அபிவிருத்தி மாநாடு
- 14வது சீன சர்வதேச தேயிலை வர்த்தக மாநாடு
- 2வது சீன செலனியம் தேயிலைப் போட்டி மற்றும் சர்வதேச தேயிலைத் தொழிற்துறை அபிவிருத்தி மாநாடு
- “சுங்க நிலையத்துடனான” அரை மாத பிரச்சனைகள்
- குவான்ங்ஷு அதிவேக புகையிரத வலையமைப்பில் 2022 இல் பயணிப்பவர்களிடையே, சிலோன் தேயிலையை (லயன்ஸ் தேநீர்) பகிர்வதற்கான ஆதரவினை வழங்குதல்
- JD.COM மற்றும் Wumai.com ஆகிய இணையத்தளங்களில் சிலோன் தேயிலையை உள்நுழைப்பதற்கான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டன.
- நான்காவது காலாண்டில், ஒன்பது குழுக்களுக்கான (ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள்) தூதரக நிகழ்வுகளில் சிலோன் தேயிலை ஊக்குவிக்கப்பட்டது.
- பீஜிங்கில் சிலோன் டிப்ஸ் “இலங்கைத் தயாரிப்பு” விற்பனையகத்துக்கான ஒப்பந்தம் மற்றும் திறப்பு நிகழ்வுகள்
- சிலோன் தேயிலையை ஏற்றுமதி செய்வதற்காக, சீன சுங்கத்தில் பொது நிர்வாகக்கட்டமைப்பில் இலங்கை தேயிலை ஏற்றுமதியாளர்களை பதிவுசெய்ய உதவுதல்.

## தேயிலை ஊக்குவித்தல் அலகு - மொஸ்கோ

- பின்வரும் தேயிலை ஊக்குவித்தல் செயற்பாடுகளில் தொடர்புபட்டுள்ளன;
- ரஷ்யாவின் தேயிலை மார்ஷ்டஸ் கோப்பைக்கான அனுசரணையை வழங்குதல்
- மொஸ்கோ பிராந்தியத்தில், டொமொடேடோவோ விமானநிலையத்தில் ஸ்ரீ லங்கன் விமான சேவைகளின் ஆரம்பகட்ட நிகழ்வுக்கான சிலோன் தேயிலை ஊக்குவித்தல் நிகழ்வுகளை முன்னெடுத்தல்
- “RUSTEACOFFEE” அமைப்புடனான கூட்டங்கள்
- சர்வதேச மகளீர்தின களியாட்டங்கள் - சர்வதேச மகளீருக்கான அமைப்பு/ ரஷ்யாவின் மகளீர் ஒன்றியம்
- சர்வதேச தேயிலை தினத்துக்கு இணையாக, மே 21, 2021 அன்று சர்வதேச இளையோர் விஞ்சானிகளுக்கான மாநாட்டில் பங்குபற்றியமை
- மொஸ்கோ நகர மையத்தில் அமைந்துள்ள அருங்காட்சிய பிராந்தியத்துக்கான “CHASHKA” (கோப்பை) களியாட்டத்தில் பங்குபற்றியமை
- வெற்றிநாள் கொண்டாட்டங்கள் மே 9, 2021:

ரஷ்யாவில், 20,000 க்கும் அதிகமான முன்னாள் படைவீரர்கள்/ 400 வயது முதிர்ந்தோரின் வீடுகளுக்கு சிலோன் தேயிலை தொடர்பான வீடியோ பணிவிடையினை வழங்க TPU மொஸ்கோவிற்கு இயலுமாக அமைந்தது.

- “தேநீர்க் கலை” கண்காட்சி

இந்திய தேயிலை, ஜப்பானிய தேயிலை, தாய்வான் தேயிலை மற்றும் சிலோன் தேயிலையுடன், ரஷ்ய தேயிலை சமூகத்தினால், மொஸ்கோவில் ரஷ்ய அரச வாசிகசாலையில் கிழக்கத்திய இலக்கிய நிலையத்தில் ஒழுங்குசெய்யப்பட்ட “தேநீர்க் கலை” கண்காட்சியானது மே 26, 2021 அன்று திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் TPU மொஸ்கோ பங்குபற்றியதுடன், சிலோன் தேயிலையையும் அறிமுகம் செய்தது.

- மொஸ்கோவிலான சிலோன் தேயிலை ஊக்குவிப்புக்கான "OTDYKH களியாட்டக் கண்காட்சி" இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு பணியகத்துடன் இணைந்து நடாத்தப்பட்டது.
- இலங்கைக் கிழமை - 2021

மொஸ்கோவிலுள்ள, இலங்கை சென்ட் பீட்டர்ஸ்பர்க் கிளைய, இலங்கை தூதரகத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட "இலங்கைக் கிழமை - 2021"; ரஷ்ய நட்புறவு சமூகத்தினால் சிலோன் தேயிலையின் ஊக்குவிப்புக்காக பல்வேறு நிகழ்வுகள் 2021 நொவம்பர் 19 முதல் 28 வரையான காலப்பகுதியில் நடாத்தப்பட்டன.

- இலங்கையின் நாள் - 2021

இலங்கையின் கலாச்சாரம், சிலோன் தேயிலை, சுற்றுலாத்துறை மற்றும் பல்வகையான இலங்கைப்பொருட்களை பிரபல்யமடையச்செய்யும் நோக்குடன், ரஷ்ய அரச வாசிகசாலையில் கிழக்கத்திய இலக்கிய நிலையத்தின் மாநாட்டு மண்டபத்தில் "இலங்கையின் நாள் - 2021" க்கான நிகழ்வுகள், ரஷ்யாவிலுள்ள இலங்கைத் தூதரகம் மற்றும் ரஷ்ய அரச வாசிகசாலையுடன் இணைந்து 2021 நொவம்பர் 23 அன்று ஒழுங்குசெய்யப்பட்டன.

- SILPO இன் கள விஜயங்கள் - இலங்கை தேயிலை சபையின் தேயிலை ஊக்குவித்தல் திட்டம்

இலங்கை தேயிலை சபையானது, கிவ்வில் சில்போ இலங்கை வெப்பக் களஞ்சியத்தை உருவாக்குவதற்காக வரையறுக்கப்பட்ட கடப்பாட்டு நிறுவனம் "Silpo-Food" உடனான ஒப்பந்தத்துக்குள் கடந்த 2020 ஜூலை மாதம் உள்நுழைந்ததுடன், சிலோன் தேயிலை மற்றும் இலங்கைக்குரிய தேயிலை உற்பத்திகளுக்கான இடத்துக்கு உக்கிரேன் முன்னுரிமை வழங்கியது. காட்சியகத்தில் பதக்கங்கள், முகக்கவசங்கள், யானைகள், சிறுத்தைகள், மயில்கள் மற்றும் கிளிகளின் போலி உருவங்கள் மற்றும் இலங்கை சித்திரங்களை உள்ளடக்கிய சுவயோவியங்களை உள்ளடக்கிய நம்பகமான இலங்கைக்குரிய சூழலியல் கட்டமைப்புக்களை நிறுவுவதன் மூலமாக, திட்டத்தின் முதலாவது அவத்தை 2020 ஆம் ஆண்டு நிறைவுக்குவந்தது.



SILPO இன் கள விஜயங்கள் - இலங்கை

இலங்கை தேயிலைக்காக (கொண்டோலா முத்திரை பொறிக்கப்பட்ட) தனித்துவமான பகுதி வடிவமைக்கப்பட்டுள்ளதாக, உள்நுழைபவர்களுக்கான விசேட அறிவித்தலொன்று விடுக்கப்படுவதுடன், SILPO களஞ்சியசாலையில், "தேயிலை" என வகைப்படுத்தப்பட்ட பகுதியில் "சிலோன் தேயிலைக்கான" தர சின்னமும், தலைப்புப்பகுதியில் "சிங்க இலட்சணை" பொறிக்கப்பட்ட காட்சியகத்தினுள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வகையான தரக்குறியானது 2021 ஆம் ஆண்டுக்கும் தொடரப்படுகின்றது. மேலும், சிலோன் தேயிலையின் கொண்டோலா முத்திரையானது உக்கிரேனில் 25 SILPO விற்பனைக்கூடங்களில், 25 க்கும் அதிகமான தட்டுக்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது கீழே காட்டப்பட்டுள்ளது. இவ் 25 SILPO விற்பனைக்கூடங்களிலும் 2000 க்கும் அதிகமான "சிலோன் தேயிலை" (சிங்க இலட்சணை காட்சிப்படுத்தப்பட்ட) முத்திரையிடப்பட்ட சுய பதாகைகள், பார்வையாளர்களின் கவனத்தினை ஈர்க்கும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.



கொண்டோலா முத்திரை பொறிக்கப்பட்ட



வகை பொறிக்கப்பட்ட



தட்டுக் குறிப்புக்கள்

திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சிநிரலை முடிவுறுத்துகையில், ஊழியர்களுக்கான சிலோன் தேயிலை குறித்த சில கல்விசார் நடவடிக்கைகள் SILPO னால் மேற்கொள்ளப்பட்டன.

# உக்குவிப்பு/ தகவல் வெளியீடுகள்

அரை மாத செய்திமடல்: நிறைவுற்ற 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 6 பிரதிகள் வெளியிடப்பட்டன.

# உள்ளூர் தேயிலை ஊக்குவிப்பு

## உள்ளூர் வர்த்தகக் காட்சிகள்

இலங்கை தேயிலை சபையானது, BMICH இல் நடாத்தப்பட்ட "BE SRI LANKAN BUY SRI LANKAN வர்த்தகக்கண்காட்சியில்" கலந்துகொண்டது (2021 பெப்ரவரி 12 - 14). கண்காட்சிக்காலத்தில் பின்வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

தகவல் மையமொன்று பேணப்பட்டது

தேயிலையின் தரங்கள் காட்சிப்படுத்தப்பட்டன/ 7 பிராந்திய தேயிலைகள்

துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன/ தேயிலை உறைகள்

## அனுசரணைகள் / நாளிதழ்களுக்கான

நாளிதழ்களுக்கான அனுசரணைகள்/ விளம்பரங்களை வழங்குதல். சர்வதேச கலாச்சார ஜம்போறிக்கான அனுசரணை - 2021 ஜூலை 16 - 18 - " கலாச்சார ரீதியாக ஒரு சாரண உலகம்"

- திவயின ஞாயிறு பத்திரிகையில் விவசாய இணைப்புக்கான விளம்பரம்
- அரச - "சவுபாக்கிய தக்கும" (செழிப்பு மற்றும் சிறப்பின் காட்சிகள்) முதலாவது வருட நிறைவுக்கான விசேட இணைப்பாக, சண்டே ஒப்சேவர் பத்திரிக்கையிலான விளம்பரம்
- நல்லூர் திருவிழா தொலைக்காட்சி ஒளிபரப்பு மற்றும் கோவிட் 19 விழிப்புணர்வுடனான சந்தைப்படுத்தலுக்கான அனுசரணை
- இலங்கை தேசிய ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின், 29 வது வருடாந்த ஏற்றுமதி விருதுகள் நிகழ்வு 2021
- தினமின பத்திரிகையின் விசேட இணைப்புக்கான விளம்பரம் - தலதா ஹிமி வருண
- "வேயோ பியம்பதி" மேடை நாடகத்துக்கான அனுசரணை
- நிலைபெறும் மரணடுகை முகாமைத்துவத்துக்கான 2 வது அமர்வுக்கான அனுசரணை
- களுத்துறை மாவட்டத்தின் இருபதுக்கு, இருபது கிரிக்கட் சுற்றுப்போட்டிகளுக்கான அனுசரணை
- எச். ஈ. தலைவரின் அலுவலகத்துக்கான இரண்டாவது வருட நிறைவுக்காக சண்டே ஒப்சேவர் பத்திரிக்கையிலான விளம்பரம்
- மரணடுகை முகாமைத்துவ தேசிய நிறுவனத்துக்கான, வருடாந்த பரிசளிப்பு விழா நிகழ்வுக்கான அனுசரணை
- இலங்கை ரஷ்ய வியாபார சபையின் உறுப்பினர்களின் இரவுக்கான அனுசரணை
- பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலைக்கு BI-PAP வசதியுடனான ஆக்கிரமிப்பற்ற காற்றூட்டல் கருவியை அனுபளிப்பாக வழங்கியமை

# தேயிலை விற்பனை நிலையங்கள்

இலங்கை தேயிலை சபையின் விற்பனை நிலையமானது இல 574 காலி வீதி, கொழும்பு 03 இல் (SLTB அலுவலகக் கட்டட வளாகத்தினுள்) அமையப்பெற்றுள்ளது. இங்கு தேயிலையை கொள்வனவுசெய்யவரும் உள்நாட்டு/வெளிநாட்டு நுகர்வோரின் தேவைகளுக்கு ஏற்றாற்போல, வெவ்வேறு சுவையுள்ள தேயிலைப்பொதிகளை கொள்வனவு செய்யமுடியும். இலங்கை தேயிலை சபையின் சின்னத்தினைக் கொண்ட, சிலோன் தேயிலை வகைகளை ஏற்றுமதிசெய்யும் 25 க்கும் மேற்பட்ட தனியார்ப் பிரிவு தேயிலை நிறுவனங்களினூடான, 1500 க்கும் அதிகமான வகைககளில் தேயிலைப்பொதிகள் தேயிலை விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படுகின்றன. கோவிட் - 19 நோய்தொற்றுக்காலத்திலும், சுகாதார வழிகாட்டல்களின் கீழ் வாடிக்கையாளர்களுக்கான அதியுயர் சேவைகள் இலங்கை தேயிலை சபையினால் வழங்கப்பட்டன. நிறைவுற்ற ஆண்டில் தனிமைப்படுத்தல் கட்டுப்பாடுகளின் கீழே தொழிற்பாட்டு வருமானமாக 20 மில்லியன் ரூபா ஈட்டப்பட்டதுடன், இது வருடாந்த சராசரி வருமானத்திலும் பார்க்க ஏறக்குறைய 5 மடங்குகள் குறைவாகும். "சிலோன் தேயிலைக்கான" ஊக்குவித்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 427,330.00 பெறுமதியான தேயிலைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இலங்கை தேயிலை சபையினால் 35 இலங்கை வெளிநாட்டு மன்றங்களுக்காக, சிலோன் தேயிலைகள் இலவசமாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

# 2. 4 தேயிலை சுவைத்தல் அலகு

இவ் அலகானது சிலோன் தேயிலையின் தரத்துக்கான உத்தரவாதத்தினை வழங்கும் பிரதானமானதொரு அமைப்பாக விளங்குகின்றது. தேயிலையின் ஏலம் மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளுக்கு முன்னர், தேயிலையின் தரத்தினை மதிப்பிடுவதற்குப் பொறுப்பாக செயற்படுகின்றது. வேறுபட்ட நறுமணம், காலநிலை இயல்புகளினால் ஏற்படும் தாக்கங்கள் (மழைவீழ்ச்சி, சூரியஒளி நேரங்கள் மற்றும் வெப்பநிலை), தரைத்தோற்றவியல் அமைப்புக்கள் மற்றும் வேறுபட்ட உற்பத்தி செயற்பாடுகள் போன்ற சில காரணிகளினால், தயாரிக்கப்பட்ட தேநீரின் தோற்றம் மற்றும் சுவை ஆகியவற்றில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. சுவைக்கப்பட்ட தேநீரின் இயல்புகள் மற்றும் சுவையாளரின் பயிற்சித்திறன் போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டு, தேயிலை மாதிரிகளின் விலை மற்றும் தரம் ஆகியன உறுதிசெய்யப்படும். திருப்தியற்ற தேயிலை மாதிரிகள் மேலதிக பகுப்பாய்வு நடவடிக்கைகளுக்காக இலங்கை தேயிலை சபையின் பகுப்பாய்வு ஆய்வுகூடத்துக்கு அனுப்பப்படும்.

இலங்கை தேயிலை சபையின் சுவைபார்க்கும் குழுவில், அரச மற்றும் தனியார் பிரிவுகளைச் சேர்ந்த நிபுணர்கள் உள்ளடங்குகின்றனர். இதில், கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் சங்கம் (CTTA), கொழும்பு தரகர்கள் சங்கம் (CBA), சிலோன் மரணடுகை சங்கம் (CPA), இலங்கைக்கான தேயிலை சிறிய பங்குடைமை அபிவிருத்தி சமூகங்களின் கூட்டமைப்பு (SLFTSHDS), தேயிலை ஏற்றுமதிச் சங்கம் (TEA), இலங்கை தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்களின் சங்கம் (SLTFOA) மற்றும் பக்க சார்பான முடிவுகளை தவிர்க்கும் வகையில், ஏதாவது தனியான குழுவின் உறுப்பினர்கள் ஆகிய அனைத்து பங்குதாரர்களும் உள்ளடங்குகின்றனர்.

**தேயிலை சுவைத்தலின் எண்ணக்கருவும், செயற்பாட்டு முறைமையும்**

- திரவநிலை தேநீர் தயாரிப்புக்காக ஐஎஸ்ஓ 3103 இன் உணர்ச்சி சோதனைகள்
- சிலோனில் தேயிலை தயாரிப்புக்கு, கறுப்புத் தேநீருக்கான சொல்லகராதி/ தனிக்கட்டுரை தேயிலை சுவைத்தல் சொல்லியல் ஐஎஸ்ஓ 6078 - இல. 4 சிலோனில் தேயிலை உற்பத்தி



## தனியார் விற்பனைக்கான ஒப்புதல் மற்றும் குழுவின் ஒப்புதல் மதிப்பீட்டுச் சான்றிதழ்

தேயிலை நிபுணர் குழுவினரின் பங்களிப்புடன் சாதாரண தேயிலை சுவைத்தல் அமர்வுகள், வாரத்திற்கு இருமுறை, பிரதானமாக திங்கட்கிழமை மற்றும் வியாழக்கிழமைகளில் நடைபெறும். அமர்வின் போது, இலங்கை தேயிலை சபையின் ஏற்றுமதி அலகிலிருந்து, கீழே குறிப்பிடப்பட்ட தேயிலை மாதிரிகள், நேரடியாக TTU க்குக் கிடைக்கப்பெறுவதுடன், பின்னர் மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்படும்.

அ) முன் ஏலத் தேயிலைகள்

ஆ) விசேட ஆய்வுத் தேயிலைகள்

இ) முன் இறக்குமதி மாதிரிகள்

ஈ) நேரடி விற்பனைகள்

உ) தினசரி மதிப்பீடு, முன் கப்பல் கண்காணிப்பு

அட்டவணை 2.4.1: ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மற்றும் சந்தேகத்துக்கிடமான மாதிரிகளின் தரவுகள்

| விவரணம் | ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை | சந்தேகிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பார்வைப் பரிசோதனைகள் | 209,639 | |
| ஒர்கனோலெப்டிக் | 31,446 | |
| ஏல முன் மாதிரிகள் | | |
| சந்தேகத்துக்கிடமான திரவ மாசடைதலினால்வாரியத்தினால் நிராகரிக்கப்பட்டவை | 5,067 | 490 |
| மசகு நார் | | 417 |
| முட்டாள்தனமான விஷயங்கள் | | 264 |
| கச்சா ஃபைபர | | 1,253 |

மூலம்: இலங்கை தேயிலை சபை

### அ) முன் ஏலத் தேயிலைகள்

இவ் அலகினூடாக, ஏலத்துக்கு முன்னரான தேயிலை மாதிரிகளை, எட்டுத் தரகர்கள் விற்பனைக்கு இரு வாரங்களுக்கு முன்னர் தங்களது மதிப்பீடுகளுக்காக அனுப்பினர். எஸ்டேட்டுக்கு வெளியிலான, அதியுயர் மற்றும் மத்திமம், முனைமப் பூக்களுடன், குறைவான வளர்ச்சியுடைய இலைகள், குறைவான வளர்ச்சியுடைய அரை இலைகள், குறைவாக வளரும் நுனி அல்லதுசிறிய மற்றும் தரம் குறைவானவற்றின் உப பட்டியல், தூசுகள் மற்றும் Bop1A போன்றவற்றின் மாதிரிகள் பார்வை மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுகின்றன. தரகர்கள் தகவல் தொழினுட்ப பிரிவினூடாக எழுந்தமானமாக தெரிவுசெய்யப்பட்டனர். பின்னர், புலன்கள் மூலமான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன.தெரிவுசெய்யப்பட்ட மாதிரிகள், வரவிருக்கும் ஏலத்துக்கு “வழங்கப்படும் அல்லது வழங்கப்படாது” எனும் கூட்டான முடிவுகளை எடுப்பதற்காக தெரிவுக்குழுவுக்கு அனுப்பப்பட்டு, பின்னர் முடிவுகள், ஏற்றுமதிப் பிரிவின் பிரதி தேயிலை ஆணையாளருக்கு தெரிவிக்கப்படும்.

### ஆ) கப்பலுக்கு முன்னரான தேயிலைகள்

கப்பலுக்கு முன்னர், சிங்க இலட்சணையை பயன்படுத்தல், ஐஎஸ்ஓ 3720 அளவுருக்கள் அல்லது வேறு ஏதாவது மாசடைவுகள் தொடர்பில், கப்பலுக்கு முன்னரான மாதிரியின் கீழ் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும். நிறைவுற்ற 2021 ஆம் ஆண்டில், இக்கண்காணிப்புத்திட்டத்தின் கீழ், 6,119 கப்பலுக்கு முன்னரான மாதிரிகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதுடன், இதில் 7528 மாசுற்ற மாதிரிகள் அடையாளங்காணப்பட்டன.

### இ) இறக்குமதிக்கு முன்னரான மற்றும் இறக்குமதிக்கு பின்னரான தேயிலைகள்

இறக்குமதிக்கு முன்னரான மாதிரிகள், அவற்றின் ஏற்றுமதிக்கான பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்யும் வகையில், இலங்கை தேயிலை சபையின் ஏற்றுமதி அலகினூடாக அனுப்பப்படும். மாதிரிகளுடனான ஒவ்வொரு விண்ணப்பங்களிலும், மாதிரிகளின் தோற்றம் மற்றும் தரம் தொடர்பில் குறிப்பிடப்பட்டிருக்கும்.இலங்கை தேயிலை சபையின் சுற்றறிக்கை இல OR/1/65 மற்றும் அதன் திருத்தங்களின் வழிகாட்டுதல்களுடன், சுவைபார்க்கும் குழுவினால், தேயிலை மாதிரிகள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும். கடந்த 2021 ஆம் ஆண்டில், 1,126 மாதிரிகள், இறக்குமதிக்கு முன்னரான மாதிரிகளாக TTU வினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

## தனியார் விற்பனைக்கான ஒப்புதல் மற்றும் குழுவின் ஒப்புதல் மதிப்பீட்டுச் சான்றிதழ்

### அ) தனியார் விற்பனைக்கான ஒப்புதல்

குழுவுடன் இணைந்த மாதிரிகள், தேயிலை சுவை மதிப்பீட்டுக்காக சுயாதீனமான தரகர்களின் அனுமதிகளுடன் விற்பனை முகவர்களினால், அனுப்பப்படுகின்றன. இச்சேவைக்காக, நிலையான கட்டணம் அறவிடப்படுவதுடன், உறுதிசெய்யும் கட்டணமாக, ரூபா. 500 (VAT + NBT வரிகள்) அறவிடப்படும். தற்போதைய நிலையில், மேற்கூறப்பட்ட திட்டங்கள், பச்சைத் தேயிலைகள், சேதனத் தேயிலைகள் மற்றும் விசேட தேயிலைகள் மற்றும் கொழும்பு ஏலத்தில் விற்கப்படாத சிறிய தர தேயிலைகளுக்கான அளவைகள் இடப்பட்டுள்ளன. கடந்த 2021 இல் மொத்தமாக, 10,908 தனியார் விற்பனைத் தொகுதிகள் பரீட்சிக்கப்பட்டு, ஒப்புதளிக்கப்பட்டுள்ளன.

### ஆ) முன்னோக்கிய ஒப்பந்தங்களுக்கான ஒப்புதல்

குறிப்பிட்ட காலத்தில், கொள்வனவாளர்களின் தேவைகளுக்கேற்ப, தெரிவுசெய்யப்பட்ட சிறியளவான மதிப்பெண்களுக்கான ஒப்புதல்கள் நிறைவேற்றப்பட்டன. விற்பனையாளர், கொள்வனவாளர், தரகர் மற்றும் தேயிலை சபை ஆகியோரினால், விற்பனை ஒப்பந்தத்துக்கான ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்ட சேவைகள் உள்ளடங்களாக, வரிக்கான ஒப்புதல் கட்டணமாக ரூபா. 500 (VAT + NBT வரிகள்) வழங்கப்படும். நிறைவுற்ற வருடத்தில் மொத்தமாக ஒப்புதலளிக்கப்பட்ட முன்னோக்கிய ஒப்பந்த வரிகளாக 1086 அமையப்பெற்றுள்ளன.

### இ) நேரடி விற்பனைகளுக்கான ஒப்புதல்

உற்பத்தியாளரும், ஏற்றுமதியாளராகவும் விளங்குபவர்கள் தமது உற்பத்திகளை நேரடியாக வெளிநாட்டு கொள்வனவாளர்களுக்கு விற்பனை செய்வதற்கான அனுமதிப்பத்திரங்கள் மேற்குறிப்பிட்ட திட்டத்தினால் வழங்கப்படுகின்றன. இதற்கு விதிவிலக்காக, பச்சைத் தேயிலை, சேதனத் தேயிலை மற்றும் விசேட தேயிலைகளை உள்ளூர் கொள்வனவாளர்களுக்கு விற்பனை செய்யமுடியும். நேரடி விற்பனைகளுக்கு ஒப்புதளிக்கும் குழு வியாழக்கிழமைகளில் கூடுவதுடன், வருடத்தினைக் கவனத்திற்கொள்ளும்போது, 1,203 விற்பனை வரிசைகளுக்கும், 1.37 மில்லியன் கிலோகிராம் எடை அளவுக்கும் ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

## சிங்க இலட்சணையைப் பதிவு செய்தல்

தேயிலையின் தரம் மற்றும் உற்பத்தி நாட்டினைப் பிரதிபலிக்கும் சிங்க இலட்சணையானது முழுமையாக, இலங்கை தேயிலை சபைக்கு சொந்தமானதாகும். தரச்சிறப்புடைய நுகர்வோர் பொதிகளில் சிங்க இலட்சணையை பொறிக்க விருப்பமுள்ளோர், இதற்காக தங்களது விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்கவேண்டுமென்பதுடன், அவை சென்றடையும் இடம் மற்றும் சந்தைகளுக்கேற்ப மதிப்பீடுகள் முன்னெடுக்கப்படும்.

உற்பத்தித்தரங்களுக்கான, சிங்க இலட்சணையின் செல்லுபடிக்காலம் மூன்று வருடங்களாகும். சில்லறை விற்பனைப்பொதிகளிலும் சிங்க இலட்சணையைப் பொறிப்பதற்கான தனியுரிமை, இலங்கை தேயிலை சபையினால் வழங்கப்படும். நிறைவுற்ற 2021 ஆம் ஆண்டில், புதிய உற்பத்தித்தரங்கள், புதுப்பித்தல் மற்றும் மேலதிக பொதிகளுக்காக தேயிலை ஊக்குவித்தல் பிரிவின் கண்காணிப்புடன் இணைந்து, TTU னால் 517 விண்ணப்பப்படிவங்கள் செயற்படுத்தப்பட்டன.தரத்தினை முகாமை செய்தல், இலட்சணையின் பெருமதிப்புடைய பெயரைப் பாதுகாத்தல் மற்றும் சிங்க இலட்சணையை மோசடியான முறையில் பயன்படுத்துவதைத் தவிர்த்தல் போன்ற காரணங்களுக்காக, வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுச் சந்தைகளில், சிங்க இலட்சணைக்கான, கண்காணிப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. கப்பலுக்கு முன்னரான கண்காணிப்பு செயற்பாடுகளின் போது, சிங்க இலட்சணையைக் கொண்ட, 80 வீதத்துக்கும் அதிகமான பொதிகள் எழுந்தமானமான முறையில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும். மேலும், வெளிநாட்டு சந்தைகளிலுள்ள, சிங்க இலட்சணை பொறிக்கப்பட்ட பொதிகள், மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டு, அறிக்கையிடுவதற்காக, இலங்கைத் தூதரகங்களின் வெளிநாட்டுப் பணியகங்கள் மற்றும் வரத்தக ஆலோசகர்களினால் முன்னோக்கி அனுப்பப்படும். உள்ளூர் சந்தைகளில், சிங்க இலட்சணையைப் பயன்படுத்தும் உற்பத்தித்தரங்கள், அவற்றின் சட்டவிரோத இலட்சணைப் பாவனை தொடர்பில் எழுந்தமான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும். பிரதானமாக, தேயிலை சபையில் பதிவுசெய்யப்பட்ட புகழ்பெற்ற, நீண்டகாலமாக நீடித்திருக்கும், நியாயமான சந்தைப்பங்கினைக் கொண்ட பொதியாளர்களுக்கு, சிங்க இலட்சணையை பயன்படுத்துவதற்கான அனுமதிகள் வழங்கப்படுவதுடன், கண்காணிபுக்கும் உட்படுத்தப்படும்.

# 2. 5 பகுப்பாய்வு ஆய்வுகூடம்

இலங்கை தேயிலை சபையின் பகுப்பாய்வு ஆய்வுகூடத்துக்கு நிறைவுற்ற 2021 ஆம் வருடம் மிகவும் விசேடமானதொரு வருடமாக விளங்கியது. பகுப்பாய்வு ஆய்வுகூடத்தின் மிகவும் சிரேஷ்ட மற்றும் முன்னனுபவம்வாய்ந்த நபரான வைத்தியக் காலாநிதி கே. ஆர். டபிள்யூ. அபேவிக்கிரம அவர்கள், நீண்டகாலமாக வெற்றிடமாக விளங்கிய பகுப்பாய்வு ஆய்வுகூடத்தின் பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டதுடன், சிலோன் இரசாயன நிறுவகத்தின் தொழில் திறமைக்கான தோழமை உறுப்பினர் அங்கத்துவ விருதும், திசம்பர், 2021 இல் வினைத்திறனாகும் வகையில் வழங்கிவைக்கப்பட்டது. இவரின் வழிகாட்டல்கள் மற்றும் ஒருங்கிணைப்புக்களின் கீழ், ஆய்வுகூட பரிசோதனை செயற்பாடுகள் விஸ்தரிக்கப்பட்டதுடன், LCMS/MS கருவியை கொள்வனவு செய்ததும் பிரதானமானதொரு வெற்றியாகும். பகுப்பாய்வு ஆய்வுகூடத்தில், களைநாசினி எச்சங்களுக்குரிய பகுப்பாய்வு அலகில், LCMS/MS கருவி பொருத்தப்பட்டதும், டைரோன் மற்றும் MCPA போன்ற குறைபாடுகள் நிலவிய களைநாசினிகளின் பலதரப்பட்ட களைநாசினி எச்சங்களுக்குரிய பகுப்பாய்வுகளையும் முன்னெடுக்கக்கூடியதாக அமைந்தது. மேலும், டைரோன் மற்றும் MCPA க்குரிய பகுப்பாய்வுகள் முறையே நொவம்பர் மற்றும் திசம்பர் 2021 தேயிலைத் தொழிற்துறைக்கு அறிமுகம்செய்யப்பட்டன.

தற்போதுள்ள விதிமுறைகளை வலுப்பெறச்செய்வதனூடாக சிலோன் தேயிலையின் தரத்தினை பராமரித்தல் மற்றும் தேயிலை சபையின் ஆய்வுகூட பரிசோதனை சேவைகளை மேலும் பலப்படுத்த முடியுமென்பதுடன், இலங்கை தேயிலை சபையின் புதிய விதிமுறைகளின் கீழ் 06/10/2021 அன்று பிரசுரிக்கப்பட்ட விசேட அரச வர்த்தமானி 2248/37 இல் "தேயிலையின் பகுப்பாய்வு மற்றும் தரச் சான்றுதழ்" எனப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

உற்பத்தியாகும் தேயிலையின் அதிகுறைந்த தரத்தினைப் பேணும் வகையில், "தேயிலைக்கான இலங்கை தேயிலை சபையின் தரநியமங்கள்/ வழிகாட்டிகள்" - AL/MQS-02/2021 ஜனவரி 1, 2021 இல் வினைத்திறனாகும் வகையில் அனைத்து பதிவுசெய்யப்பட்ட உற்பத்தியாளர்கள், தேயிலை ஏற்றுமதியாளர்கள் மற்றும் தேயிலையை இறக்குமதி செய்து பெறுமதி சேர்க்கைக்கான மீள் ஏற்றுமதி செய்வோருக்குமாக வெளியிடப்பட்டன.

அட்டவணை 2.5.1 பகுப்பாய்வு ஆய்வுகூடத்தினால் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகளின் சாரம்சம்

| பரிசோதனைகளின் பெயர் | பரிசோதனைகளின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | 2020" | 2021" |
| **இரசாயன பகுப்பாய்வுகள் அலகு** | | |
| தேயிலையிலுள்ள ஈரப்பதனை தீர்மானித்தல் | 280 | 334 |
| தேயிலையிலுள்ள மொத்த சாம்பலை தீர்மானித்தல் | 355 | 382 |
| தேயிலையிலுள்ள நீரில் கரையக்கூடிய மொத்த சாம்பலைத் தீர்மானித்தல் | 353 | 351 |
| தேயிலையிலுள்ள அமிலத்தில் கரையாத மொத்த சாம்பலைத் தீர்மானித்தல் | 355 | 313 |
| தேயிலையிலுள்ள நீரின் பிரித்தெடுப்பு அளவினை தீர்மானித்தல் | 189 | 127 |
| தேயிலையிலுள்ள நீரில் கரையக்கூடிய சாம்பலின் காரத்தன்மையை தீர்மானித்தல் | 356 | 320 |
| தேயிலையிலுள்ள பதனிடப்படாத நார்த்தன்மையை தீர்மானித்தல் | 420 | 549 |
| அடிப்படை கதிர்வீச்சு அளவீட்டுப் பரிசோதனைகள் | 150 | 241 |
| தரங்களை அடையாளங்காணும் பரிசோதனைகள்/ வடிகட்டி ஆய்வுகள் | 27 | 33 |
| இரசாயன அலகில் செல்லுபடியாக்குதல், பகுப்பாய்வு முறைகளை சரிபார்த்தலுடன் தொடர்புடைய செயற்பாடுகள் | 7 | - |
| **நுண்ணுயிரியல் பகுப்பாய்வுகள் அலகு** | | |
| மொத்தத் தட்டுக்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல் | 171 | - |
| மதுவம் மற்றும் பூஞ்சனத்தின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல் | 579 | 455 |
| தேயிலையிலுள்ள இறந்த மற்றும் உயிருள்ள பூச்சிகள் மற்றும் ஏனைய அசுத்தங்கள்/ பிற பொருட்களுக்கான நுணுக்குக்காட்டியல் ஆய்வுகள் | 28 | 35 |
| தேயிலையில் மரபணுக்களினால் மாற்றியமைக்கப்பட்ட உயிரினங்களை (GMO) தீர்மானித்தல் | 280 | 191 |
| மல கோர்லிபோர்ம் மற்றும் எசுக்கீரிச்சியா கோலி பற்றீரியாக்களைக் கண்டறிந்து, கணக்கெடுப்பை முன்னெடுத்தல் (ஈ.கோலை) | 544 | 455 |
| மொத்த கோர்லிபோர்ம் பற்றீரியாக்களைக் கண்டறிந்து, கணக்கெடுப்பை முன்னெடுத்தல் | 544 | 462 |
| நுண்ணுயிரியல் பகுப்பாய்வுகள் அலகில் செல்லுபடியாக்குதல், பகுப்பாய்வு முறைகளை சரிபார்த்தலுடன் தொடர்புடைய செயற்பாடுகள் | 4 | - |
| **பீடைநாசினி எச்சங்களுக்கான பகுப்பாய்வுகள் அலகு** | | |
| HPLC RI கண்டறியும் கருவியை பயன்படுத்தி சீனி பகுப்பாய்வுகளை முன்னெடுத்தல் | 5085 | 5131 |
| LCMS/MS ஐ பயன்படுத்தி டைரோன் பகுப்பாய்வுகள் | | 124 |
| LCMS/MS ஐ பயன்படுத்தி MCPA பகுப்பாய்வுகள் | | 4 |
| கிருமிநாசினி அலகில் செல்லுபடியாக்குதல், பகுப்பாய்வு முறைகளை சரிபார்த்தலுடன் தொடர்புடைய செயற்பாடுகள் | 3 | - |
| **மொத்தம்** | 9240 | 9507 |

மூலம்: இலங்கை தேயிலை சபை

அத்துடன், ஆய்வுகூடத்துக்கு “சிங்க இலட்சனை தர அளவுகோள்களுக்கான” மீளாய்வுகளை நிறைவுசெய்யக்கூடியதாக அமைந்ததுடன், சிங்க இலட்சனை சான்றுதழிக்கப்பட்ட தேயிலைகளுக்கு அதியுயர் அங்கீகாரத்தினை வழங்கும்வகையில் புதிய ஆய்வுத்தேவைப்பாடுகள் அறிமுகம்செய்யப்பட்டன.

இரசாயன செயற்கை உரங்களை தடைசெய்தல் எனும் அரசின் தீர்மானத்துடன், உயிரியல்/ கொம்போஸ்ட் உரங்களுக்கான தரநியமங்களை நிர்ணயம் செய்தல் மற்றும் உயிரியல்/ கொம்போஸ்ட் மற்றும் நீர்ம உரங்களைப் பயன்படுத்தி மண் வளத்தினை விருத்திசெய்தல் தொடர்பில் தொழிற்துறைகள் மற்றும் விவசாயிகளுக்கு விளக்கமளித்தல் போன்ற பல்வேறு பிரதான நடவடிக்கைகளுடன் பகுப்பாய்வு ஆய்வுகூடம் பிரதான பங்கினை வகிக்கின்றது. இவ் அணுகுமுறைகளுடன், பகுப்பாய்வு ஆய்வுகூடத்துடன் இணைந்ததாக “மண் மற்றும் உர பரிசோதனை ஆய்வுகூடத்தினை” நிறுவுவதற்கான தீர்மானம் எட்டப்பட்டதுடன், இதன் முதற்கட்டப்பணிகள் திசம்பர் 2021 இல் ஆரம்பிக்கப்பட்டன. இலங்கை தேயிலை சபையின் மாதிரி உர ஆலை மானியத்தின் கீழ் உருவாக்கப்படும், சேதன திண்மப்பசளை மற்றும் திரவப்பசளைகளை பௌதீக ரீதியில் பரிசோதிப்பதற்கான செயற்பாடுகளையும் இவ் ஆய்வுகூடத்தின் கீழ் முன்னெடுக்கமுடியும்.

## தேயிலைத்தொழிற்துறையினை வழிநடத்துவதில் பகுப்பாய்வு ஆய்வுகூடத்தின் தலையீடுகள்

மீளாய்வு வருடாமான 2021 இல், 9507 மாதிரிகள் பகுப்பாய்வு ஆய்வுகூடத்துக்குக் கிடைக்கப்பெற்றதுடன், இதில் 1440 பரிசோதனைகள் ISO இன் அதிகுறைந்த தர நியமங்களுக்குக் கீழே அமையப்பெற்றன.

அட்டவணை 2.5.2 பகுப்பாய்வு ஆய்வுகூடத்தின் செயல்திறன்

| பகுப்பாய்வு அலகு | மிகக்குறைந்த தர நியமங்களுக்குக் கீழே அமையப்பெற்ற மாதிரிகளின் எண்ணக்கை |
|---|---|
| நுண்ணுயிரியல் | 450 |
| இரசாயனவியல் | 684 |
| வெல்லம்/ பீடைநாசினி எச்சங்கள் | 306 |

மூலம்: இலங்கை தேயிலை சபை

### பீடைநாசினிகள் எச்சங்கள் பகுப்பாய்வு அலகின் செயல்திறன்

பீடைநாசினி எச்சங்களின் பகுப்பாய்வு அலகினால்மேற்கொள்ளப்பட்ட மொத்தமான வெல்ல 5131மற்றும் டைரோன் 124 பகுப்பாய்வுகளில், 306 பகுப்பாய்வுகளின் முடிவுகள் குறித்த தரநியமங்களுக்கு குறைவாக அமையப்பெற்றன.

அட்டவணை 2.5.3 பீடைநாசினிகள் எச்சங்கள் பகுப்பாய்வு அலகின் செயல்திறன்

| பீடைநாசினி பகுப்பாய்வின் வகை | மிகக்குறைவான தர நியமங்களுக்குக் குறைவானவை |
|---|---|
| பிரக்டோஸ் | 27 |
| குளுக்கோஸ் | 67 |
| சுக்குரோஸ் | 159 |
| டைரோன் | 53 |

மூலம்: இலங்கை தேயிலை சபை

### நுண்ணுயிரியல் பகுப்பாய்வுகள் அலகின் செயல்திறன்

இதற்கமைய, உள்ளக கண்காணிப்பு சேவையினூடாக பெறப்பட்ட 1866 மாதிரிகளில் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகளில் 450 மாதிரிகள் குறிப்பிட்ட தரநியமங்களுக்கு கீழே அல்லது மனித நுகர்வுக்கு உகந்ததல்ல என அடையாளங்காணப்பட்டது. தேயிலை ஆணையாளரின், தேயிலை சபை ஒழுங்குமுறை செயற்பாடுகளினூடாக இம்மாதிரிகளுக்குரிய பொதிகள் அழிக்கப்பட்டு, கட்டமைப்பிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அட்டவணை 2.5.4 நுண்ணுயிரியல் பகுப்பாய்வுகள் அலகின் செயல்திறன்

| நுண்ணுயிரியல் ஆய்வின் வகை | நுண்ணுயிரியல் ஆய்வின் வகை |
|---|---|
| மதுவம் மற்றும் பூஞ்சனம் | 249 |
| கோர்லிபோர்ம் | 198 |
| ஈ-கோலை | 3 |

மூலம்: இலங்கை தேயிலை சபை

## இரசாயன பகுப்பாய்வு அலகின் செயல்திறன்

மேற்கொள்ளப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வுகளில், மாதிரிகள் தேயிலையின் அதிகுறைந்த தரநியமத்துக்கு குறைவாகக் காணப்பட்டதுடன், அளவுருக்களின் திருப்தியற்ற தன்மை காரணமாக அவற்றினை அழிக்கக்குமாறு உறுதி வழங்கப்பட்டது. இது கீழே சாராம்சமாகத் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.5.5: இரசாயன பகுப்பாய்வு அலகின் செயற்திறன்

| இரசாயன பகுப்பாய்வு வகை | அதிகுறைந்த தர நியமங்கள்/ வழிகாட்டிகளுக்குக் கீழே |
|---|---|
| மசகு நார் உள்ளடக்கம் | 444 |
| காரத்தின் உள்ளடக்கம் | 20 |
| ஈரப்பதன் | 214 |
| சிலிக்கனைக் கொண்ட பொருட்கள் | 04 |
| சிலிக்கனைக் கொண்ட பொருட்கள் | 02 |

மூலம்: இலங்கை தேயிலை சபை

## தர ஆய்வு அலகின் செயல்திறன்

**தேயிலை ஆணையாளர் அல்லது பிரதி தேயிலை ஆணையாளரின் வேண்டுகோளுக்கமைய (ஏற்றுமதிகள்) 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பகுப்பாய்வு ஆய்வுகூடத்தின் பயிற்சிபெற்ற தரநிர்ணய முகாமைத்துவ உத்தியோகத்தர்களின் தலையீடுகள் மற்றும் உதவிளுடன் உத்தியோகபூர்வமான 50 கள மாதிரிகள் பெறப்பட்டன. அனைத்து ஆய்வுகூட பரிசோதனைகளினதும் துல்லியத்தன்மையானது பெறப்பட்ட மாதிரிகளின் சீராக்கல்களில் தங்கியுள்ளது.**






# 2. 6 நிர்வாகப் பிரிவு

மனித வள முகாமைத்துவம் மற்றும் மனித வள அபிவிருத்தி செயற்பாடுகள் அனைத்தையும் உருவாக்குதல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்வு செய்தல், தகவல் தொழிநுட்ப சேவைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் பராமரிப்பதற்கான சட்ட நடவடிக்கைகள், தேயிலை சபையின் திட்டமிடல், கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்வு தொழிற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் நெறிப்படுத்தல், புள்ளிவிபரவியல் தகவல்களை பரப்புதல், தேயிலை சபையின் வாசிகசாலையை முகாமை செய்தல் மற்றும் பராமரித்தல், கொள்வனவு செயற்பாடுகள், தேயிலை சபையின் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து செயற்பாடுகள் ஆகிய செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக இலங்கை தேயிலை சபையின் நிர்வாகசபை தொழிற்படுகின்றது.

அட்டவணை 2.6.1: இலங்கை தேயிலை சபையின் தற்போதைய ஊழியர் பலம்

| வகை | ஊழியர்களின் எண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | |
| சிரேஷ்ட நிலை | 04 | 01 | 05 (1.9%) |
| மூன்றாம் நிலை | 38 | 17 | 55 (21.2%) |
| இரண்டாம் நிலை | 49 | 88 | 137 (83%) |
| முதற்படி நிலை | 57 | 05 | 62 (58.9%) |
| மொத்தம் | 148(57.2 %) | 111 (42.8%) | 259 (100%) |

மூலம்: இலங்கை தேயிலை சபை

வரைபு 2.6.1: ஊழியர்களின் பாலினப் பரம்பல்




மேலே குறிப்பிடப்பட்டுள்ளவற்றில், கடந்த ஆண்டில் இடைவிலகிய 11 ஊழியர்கள் மற்றும் ஓய்வுபெற்ற 04 ஊழியர்களுடன் மொத்தமாக 15 ஊழியர்கள் பணியிலிருந்து விலகியுள்ளனர். ஓய்வுபெறுவதுடன், 3 ஊழியர்கள் சுயவிருப்புடன் இடைவிலகுகின்றனர்.

இலங்கை தேயிலை சபையின் ஊழியர்கள்: சிரேஷ்ட மட்டத்திலிருந்து, முதற்தர மட்டம் வரையுள்ள ஊழியர்களுக்குரிய திறனைக் கட்டியெழுப்புவதற்கான பயிற்சிகள் கோவிட் 19 இன் வழிகாட்டல்களின் கீழ் முன்னெடுக்கப்படும். தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் நிலவிய நோய்த்தொற்று நிலைமை காரணமாக, இவ்வருடத்தில் பட்ஜெட்டுக்குட்படுத்தப்பட்ட வெளிநாட்டு பயிற்சி நடவடிக்கைகள் மற்றும் உள்ளக திறன்சார் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தமுடியாத நிலை ஏற்பட்டது.

அட்டவணை 2.6.2: ஊழியர் மட்டத்திலான உள்ளூர் பயிற்சித் திட்டங்கள்

| வகை | பயிற்சிபெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|
| சிரேஷ்ட நிலை | 02 |
| மூன்றாம் நிலை | 11 |
| இரண்டாம் நிலை | 57 |
| முதற்படி நிலை | 02 |
| மொத்தம் | 72 |

மூலம்: இலங்கை தேயிலை சபை

## CSR நடவடிக்கைகள்

மாவட்டத்தில், பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலைக்கு, இலங்கை தேயிலை சபையினால் செயற்கை உயிர்காப்பு சுவாசக்கருவிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. கடந்த காலங்களில், கோவிட்- 19 தொற்றினால் பாதிக்கப்பட்டு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்களுக்கான செயற்கை உயிர்காப்பு சுவாசக்கருவிகளுக்கு பாரிய தட்டுப்பாடுகள் நிலவின. இந்நிகழ்வில், பிரதம அதிதியாக மதிப்புக்குரிய அமைச்சர். வைத்தியர் ரமேஸ் பத்திரன அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்.





# 2.7 உள்ளக தணிக்கைப் பிரிவு

பங்குதாரர்களான, இலங்கை அரசு, தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்கள், தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள், தேயிலைப்பிரிவுத் தொழிலாளர்கள் மற்றும் இலங்கைப் பொதுமக்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்திசெய்யும் வகையில், ஒதுக்கப்பட்ட நிதியியல், நிர்வாக மற்றும் மனித வளங்களை வினைத்திறனான முறையில் பயன்படுத்துவதை தணிக்கை செய்யும் நோக்குடன், உள்ளக தணிக்கைப்பிரிவு தொழிற்படுகின்றது.

இடர் மேலாண்மை, கட்டுப்பாடு மற்றும் நிர்வாக செயல்முறையின் செயற்திறனை மதிப்பிடுவதற்கும், மேம்படுத்துவதற்கும் முறையானதொரு ஒழுக்கமான அணுகுமுறையைக் கொண்டுவருவதன் மூலமாக, தேயிலை சபையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தணிக்கைப்பிரிவானது உதவியாக அமைகின்றது. கடந்த காலப்பகுதியில் நிலவிய கோவிட் நோய்த்தொற்றுக் காரணமாக, மீளாய்வு வருடத்தில் இருமுறை தணிக்கைக்குழுவை சந்தித்ததுடன், தேவைகளின் அடிப்படையிலான கோரிக்கைகளின் நிமிர்த்தம் பிரிவுகளின் தலைமை அதிகாரிகள் அமர்வுகளில் பங்கேற்றனர். கூட்டரிக்கைகளுடன், பணிப்பாளர் வாரியத்துக்கு பரிந்துரைகள் வழங்கப்பட்டதுடன், பொருத்தமான திருத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது தொடர்பிலும் தொடர்ந்து கண்காணிக்கப்படும்.

# 2. 8 தகவல் தொழில்நுட்பப் பிரிவு

கடந்த 2020 ஆம் வருடத்துடன் ஒப்பிடுகையில், நிறைவுற்ற 2021 ஆம் வருடம் இலங்கை தேயிலை சபையின் தகவல் தொழில்நுட்பப் பிரிவுக்கு நேரான பல திருப்பங்களைக் கொண்ட இனிமையான வருடமாகும். சர்வதேச ரீதியில் நிலவுகின்ற நிலைமைகளினால் பெரும்பாலான அபிவிருத்தித் திட்டங்கள் பிற்போடப்பட்டன. பிரதேச செயல்முறை சம்பியங்களின் இருப்பு இல்லாமையினால் 2020 ஆம் வருடம் முழுவதுமாக தேயிலை பெறுமதிசேர் சங்கிலிக்கட்டமைப்பு மந்தகதியிலேயே நகர்கின்றது. மேலும், SRS லுள்ள சில குறிப்பிடத்தக்க செயலிகளை, விற்பனையாளர்களினால் பயனர்கள் இல்லாமல் கைப்பற்ற முடியவில்லை. ஆனால், 2021 ஆம் வருடத்தின் விடியலுடன், விற்பனையாளர்களுடன் அபிவிருத்தி செயற்பாடுகளை வெற்றிகரமாக தொடர முடிந்தது.

முன்னர் பயன்படுத்தப்பட்ட இணையப்பாதுகாப்பு பயர்வோல் தொழினுட்பம் வழக்கொழிந்து போனதுடன், அதே வகையில் நவீன மற்றும் மேம்படுத்தப்பட்ட பதிப்பினால் மாற்றியமைக்கப்பட்டது. இது இணையவெளியில் ஏற்படக்கூடிய இணையவழித்தாக்குதல்கள் மற்றும் ஏனைய இலகுவில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய தன்மைகளிலிருந்து பாதுகாக்கும் வகையில் பல்வேறு அதிநவீன இயல்புகளைக் கொண்டுள்ளது. மேலும், TTU பிரிவில் கமராக்கட்டமைப்புக்கள் எதுவும் பொருத்தப்படவில்லை, ஆகவே, குறித்த பிரிவில் ஏற்படக்கூடிய மோசடிகளை தணிக்கும் வகையில், நிறைவுற்ற 2021 இல், அதிநவீன கமராக்கட்டமைப்புக்கள் பொருத்தப்பட்டன. இது அப்பிரிவின் வெளிப்படைத்தன்மையை மேலும் அதிகரிப்பதாக அமைகின்றது.

தற்போதுள்ள HR மென்பொருள் மேசைப்பிரயோகத்துக்கு மாத்திரம் அணுகக்கூடியவகையில் அமைந்திருந்தது. எவ்வாறாயினும், நாங்கள் அதற்கு ஒருபடி மேலாக புதுமையானதொரு தொழிநுட்பத்துடன் கைகோர்த்து, SLTB பயனர்களுக்கான கையடக்கத்தொலைபேசிக்கான செயலியை உருவாக்கினோம். ஆகவே, பயனர்கள் தொலைவிலிருந்து தமது கையடக்கத் தொலைபேசி செயலியினூடாக சேவைகளை செயற்படுத்த முடியும். இச்செயலியை கையடக்கத் தொலைபேசியின் விளையாட்டு அங்காடியிலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

# 3. 0 தொழிற்துறையின் சுயவிபரம்

நிறைவுற்ற 2021 ஆம் வருடம் கோவிட் 19 நோய்த்தொற்றிலிருந்து மீண்டெழுந்து, பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பும் வருடாமாக அமையுமெனும் அதியுயர் நம்பிக்கையுடன் ஆரம்பமானது. இந்நோய்த்தொற்றுக் காலத்தில் இலங்கை உட்பட, உலகில் பல்வேறு நாடுகளின் பொருளாதாரம் பாரிய சவால்களை எதிர்நோக்கியது. இதன் விளைவாக சர்வதேச பொருளாதாரம் கீழிறங்கியதுடன், 2020 ஆம் ஆண்டளவில் இலங்கையின் பொருளாதாரம் 3.6% ஆல் வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், இவ்வீழ்ச்சியானது ஒவ்வொரு பொருளாதார செயற்பாட்டிலும் எதிரான தாக்கத்தினை ஏற்படுத்தியதுடன், இறுதியாக பாதகமான தாக்கங்களை தணிக்கும் வகையில், அரசினால் "புதிய சாதாரண நிலை" எனும் கொள்கை அறிமுகம்செய்யப்பட்டது. இதற்கமைய, 2021 ஆம் ஆண்டளவில் மெய்நிகர் கூட்டங்கள், தொலைதூர வேலைக் கலாச்சாரம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

நிறைவுற்ற 2021 ஆம் ஆண்டில், முன்னொருபோதுமில்லாத சவால்களை எதிர்நோக்கியிருந்தபோதிலும், உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில், இலங்கை தேயிலைத் தொழிற்துறையின் செயற்திறன் ஒட்டுமொத்தமாக சிறப்பானதாக விளங்கியது. இலங்கையின் வருடாந்த தேயிலை உற்பத்தியானது, 2021 ஆம் ஆண்டில் 299 மில்லியன் கிலோகிராம்களாக அமைந்ததுடன், 2020 ஆம் ஆண்டின் குறித்த காலத்தில், இது 279 மில்லியன் கிலோகிராம்களாக பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், நிறைவுற்ற வருடத்தில் 20 மில்லியன் கிலோகிராம்களினால் (7%) அதிகரித்துள்ளது. அத்துடன், 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், நிறைவுற்ற 2021 ஆம் ஆண்டில் வருடாந்த தேயிலை ஏற்றுமதி அளவுகள் 7.65% அதிகரிப்பைக் காட்டுகின்றன. நிறைவுற்ற 2021 ஆம் ஆண்டில், மொத்த ஏற்றுமதியானது 286 மில்லியன் கிலோகிராம்களாக அமைந்ததுடன், இது 2020 ஆம் ஆண்டின் குறித்த காலத்தில் 265 மில்லியன் கிலோகிராம்களாக அமைந்தது. இது கடந்த 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8% ஆல் அதிகரித்துள்ளது. அத்துடன் 2021 ஆம் வருடத்தின் ஜனவரி தொடக்கம் திசம்பர் வரையான காலப்பகுதியில், தேயிலை ஏற்றுமதி வருமானம் ரூபா 263 பில்லியன்களாக (1.32 பில்லியன் அமெ.டொலர்) அமைந்ததுடன், இது 2021 ஆம் ஆண்டு, அமெரிக்க டொலர்களின் அடிப்படையில் 7% வளர்ச்சியைக் காட்டுகின்றது. மேலும், 2020 ஆம் ஆண்டில் சராசரி விலையானது கிலோகிராமுக்கு ரூபா 867 ஆக அமைந்ததுடன், 2021 ஆம் ஆண்டு ரூபா 921.23 ஆக அதிகரித்தது.

சிலோன் தேயிலையின் பாரம்பரியத் தேயிலையே பிரதான கூறாக அமையப்பெற்றுள்ளதுடன், இது நிறைவுற்ற 2021 ஆம் ஆண்டில் 270.7 மில்லியன் கிலோகிராம்களாகப் பதியப்பட்டதுடன், கடந்த 2020 ஆம் ஆண்டில் 252.7 மில்லியன் கிலோகிராம்களாகப் பதியப்பட்டது. இது 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 7% மான அதிகரிப்பைக் கா ட்டுகின்றது. அத்துடன், 2021 ஆம் ஆண்டுக்கான ஒட்டுமொத்த CTC உற்பத்தி மான அதிகரிப்பைக் காட்டுவதுடன், இது மீளாய்வு வருடத்தில் 26 மில்லியன் கிலோகிராம்களாக அமைந்தது. எவ்வாறாயினும், கடந்த 2020 ஆம் ஆண்டு 2 மில்லியன் கிலோகிராம்களாக காணப்பட்ட பச்சைத்தேயிலை உற்பத்தியானது, 2021 ஆம் ஆண்டு 2.6 மில்லியன் கிலோகிராம்களாக 27 % மான அதிகரிப்பைக்காட்டியது.

இலங்கையில், நிறைவுற்ற 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கோவிட் 19 நோய்த்தொற்றினை முழுமையான தடுப்பூசி வழங்குதல் நடவடிக்கைகளினூடாக ஒரு குறிப்பிட்ட அளவுக்கு கட்டுப்படுத்தக்கூடியதாக அமைந்தது. மக்கள் சில கட்டுப்பாடுகளின் கீழ், தங்களது நாளாந்த வேலைகள்/ பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபட்டதுடன், பொருளாதாரத்தினை மீண்டும் வழமைக்குக்கொண்டுவர சிறப்பானதொரு வாய்ப்பாக அமைந்தது. எவ்வாறாயினும், நிறைவுற்ற வருடத்தில் ஏற்பட்ட இந்நிலைமையினால், இலங்கை தேயிலை தொழிற்துறையின் சிறப்பானதொரு செயற்திறனை வழங்கமுடியாத நிலை ஏற்பட்டது. தொழிற்துறை உற்பத்தியின், பிரதான சுட்டிக்காட்டிகளில், ஏற்றுமதிகள், விற்பனைகள் மற்றும் விலைகளை நேரானதாக அவதானிக்க முடியும்.மேலும், கடந்த வருடத்தில், தேயிலைத் தொழிற்துறையில் டிஜிட்டல் இலத்திரனியல் ஏலமுறைமையை தொடர்ச்சியாக முன்னெடுப்பது, சிறப்பானதொரு வெற்றியாகும். உலகப்புகழ் பெற்ற கூக்குரல் ஏலமுறைமையானது நள்ளிரவில் மெய்நிகராக தொழிற்படும் டிஜிட்டல் தளத்துக்கு மற்றப்பட்டது. நேரடியான தேயிலை ஏலமானது, 125 வருடங்களுக்கு மேலாக பழமைவாய்ந்ததாக அமைந்துள்ளதுடன், இனிவரும் காலங்களில் தேயிலை ஏலத்தில் இம்முறை பயன்படுத்தப்படாது.

எவ்வாறாயினும், 2021 இன் முதற் காலாண்டுப்பகுதியில், 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 39% ஆல் அதிகரித்ததுடன், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுப்பகுதிகளிலும், 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியைக்காட்டுகின்றது.

ஒட்டுமொத்தமான கொழும்பு தேயிலை ஏல சராசரி விலைகள் நிறைவுற்ற வருடத்தில் கிலோகிராமுக்கு US$ 3.09 ஆகக் குறைவடைந்துள்ளதுடன் இது முந்திய வருடத்தில் கிலோகிராமுக்கு US$ 3.39 ஆகக் காணப்பட்டது. ஆகவே, கொழும்பு தேயிலை ஏற்றுமதி விலைகள் 2020 இல் ரூபா 628.21 ஆக அமைந்ததுடன், இது 2021 இல் ரூபா 615.44 ஆகக் குறைவடைந்தது.

நிறைவுற்ற ஆண்டில், இலங்கையிலிருந்து 285,871 MT அளவான தேயிலை ஏற்றுமதிசெய்யப்பட்டுள்ளதுடன், இதன் வருமானமாக ரூபா 263 பில்லியன் (US$ 1.32 பில்லியன்) (மீள் ஏற்றுமதிகள் உட்பட) ஈட்டப்பட்டுள்ளது. சராசரி FOB விலைகள் கிலோகிராமுக்கு ரூபா 921.23 (US$ 4.63) ஐ எட்டியது. மீளாய்வு வருடத்தில், மொத்த ஏற்றுமதிக் கொள்ளளவு (மீள் ஏற்றுமதியுடன்) 20,302 MT ஆக அதிகரித்ததுடன், ஏற்றுமதிகளிலான வருமானம் 14 % ஆல் அதிகரித்துள்ளது.

# தேயிலைக்காணிகளைப் பகிர்ந்தளித்தல்

தற்போதைய நிலையில், இலங்கையில் 202,540 ஹெக்டயர் பரப்பில் பயிர்ச்செய்கைகள் (தற்போதைய நிலையில்) மேற்கொள்ளப்படுகின்றன. இதில் அரசுத்துறையினரை (40%) விட தனியார்த்துறையினர் (60%) அதிகளவான காணி உரிமைகளை கொண்டுள்ளனர். பொருத்தமான காலநிலைத் தேவைகளை கவனத்திற்கொண்டு ஈர வலயத்திற்குட்பட்ட பகுதிகளில் அதிகளவில் பயிரிடப்படுவதுடன், நாட்டின் சில மாவட்டங்களில் மாத்திரம் தேயிலைப் பயிர்ச்செய்கை பரந்து காணப்படுகின்றது

# தேயிலை உற்பத்தி

நிறைவுற்ற 2021 ஆம் ஆண்டில், தேசிய தேயிலை உற்பத்தியானது 299.51 மில்லியன் கிலோகிராம்களாகப் பதியப்பட்டது. இது கடந்த 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 20 மில்லியன் கிலோகிராம்களினால் (7 % வீழ்ச்சி) குறைவடைந்தது.

இலங்கையில், வேறுபட்ட தரைத்தோற்ற உயரங்களிலான தேயிலை வளர்ப்புக்கள் மற்றும் அவற்றின் உற்பத்திகளை அடிப்படையாகக்கொண்டு மூன்று வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. தாழ்நாட்டு தேயிலையானது, சராசரி கடல் மட்டத்திலிருந்து 600 மீற்றர் வரையான உயரத்தில் பயிரிடப்படுவதுடன், கறுப்புப்தோற்றமுடைய உறுதியான சுவை மற்றும் மணத்தினைக் கொண்டதாக அமையப்பெற்றுள்ளதுடன், தேசிய உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமான அளவில் (2021 இல் 61% ) பங்களிப்புச் செலுத்துகின்றன. மேலும், மேல்நாட்டுப் பகுதிகளில் 1200 மீற்றருக்கும் மேலான உயரங்களில் வளர்க்கப்படும் தேயிலைகள், மேற்தரத் தேயிலைகளாக கருதப்படுவதுடன், வாசனையுடனான தனிச்சிறப்புமிக்க உயர்தரத்தினைக் கொண்டுள்ளன. நிறைவுற்ற 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில், மேல் மற்றும் மத்திம உயரங்களிலான தேயிலைகள் தேசிய உற்பத்தியில் முறையே, 22% மற்றும் 17% பங்குகளை வகுத்தன. ள்ளான வதுடன், அவை தனித்துவமான சுவை மற்றும் நறுமணத்தைக் கொண்டதாகவும் அமைந்துள்ளன. அத்துடன், தாழ் மட்டத்திலான தேயிலைகள், தேசிய உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமான பங்களிப்பைக் (61%) கொண்டுள்ளன.

அட்டவணை 3.1: உயரத்தின் அடிப்படையிலான உற்பத்தி

| உயரம் | அளவு (Kg) |
|---|---|
| உயர் | 65,326,571 |
| நடுத்தரம் | 50,985,716 |
| குறைவு | 183,176,135 |
| மொத்தம் | 299,488,422 |
| மூலம்: இலங்கை தேயிலை சபை | |

உயரத்தின் அடிப்படையிலான உற்பத்தி




மூலம்: இலங்கை தேயிலை சபை

## மாதாந்த தேயிலை உற்பத்தி உற்பத்தி

வருடம் முழுவதுமாக, தாழ்நிலப்பகுதியிகளில் வலயத்தில் வளரும் தேயிலை வகைகளே தேசிய தேயிலை உற்பத்தியில் பாரிய பங்களிப்பினைச் செலுத்துகின்றன. நிறைவுற்ற 2021 ஆம் வருடத்தில், அதியுயர் தேயிலை உற்பத்தியான 31 மில்லியன் கிலோகிராம் மே மாதத்தில் பதியப்பட்டதுடன், அதிகுறைந்த தேயிலை உற்பத்தியான 20 மில்லியன் கிலோகிராம் நொவம்பர் மாதத்தில் பதிவானது.

வரைபு 3.2 : உயரங்களின் அடிப்படையில் மாதாந்த தேயிலை உற்பத்தி




## விவசாய காலநிலை மாவட்டங்களின் அடிப்படையிலான ஆய்வுகள்

அதியுயர் விவசாய காலநிலை மாவட்டங்களின் உற்பத்திகளில், 48 மில்லியன் கிலோகிராம்களுடன் இரத்தினபுரி மாவட்டம் முதலிடத்திலும், இரண்டாவது அதியுயர் உற்பத்தியான 42 மில்லியன் கிலோகிராம்களுடன் காலி மாவட்டம் இரண்டாமிடத்திலும் திகழ்கின்றன. தாழ்நிலப்பகுதிகளிலான உற்பத்திகளில், நிறைவுற்ற 2021 ஆம் ஆண்டில் 168.7 மில்லியன் கிலோகிராம்களும், 2020 ஆம் ஆண்டில் 156.7 மில்லியன் கிலோகிராம்களும் பதிவாகின.

அட்டவணை 3.2: கமநல காலநிலை மாவட்ட மட்டத்திலான தேயிலை உற்பத்தி

| கமநல காலநிலை மாவட்டம் | ஜனவரி தொடக்கம் திசம்பர் | | | |
|---|---|---|---|---|
| | 2021 (Kg.) | 2020 (Kg.)* | மாற்றம் (Kg.) | % |
| **நுவரேலியா** | 3,587,636 | 2,858,604 | 729,032 | 26 |
| **மேல் மாகாணம்** | | | | |
| ரம்போடை | 1,957,781 | 1,832,914 | 124,867 | 7 |
| பூண்டுலோயா | 3,685,134 | 3,564,815 | 120,320 | 3 |
| அக்கரப்பத்தன | 5,069,113 | 4,536,186 | 532,927 | 12 |
| நானுஓயா/ லிந்துல/ தலவாக்கலை | 8,514,839 | 8,062,390 | 452,449 | 6 |
| பட்டன/ கொட்டக்கல | 4,187,182 | 4,475,252 | (288,070) | (6) |
| ஹற்றன்/ டிக்கோயா | 8,152,096 | 7,844,983 | 307,113 | 4 |
| பொஹோவந்தலாவ | 5,588,128 | 5,612,580 | (24,451) | - |
| அப்கொட்/ மஸ்கெலிய | 5,488,000 | 5,049,048 | 438,952 | 9 |
| மொத்த மேல் மாகாணம் | 42,642,272 | 40,978,167 | 1,664,106 | 4 |
| **நடுத்தரம்** | | | | |
| வட்டவளை/ கினிகத்தேன/ நோர்ட்டன் | 1,817,763 | 2,163,883 | (346,120) | (16) |
| புஸ்ஸல்லாவ/ ஹேவாஹெட்ட | 5,905,005 | 6,005,389 | (100,384) | (2) |
| கொத்மலே | 940,778 | 876,354 | 64,424 | 7 |
| கம்பொல/ நாவலப்பிட்டி | 19,650,628 | 17,718,123 | 1,932,505 | 11 |
| நிலம்பே/ ஹந்தானை/ ஹலஹா | 1,441,313 | 1,447,513 | (6,200) | - |
| கடுகண்ணாவை | 5,462,630 | 4,642,927 | 819,704 | 18 |
| மடுல்கலை/ நக்கல்ஸ்/ ரன் | 3,121,792 | 3,383,210 | (261,419) | (8) |
| ஹுன்னஸ்கிரிய/ மாத்தளை/ யக்தே | 1,522,678 | 1,386,413 | 136,266 | 10 |
| பலாங்கொடை/ இறக்குவானை | 8,846,827 | 8,027,660 | 819,167 | 10 |
| மொத்தம் - நடுத்தரம் | 48,709,412 | 45,651,470 | 3,057,942 | 7 |
| **உடபுசல்லாவை** | | | | |
| உடபுசல்லாவை/ கல்கிரநோய் | 4,060,550 | 3,944,295 | 116,255 | 3 |
| மத்துரட்ட | 1,373,647 | 935,085 | 438,562 | 47 |
| மொத்தம் - உடபுசல்லாவை | 5,434,197 | 4,879,380 | 554,817 | 11 |
| **ஊவா மாகாணம்** | | | | |
| கொஸ்லந்த/ ஹல்தமுள்ள | 602,593 | 817,742 | (215,149) | (26) |
| ஹப்புத்தளை | 4,130,515 | 3,598,688 | 531,827 | 15 |
| பண்டாரவளை/ பூனகல்ல | 3,289,655 | 2,520,658 | 768,997 | 31 |
| மல்வத்தை/ வெலிமட | 3,378,505 | 2,858,823 | 519,682 | 18 |
| தெமோதர/ காலிஎல/ பதுளை | 9,996,299 | 9,543,215 | 453,085 | 5 |
| எல்ல/நமுனுகல | 1,904,508 | 1,737,631 | 166,877 | 10 |
| பசற/லுனுகல | 3,663,468 | 3,011,099 | 652,369 | 22 |
| மதுள்சிமா | 3,486,843 | 3,657,828 | (170,985) | (5) |
| மொத்தம் - ஊவா | 30,452,384 | 27,745,683 | 2,706,701 | 10 |
| **தாழ்நிலங்கள்** | | | | |
| தெனியாய | 13,691,965 | 12,942,346 | 749,619 | 6 |
| காலி | 42,869,465 | 37,496,469 | 5,372,997 | 14 |
| களுத்துறை | 18,953,545 | 18,444,550 | 508,995 | 3 |
| கேகாலை | 7,071,361 | 6,439,832 | 631,528 | 10 |
| களனிப் பள்ளத்தாக்கு | 8,231,949 | 7,310,799 | 921,150 | 13 |
| கண்டி/ மாத்தளை/ குருநாகல் | 3,889,004 | 3,829,102 | 59,902 | 2 |
| மாத்தறை | 14,157,203 | 11,941,807 | 2,215,396 | 19 |
| மொறவக்க | 6,292,262 | 5,620,667 | 671,595 | 12 |
| இரத்தினபுரி | 48,328,640 | 47,734,905 | 593,735 | 1 |
| பலாங்கொடை | 5,177,128 | 4,977,985 | 199,143 | 4 |
| மொத்தத் தாழ்நிலம் | 168,662,520 | 156,738,462 | 11,924,059 | 8 |
| **மொத்தம்** | 299,488,422 | 278,851,765 | 20,636,656 | 7 |

*திருத்தியமைக்கப்பட்டது; மூலம்: இலங்கை தேயிலை சபை

# மாவட்ட மட்டத்திலான தேயிலை உற்பத்திகள்

மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட வருடத்தில், அதியுயர் மேல்நில தேயிலை உற்பத்தியானது நுவெரேலியா மாவட்டத்திலும், அதியுயர் தாழ்நில உற்பத்தியானது இரத்தினபுரி மாவட்டத்திலும் பதிவாகின. இரண்டு மாவட்டங்களும் தேசிய தேயிலை உற்பத்தியில் முறையே, 15 % மற்றும் 22 % பங்களிப்புச் செலுத்துகின்றன.

அனைத்து மூன்று உயரங்களிளுமான தேயிலை உற்பத்தியில் இரத்தினபுரி மாவட்டம் முன்னிலை வகிப்பதுடன், ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் மிகக்குறைவான தேயிலை உற்பத்திகள் பதிவாகின.

அட்டவணை 3.3: மாவட்ட மட்டத்திலான தேயிலை உற்பத்தி (கி.கிராம்)

| நிர்வாக மாவட்டம் | உயர் | நடுத்தரம் | குறைவு | மொத்தம் |
|---|---|---|---|---|
| பதுளை | 18,100,469 | 12,923,786 | - | 31,024,255 |
| கொழும்பு | - | - | 1,185,515 | 1,185,515 |
| காலி | - | - | 42,450,978 | 42,450,978 |
| ஹம்பாந்தோட்டை | - | - | 205,138 | 205,138 |
| களுத்துறை | - | - | 18,068,135 | 18,068,135 |
| கண்டி | 1,014,151 | 20,189,858 | 11,321,960 | 32,525,969 |
| கேகாலை | - | 329,012 | 10,545,900 | 10,874,912 |
| மாத்தளை | - | 1,632,628 | 472,865 | 2,105,493 |
| மாத்தறை | - | 99,465 | 34,525,329 | 34,624,794 |
| மொனராகலை | - | 9 | - | 9 |
| நுவரெலியா | 46,211,951 | 13,399,740 | 848,505 | 60,460,196 |
| இரத்தினபுரி | - | 2,411,218 | 63,551,811 | 65,963,028 |
| மொத்தம் | 65,326,571 | 50,985,716 | 183,176,135 | 299,488,422 |

மூலம்: இலங்கை தேயிலை சபை

# பச்சை இலை சேகரிப்பு முறையின் அடிப்படையிலான உற்பத்திப் பகுப்பாய்வு

தேயிலைத் தொழிற்சாலைகள், தொழிற்பாட்டுக்குத் தேவையான தேயிலைக் கொழுந்துகளை, தமக்குரிய தேயிலைத் தோட்டங்கள் அல்லது முகவர்களினூடாக பெற்றுக்கொள்கின்றனர். நிறைவுற்ற 2021 ஆம் ஆண்டுக்கான, மாவட்ட மட்டத்திலான பச்சை இலை சேகரிப்புக்கள் தொடர்பான விபரங்கள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. தயாரிக்கப்பட்ட தேயிலை அளவுகளை, தொழிற்சாலைகளில் பயன்படுத்தும் 4.65 எனும் நிலையான விகிதத்தினால் பெருக்குவதனூடாக பச்சை தேயிலை இலைகளின் அளவுகள் கிடைக்கப்பெறுகின்றன.

அட்டவணை 3.4. மாவட்ட மட்டத்திலான பச்சைத் தேயிலை உற்பத்திகள் (கிலோகிராம்)

| நிர்வாக மாவட்டம் | உயர் | நடுத்தரம் | குறைவு | மொத்தம் |
|---|---|---|---|---|
| பதுளை | 84,167,182 | 60,095,604 | - | 144,262,786 |
| கொழும்பு | - | - | 5,512,645 | 5,512,645 |
| காலி | - | - | 197,397,050 | 197,397,050 |
| ஹம்பாந்தோட்டை | - | - | 953,892 | 953,892 |
| களுத்துறை | - | - | 84,016,827 | 84,016,827 |
| கண்டி | 4,715,802 | 93,882,840 | 52,647,113 | 151,245,755 |
| கேகாலை | - | 1,529,906 | 49,038,433 | 50,568,339 |
| மாத்தளை | - | 7,591,722 | 2,198,822 | 9,790,544 |
| மாத்தறை | - | 462,512 | 160,542,778 | 161,005,291 |
| மொனராகலை | - | 42 | - | 42 |
| நுவரெலியா | 214,885,571 | 62,308,793 | 3,945,546 | 281,139,910 |
| இரத்தினபுரி | - | 11,212,161 | 295,515,921 | 306,728,082 |
| மொத்தம் | 303,768,555 | 237,083,580 | 851,769,026 | 1,392,621,161 |

மூலம்: இலங்கை சுங்கம்

# செயலாக்க முறைமையின் அடிப்படையிலான உற்பத்தி ஆய்வுகள்

## கறுப்பு மற்றும் பச்சைத்தேயிலை உற்பத்தி

நிறைவுற்ற 2021 ஆம் ஆண்டில், புராதன தேயிலை உற்பத்திகள் மற்றும் CTC தேயிலை உற்பத்திகள் முறையே, 7% மற்றும் 9% ஆல் அதிகரித்துள்ளன. மீளாய்வு வருடத்தில், ஒட்டுமொத்த கறுப்புத்தேயிலையின் உற்பத்தி 20 மில்லியன் கிலோகிராம்களினால் (7%) அதிகரித்துள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், பச்சைத் தேயிலை உற்பத்தியானது 27% ஆல் அதிகரித்துள்ளது.

## உடனடித் தேயிலை மற்றும் உயிரியல் தேயிலை உற்பத்தி

கடந்த 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டு உடனடித் தேயிலையின் உற்பத்தியானது 575,482 கிலோகிராம்களினால் அதிரித்துள்ளதுடன், உயிரியல் தேயிலை உற்பத்தியானது 15 மெற்றிக்தொன்களினால் வீழ்ச்சியடைந்துள்ளது. அத்துடன், தேயிலைத் தொழிற்சாலைகளில் பதியப்பட்ட தேயிலைகளில் 99% மான உடனடித் தேயிலைகள் மலைநாட்டு மேல்நில உற்பத்திகளை அடிப்படையாக்கொண்டவையாகும்.

## உடன் தயாரிப்புத் தேயிலை உற்பத்திக்கான செலவுகள்

உற்பத்தித்திறன் மற்றும் உற்பத்திக்கான செலவு (COP) ஆகியன ஒன்றுடனொன்று தொடர்புபட்டுள்ளதுடன், உற்பத்திச்செலவுகள் தொடர்ச்சியாக அதிகரித்துக்கொண்டே செல்லும் நிலையானது, பெருந்தோட்டத் தொழிற்துறைக்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது. தேயிலை உற்பத்தி அமைப்புக்கு அதிகளவான தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுவதனால், தொழிலாளர் உற்பத்தித்திறன் COP உடன் நெருகிங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளது. பிரதான தேயிலை உற்பத்தி நாடுகளில், இலங்கை அதியுயர் COP இனைக் கொண்டுள்ளது. இது, சர்வதேச அரங்கில், நாட்டின் போட்டித்திறனில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது.

கடந்த சில தசாப்தங்களாக, உருவாக்கப்பட்ட தேயிலையின், கிலோகிராமுக்கான உற்பத்திச்செலவு மிக வெகுவாக அதிகரித்தது. தொழிலாளர்களுக்கான செலவுகள் மற்றும் உள்ளீடுகளுக்கான அதிக செலவீனங்கள் ஆகியன உற்பத்திச்செலவுகளில் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. கணக்கெடுப்புகள் மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தரவுகளுக்கமைய, 2020/2021 இல், கிலோகிரமுக்கான உற்பத்திச்செலவு ரூபா 618.49 ஆக அமைந்ததுடன், இது கடந்த 2019/2020 க்கு எதிராக 13% அதிகரிப்பைக் காட்டுகின்றது.

*குறிப்பு: நாட்டில் நிலவிய கோவிட் நிலைமைகள் காரணமாக COP வினாப்பத்திரங்களுக்குரிய தகவல்களை திரட்டமுடியாத நிலை ஏற்பட்டது. ஆகவே, 2019/2020 ஆம் ஆண்டுகளுக்குரிய COP ஆனது கணிக்கப்பட்ட தரவுகளினால் காட்டப்பட்டுள்ளது.*

வரைபு 3.3: தயாரிக்கப்பட்ட தேயிலையின் கிலோகிராமுக்கான மொத்தச்செலவு




மூலம்: கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

# தேயிலை விற்பனைகள்

தேயிலை ஏலத்தில் பதியப்பட்ட தேறிய விற்பனை சராசரிகளை ஒப்பிடுகையில், 2021 இல் வருடாந்த சராசரியாக கிலோகிராமுக்கு 615.44 ரூபாவாக அமைந்ததுடன் (குறைந்தது 587 Rs/kg, அதியுயர் 654 Rs/kg) முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 13 Rs/kg ஆல் குறைவடைந்துள்ளது (628.21 Rs/kg).

அதியுயர் விற்பனை சராசரியானது தாழ்வாக தேயிலை வளரும் பகுதிகளில் 644 Rs./kg ஆகப் பதிவாகியது. நிறைவுற்ற, 2021 இல் வருடாந்த தேயிலை விற்பனையின் அளவு 296 மில்லியன் கிலோகிராம்களாக அமைந்ததுடன், இது 2020 இலான மீளாய்வின் போது, 268.2 மில்லியன் கிலோகிராம்களாக, 28 மில்லியன் கிலோகிராம்களினால் (10%) தனியார், அரச மற்றும் நேரடி விற்பனைகளில் வீழ்ச்சியடைந்திருந்தது.

ஜனவரி, 2020 உடன் ஒப்பிடுகையில், ஜனவரி, 2021 இல், தேயிலை விற்பனை சராசரி 645.02Rs/kg ஆக அமைந்ததுடன், 58 Rs/kg அதிகரிப்பைக்காட்டுகின்றது. நிறைவுற்ற 2021 இல், முதல் ஐந்து மாதங்களில் விற்பனை சராசரிகள் ரூபா 600 ஆக அமைந்ததுடன், பின்னர் படிப்படியாக குறைவடைந்தது. இறுதிக்காலாண்டில் சிறியளவு அதிகரிப்பைக் காட்டியது.

## விற்பனைகளின் முறை

தேயிலைத் தொழிற்சாலைகளில் பிரதானமான விற்பனை முறையாக பொதுமக்களுக்கான ஏலங்கள் திகழ்கின்றன. நிறைவுற்ற 2021 ஆம் ஆண்டில், கொழும்பு தேயிலை ஏலத்தினூடாக 287 மில்லியன் கிலோகிராம் தேயிலை விற்பனையாகியது. இதில், தனியார் விற்பனைகளினூடாக, 8 மில்லியன் கிலோகிராம் தேயிலையும், நேரடி விற்பனைகளினூடாக மிகுதியான ஏறக்குறைய ஒரு மில்லியன் கிலோகிராம் தேயிலைகளும் விற்பனையாகின.

## கொழும்பு தேயிலை ஏலங்கள்

கொழும்பு தேயிலை ஏலமானது, கொழும்பு தேயிலை வர்த்தக சங்கத்தின் கீழ், சிலோன் வர்த்தக அமைப்பினூடாக நடாத்தப்படுகின்றது. இதனடிப்படையில், 2021 இல் 50 ஏலங்கள் நடாத்தப்பட்டன. நிறைவுற்ற 2021 ஆம் ஆண்டில், கொழும்பு ஏலத்திலான பொது ஏலத்தில், 25 மில்லியன் கிலோகிராம் (10 %) அதிகரிப்பைக்காட்டியதுடன், கிலோகிராமுக்கான விலையானது கிலோகிராமுக்கு ரூபா 13 ஆக வீழ்ச்சியடைந்திருந்தது

## உயரங்களின் அடிப்படையில் விற்பனைகள்

உயரங்களின் அடிப்படையிலான அனைத்து தேயிலை விற்பனைகளும் பகுப்பாய்வுகள் அட்டவணை 2.6 இல் காட்டப்பட்டுள்ளன. அதியுயர் உயரங்களில், ரூபா 6 (1%) எனும் சிறிய வளர்ச்சிகள் பதிவாகியதுடன், நடுத்தரம் மற்றும் குறைவான உயரங்களில் அலகு விலைகளில் முறையே, ரூபா 3 மற்றும் ரூபா 22 வீழ்ச்சியை அவதானிக்க முடிகின்றது. எவ்வாறாயினும், ஒட்டுமொத்தமான தேயிலை விற்பனை விலைகள், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 13 (2%) னால் வீழ்ச்சியடைந்திருந்தன.

அட்டவணை 3.5 : உயரங்களின் அடிப்படையில் விற்பனைகள்

| Elevation | Quantity (Mn.kg.) | | | | அலகுக்கான விலை (ரூபா/கி.கிராம்) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2020 | 2021 | மாற்றம் | % | 2020 | 2021 | மாற்றம் | % |
| உயர் | 56.46 | 63.52 | 7.06 | 12.50 | 580.9 | 587.13 | 6 | 1 |
| நடுத்தரம் | 47.56 | 52.34 | 4.78 | 10.05 | 554.28 | 550.8 | (3) | (1) |
| குறைவு | 164.21 | 179.94 | 15.73 | 9.58 | 665.88 | 644.23 | (22) | (3) |
| மொத்த விற்பனைகள் | 268.24 | 295.79 | 27.55 | 10.27 | 628.21 | 615.44 | (13) | (2) |

மூலம்: விற்பனை அறிக்கை - உயரங்களின் அடிப்படையில் விற்பனைகள் - இலங்கை தேயிலை சபை

# தேயிலை ஏற்றுமதிகள்

மீளாய்வு வருடத்துக்கான, தேயிலை ஏற்றுமதிகள் (மீள் ஏற்றுமதியுடன்) 286 மில்லியன் கிலோகிராம்களாக பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், கடந்த 2020 ஆம் வருடத்துடன் (266 மில்லியன் கிலோகிராம்) ஒப்பிடுகையில் 20 மில்லியன் கிலோகிராம் வளர்ச்சியைக் காட்டுவதுடன், நிறைவுற்ற வருடத்தில் மொத்த வருமானமாக ரூபா 263 பில்லியன் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், கடந்த 2020 ஆம் வருடத்தின் ஜனவரி தொடக்கம் திசம்பர் வரையான காலப்பகுதியிலான வருமானமானது (ரூபா 230 பில்லியன்) ரூபா 33 மில்லியன்னகளினால் அதிகரித்திருந்தது. நிறைவுற்ற 2021 இல், சராசரி வருடாந்த அலகு FOB விலை, கிலோகிராமுக்கு ரூபா 921.23 ஆக அமைந்ததுடன் இது 2020 ஆம் ஆண்டில் கிலோகிராமுக்கு ரூபா 866.70 ஆக அமைந்ததுடன், ரூபா 55 அதிகரிப்பைக் காட்டுகின்றது. சர்வதேச தேயிலைச் சந்தையில், கொள்ளவுகளின் அடிப்படையில் இலங்கை மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளதுடன், மூன்றாவது வருமானம் ஈட்டும் நாடாகவும் விளங்குகின்றது. இது சர்வதேச சந்தைக்கு அதியுயர் - தரத்திலான தேயிலையை வழங்குவதில் விருத்தியடையும் திறனைக் காட்டுகின்றது.

போட்டியாளர்களிடமிருந்தான கடுமையான போட்டித்தன்மையினால், நாட்டின் போட்டி நிலையில் மிகவும் மோசமாக பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் தேயிலைக்கான அதிக உற்பத்திச்செலவு மற்றும் மந்தமான விளைச்சலினால் இந்நிலைமை மேலும் அதிகரித்துள்ளது. இதே நிலையில், புராதன தேயிலையில் நாட்டின் தொடர்ச்சியான தங்கியிருப்புகள் உள்ளமையினால், நுகர்வோர் மத்தியில் வேகமாக மாறிவரும் விருப்பங்களுக்கிடையில் தொடர்ந்தும் CTC தேயிலைகளுக்கான சந்தைப்பங்குகளை அரிவடையச் செய்வதாக அமையக்கூடும்.

வரைபு 3.4: மாதாந்த தேயிலை ஏற்றுமதி அளவுகள் மற்றும் FOB விலைகள்



வரைபு 3.6: வருடாந்த தேயிலை ஏற்றுமதிகள் - 2021

